# வள்ளுவர் தந்த இன்பம்

—இன்பத்துப்பால்—

வள்ளுவர் பண்ணை

# வள்ளுவர் தந்த இன்பம்

ராய. சொக்கலிங்கன்

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

வள்ளுவர் பண்ணை
1/72. பிராட்வே - சென்னை.1

வெளியீடு 1

முதற் பதிப்பு—1947
இரண்டாம் பதிப்பு—1958
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூபாய் 2-50

மேலா பிரிண்டர்ஸ்
10, மலையப்பன் தெரு,
சென்னை-1.

## பதிப்புரை

'தொட்டனைத் தூறும் மணற்கேணியாய்'—மூழ்குந்தொறும் மூழ்குந்தொறும் கைநிறையக் கிடைக்கக்கூடிய, அரிய பல முத்துக்களைத் தன்னகத்தே கொண்டதாய்—தமிழுலகின்நாகரிகத்தை விளக்கும் தனிப்பெருந் திருமறையாய்—விளங்குவது, வள்ளுவன்தந்த தெள்ளுதமிழ்த் திருக்குறள். எக்காலத்திற்கும்—எக்காலத்தினருக்கும்—எந்நாட்டினருக்கும்—எவ்வினத்தினர்க்கும்—எடுக்க எடுக்கக் குறையாக் கருத்துக் கருவூலமாய் விளங்கும் முப்பாலைப்போல, உலகில் எந்நூலுமில்லை.

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன் கண், இல்லாத எப்பொருளும் இல்லை" எனச் சங்கச் சான்றோர் பலராலும் பாராட்டப்பெறும் சிறப்பு வாய்ந்தது திருக்குறள்.

உலக இலக்கியங்கள் அனைத்தும் உரைப்பன காதலும் போருமே. தமிழிலக்கியங்கள் அவ்வகையில் தலைசிறந்து நிற்கின்றன. அறம், பொருள், இன்பம் எனப் பொதுவாகக் கூறப்படினும், அவை அகத்தும் புறத்தும் அடங்கிவிடும். இம்முறையில் நோக்கின், தமிழிலக்கியங்களில் பெரும்பாலன அகத்தைப்பற்றியே—காதலைக் குறித்தே—கூறுகின்றமையைக் காணலாம்.

வள்ளுவரும் அறத்தையும் பொருளையும் முதற்கண் உணர்த்தி, அவற்றால் அடையும் இன்பத்தைப் பின்னர்க் கூறினர். அவ்வின்பப்பாலை—

காமத்துப்பாலை—'வள்ளுவர் தந்த இன்பம்' எனத் தனி நூலாக்கி வழங்கியுள்ளார் ஆசிரியர் இராய. சொக்கலிங்கனார். திருக்குறளை விளக்க எழுந்த நூல்கள் எண்ணத் தொலையா. இதனை உலக வியப்புக்களில் ஒன்று என்றுகூடச் சொல்லலாம். அத்துணை அளவிற்குத் திருக் குறளைப்பற்றிய நூல்கள் பல எழுந்துள்ளன. திருக்குறளும், எழுதுவாரின் கைவண்ணத்திற் கேற்ப 'அமுதசுரபி' யென விளங்குகின்றது.

அன்பர் இராய. சொக்கலிங்கனாரும், தமிழ் மக்களுக்குத் திருக்குறள் அமுதில் ஒரு பகுதியைச் சுவைபடப் படைத்துள்ளார். இவரால் எழுதப் பெற்ற 'வள்ளுவர் தந்த இன்பம்' என்னும் இந் நூல், இரண்டாம் பதிப்பாக வெளிவருவதி லிருந்தே, ஆசிரியரின் வெற்றியை அறிந்து கொள்ளலாம்.

'வள்ளுவர் பண்ணை' என்பதற் கேற்ப, 'வள்ளுவர் தந்த இன்பம்' என்னும் இந்நூலை, முதல் வெளியீடாக வெளியிடுவதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றோம். இதுபோன்ற நூல்களை வெளியிடத் தண்டமிழ்ச் சான்றோர்கள் துணைபுரிவர் என நம்புகின்றோம். 'வாழ்க தமிழ்'! 'வளர்க வள்ளுவன் நெறி'!

இங்ஙனம்,

ந. பழநியப்பன்.

*10-4-'58.*

# உள்ளுறை

UNIVERSITY EXTENSION LIBRARY MADRAS


| | | |
|---|---|---|
| | வள்ளுவர் தந்த இன்பம் | 9 |
| 1. | தகை அணங்கு உறுத்தல் | 13 |
| 2. | குறிப்பு அறிதல் | 20 |
| 3. | புணர்ச்சி மகிழ்தல | 26 |
| 4. | நலம் புனைந்து உரைத்தல் | 32 |
| 5. | காதல் சிறப்பு உரைத்தல் | 38 |
| 6. | நாணுத் துறவு உரைத்தல் | 44 |
| 7. | அலர் அறிவு உறுத்தல் | 50 |
| 8. | பிரிவு ஆற்ருமை | 55 |
| 9. | படர் மெலிந்து இரங்கல் | 61 |
| 10. | கண் விதுப்பு அழிதல் | 67 |
| 11. | பசப்பு உறு பருவரல் | 72 |
| 12. | தனிப்படர் மிகுதி | 77 |
| 13. | நினைந்து அவர் புலம்பல் | 82 |
| 14. | கனவு நிலை உரைத்தல் | 87 |
| 15. | பொழுது கண்டு இரங்கல் | 92 |
| 16. | உறுப்பு நலன் அழிதல் | 97 |
| 17. | நெஞ்சொடு கிளத்தல் | 102 |
| 18. | நிறை அழிதல் | 108 |
| 19. | அவர் வயின் விதும்பல் | 113 |
| 20. | குறிப்பு அறிவுறுத்தல் | 119 |
| 21. | புணர்ச்சி விதும்பல் | 123 |
| 22. | நெஞ்சொடு புலத்தல் | 127 |
| 23. | புலவி | 131 |
| 24. | புலவி நுணுக்கம் | 135 |
| 25. | ஊடல் உவகை | 140 |
| | முதல் குறிப்பு அகராதி | 144 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# வள்ளுவர் தந்த இன்பம்

தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்தவர் வள்ளுவர் என்பதில் இரண்டு கருத்து இல்லை. பண்டைத் தமிழ் இலக்கிய ஆசிரியருள்ளே இலக்கிய உலகில் எல்லா நாட்டாராலும் அறியப்படுபவர் திருவள்ளுவர்.

என்றும் உள தென் தமிழ்-தழற் சுடர் நுதற் கடவுள் தந்த தமிழ் - கன்னித் தமிழ் • ஒண் தீந்தமிழ் சிறப்புடையது என்று உலகம் மதிப்பதற்கு முதற் காரணமாக நிற்பது திருக்குறள் நூல்.

திருக்குறள் செய்த வள்ளுவரைப் பெற்றதால் தமிழ் மொழி உயர்ந்தது என்று சொன்னால் அதனை அறிஞர் மறுக்குமாறில்லை. வள்ளுவன் அறம் உலகத்திற்கெல்லாம் உரியது. அவ்வறம், வடவேங்கடம் தென் குமரிக் கிடையே உள்ள தமிழ் முழங்கும் நல்நிலமாகிய சிற்றெல்லைக்குள் அடங்குவதொன்றன்று. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது அருமைத் தமிழ் நாடு. வள்ளுவர் குறள் தோன்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. அவர்

காலத்தைத் திட்டமாக அறிவிக்கும் கருவியில்லை. அன்னார் சமயம், வகுப்பு, வாழ்க்கை வரலாறு முதலியவை நமக்குத் தெரியா. அவற்றைத் தெரிந்துகொள்ள முயல்வதில் பயன் ஏற்படும் என்று தோன்றவில்லை. அப்பெரியாரைப் பற்றி இது போது வழங்கப்பெறும் கட்டுக் கதைகளெல்லாம் நம்பத் தகாதவை.

திருவள்ளுவர் எந்தச் சமயமானாலென்? அவர் எந்த வகுப்பானால் நமக்கென்? அவர் பிறப்பில் சைவராயினும் ஆகுக! வைணவராயிருப்பினும் இருக்க! சமணராயினும் அன்றிப் பிற எவராயினும் ஆகட்டும். அன்னார், பிறப்பில் பார்ப்பாராயினும் பறையரேயாயினும் நமக்கு ஒரே மாதிரி தான். திருவள்ளுவர், சாதி சமயச் சுழியில் பட்டுக் கரை யேற மாட்டாது தடுமாறும் சிறு தகையினரல்லர்; அப் புலவர் பெருமான், வகுப்புக்கும் மதத்துக்கும் அப்பாற் பட்டவர்.

திருவள்ளுவரை இன்று நமக்குக் காட்டும் கருவி ஒன்றேயொன்றுதான். அக்கருவி ஒப்புயர்வற்றது; அது, தமிழனைத் தவிர எவனுக்கும் கிடைக்கமுடியாத எய்ப்பில் வைப்பு; அதுதான் திருக்குறள் என்பது. திருக்குறளை, அதனைப் பெற்ற மொழிக்குரிய தமிழனாகப் பிறந்தே அனு பவித்தல் வேண்டும்; அல்லது தமிழ் மொழியை நன்கு முறையோடு கற்றுதல் வேண்டும். வேறு மொழியில் அதன் கருத்தை ஒருவாறு உணரலாமே யொழிய அதில் பொதிந்து கிடக்கும் சுவையை முற்றும் பருகுமாறில்லை.

அன்ன பெருமை வாய்ந்த திருக்குறள், அதனை ஆக்கிய ஆசிரியர் வரலாறு ஏதும் கூறிலது. அந்நூலின் நோக்கம் அஃதன்று. அந்நூல், அறம் அருளுகின்றது; பொருள் புகலுகின்றது; இன்பம் இயம்புகின்றது. பலரும் பகர்வது போல் ஆசிரியர் வள்ளுவனார் வாயில் அகப்படாத பொருள் அரிது.

திருவள்ளுவர் கடவுட்கொள்கை கொண்டவர். ஆனால், அவர் கொண்ட கடவுள் எச்சமயத்துள்ளும் அடங்காதது.

திருவள்ளுவரின் கடவுளுக்குத் திருநீறுமில்லை ; திருமண்ணு மில்லை ; மேகாபியுமில்லை ; பிறிதுமில்லை. அவருடைய கடவுள் உலகிலுள்ள எல்லோருக்கும் பொதுவானது.

ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை யேகினுன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறி வாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அற வாழியந்தணன், எண்குணத்தான் என்பன, வள்ளுவர், தாம் கண்ட கடவுளுக்குச் சூட்டும் திருப்பெயர்கள். வள்ளுவரின் கடவுள் ஒரு குறுகிய எல்லைக் கோட்டுக்குள் அடங்க மாட்டார். அவர், எல்லாம் வல்லவர் ; எங்கும் நிறைந்தவர் ; யாவும் ஆனவர்.

வள்ளுவர் குறளுக்கு முப்பால் என்று ஒரு பெயர் உண்டு. காரணம் : அறம்—பொருள்—இன்பம் என்ற மூன்று பகுப்புக்களை அக்குறள் கொண்டமையினுலேயே. வள்ளுவரின் அறத்துப்பால், 'உலகிலுள்ள அறநூல்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவது ; அவர் தம் பொருட்பால், அர்த்தசாஸ்திரம் அனைத்திற்கும் மணிமுடி யாக மிளிர்வது ; அப்பெருமான் நல்கிய காமத்துப்பால், " இவ்உலகத் தலைமையின்பம் " என்று கவியரசர் கூறிய இல் இன்பத்தை நுகர்வார், வையத்து வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து, இன்பக் கடலாடப் பெருந்துணை புரிய வல்லது.

தமிழ்க் காதலர்கட்கு வள்ளுவர் தந்த இன்பத்தை விரித்துரைப்பதே இந்நூல். 'காமத்துப்பால் திருவள்ளுவர் செய்ததல்ல ' என்று சிலர் கூறுகின்றனர். அதற்குக் காரணம் அறிவுக்குப் பொருத்தமாக ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வளவு பெரியவர் காமத்துப்பால் செய்திருக்க மாட்டார் என்று கருதப்படுவதே காரணம். காமத்துப்பால் என்ற பெயரைக் கேட்டு மருள வேண்டுவதில்லை. அது கூறும் பொருள்கள், மிக நுணுக்கமும் அருமையும் பெருமையும் இனிமையும் கொண்டவை. அறமும் பொருளும் வகுத்த வள்ளுவர், 'காமத்துப்பால்' என்ற இன்பக்

களஞ்சியத்தைத் தமிழ் நாட்டிற்கு நல்கி நுண் அறிவு எல்லையின் உச்சிக்கு உயர்ந்துவிட்டார்.

வள்ளுவர் தந்த இன்பம், இருபத்தைந்து அதிகாரங்களில் அடங்கியிருக்கிறது. ‘தகையணங்கு உறுத்தல்’ தொட்டு ‘ஊடலுவகை’ இறுதியாக இருநூற்றைம்பது அரிய குறள்களில் அவ் இன்பம் பரவிக் கிடக்கின்றது. தமிழ் நாட்டார் அந்நாளில் மேற்கொண்ட காதல் மண முறையைத் தெற்றென விளக்குவது வள்ளுவரின் இன்பப் பால். ஒருவனும் ஒருத்தியும் வகுப்பு மத வேறுபாடுகளெல்லாம் கடந்து, காமமுற்றுக் காதலித்துக் களவியலில் ஒழுகிக் கற்பியலில் நின்று கண்ட நல் இன்பத்தை நாகரிக முறையில் இன்றைய ஆணும் பெண்ணும் உணர்ந்து வாழ்வதற்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது வள்ளுவர் தந்த இன்பம்.

# களவியல்

## 1. தகை அணங்கு உறுத்தல்

வள்ளுவர் நூல் மொத்தம் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள். அதில் காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்கள். காமத்துப்பாலை இருகூறுகப் பிரித்திருக்கின்ருர். முன்னையது களவியல்; பின்னையது கற்பியல். களவியல் ஏழு அதிகாரங்கள்; கற்பியல் பதினெட்டு அதிகாரங்கள். 'களவியல்' என்பது தாய் தந்தையர், உறவினர், மற்றையோர் ஆகிய எவர் துணையுமின்றி, ஒருவரையொருவர் விரும்பிய ஆணும் பெண்ணும் காதலித்துப் பொருந்துவதொன்று.

களவியல் ஏழு அதிகாரங்களும் தொடர்ந்து அடுக்கடுக்காக நயம்பட வைத்திருக்கின்ருர் ஆசிரியர் வள்ளுவர். அவற்றின் பொருத்தம் மிகவும் சுவை பயப்பதாகும். அக்களவியலில் முதல் அதிகாரம் 'தகையணங்குறுத்தல்' என்பது. 'தகையணங்குறுத்தல்' போன்ற சொற்ருெடர்கள் விளங்கவில்லை யெனச் சிலர் நினைக்கலாம். இத்தகைய தொடர்களைப் பிரித்து எளிய நடையிற் காட்டினுல் அநேகமாக எல்லோருக்கும் விளங்கும் என்றே கருதுகிறேன். திருக்குறள் போன்ற பழைய அரிய நூல்களின் மாண்பை எளிதில் அனைவர்க்கும் உணர்த்த வேண்டுமென்பதே சிறியேன் ஆசை. எனவே, இயன்றவரை எளிய நடையிலேயே

எழுதுகின்றேன். முழுப்பயன் பெறுவேனோ என்பது நடைமுறையில்தான் தெரிதல் வேண்டும்.

தகை - அணங்கு - உறுத்தல் என்ற மூன்று சொற்கள் கொண்ட தொடர் அது. இதனை 'அணங்கு - தகை - உறுத்தல்' என்று மாற்றிக் கொண்டால் பொருள் விளங்கிக்கொள்வது கொஞ்சம் எளிதாகும். 'அணங்கு' என்றால் பெண், 'தகை' யென்பது அழகு முதலியன, 'உறுத்தல்' வருத்தத்தை உண்டாக்குதல்; எனவே இச்சொற்றொடர், 'மங்கையின் அழகு முதலியன வருத்தத்தைச் செய்தல்' என்ற பொருள் தந்து நிற்கிறது. மேலும், இவ்வதிகாரப் பெயர், நிறைந்த பொருளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. 'பெண்ணின் அழகு யாருக்கு வருத்தந் தருகிறது? அப்பெண் யார்? அது ஏன் வருத்துகிறது?' என்ற வினாக்களெல்லாம் எழுகின்றன. இவற்றிற்குரிய விடைகள் முழுதும் அவ் அரிய சொற்றொடர்க்குள் தொக்கி நிற்கின்றன.

வள்ளுவனார், தமது காமத்துப்பாலை ஒரு நாடகம்போல் ஆக்கியிருக்கின்றார். தமது குறளின் மற்றைப் பகுதிகளைப் போல, தாம் கூறுவதாக இக்காமத்துப்பால் இல்லை. இப்பகுதிப் பாக்களெல்லாம் பிறர் வாயிலாகப் பாடப்படுகின்றன. இவைகளே துறைப்பாக்கள் என்பன. களவியல் என்பது 'காதலர் சேர்க்கை.' காதலர் சேர்தற்கு முதலாவது நிகழ்ச்சி அவ்விருவரின் சந்திப்பே யல்லவா? சோலையிலே ஒரு பருவமங்கை தனித்து நிற்கின்றாள்; ஆண்டு ஓர் இளைஞன் அவ்வணங்கைக் காண்கின்றான்; அன்னாள் அழகு அவ் இளைஞனை வருத்துகின்றது. இதுதான் 'தகையணங் குறுத்தல்' என்பது. அம்மெல்லியலாளின் பேரெழிலால் தாக்கப்பெற்ற வாலிபன், அம்மங்கை நல்லாளைப் பற்றி எண்ணமிடுகின்றான். அவன் உள்ளப் பெருக்கம் ஊற்றெடுத்தோடும் அழகே இவ்வதிகாரப் பாக்கள் பத்தும். பத்துப்பாக்களும் விலையிலா மணிகளே யென்பதில் ஐயமில்லை.

காமத்துப்பாலின் முதல் இயலாகிய களவியலில், முதலதிகாரமாகிய தகையணங் குறுத்தலில், முதற்பாட்டு மிகவும் கம்பீரமாக ஓடுகின்றது. நாடக மேடையில் அரங்கத்தே நின்றுகொண்டிருக்கும் அழகிய பெண்ணுருவைக் காதல்கொண்ட, தேர்ந்த ஆண் நடிகன் எவ்வாறு பரபரப்போடு அலங்கரிப்பான் என்பதை இப்பாட்டுச் சித்திரம் தெள்ளிதிற் காட்டுகின்றது. தேன் விரிக்கும் பூஞ்சோலை நடுவே நிற்கும் மயிலனைய மங்கையின் கட்டழகால் சொக்கிய தலைவன்,

**அணங்குகோல்! ஆய்மயில் கோல்லோ ! கனங்குழை**
**மாதர்கோல் ! மாலும் என் நேஞ்சு.** *1*

என்று மருள்கின்றான். கனங்குழை - கனத்த காதணியை உடைய இப்பெண், (காதில் கனமான ஆபரணத்தை அணிதல் பெண்கட்கு அழகும் சிறப்பும் எனப் பண்டைக்காலத்தில் கருதப்பட்டதாகத் தெரிகிறது; அது பற்றியே வள்ளுவனார் கனங்குழை என இயம்புகின்றார். இன்றும், பெரிதும் திருநெல்வேலி மாவட்டப் பழைய தமிழ்மக்கள் நமக்குக் கனங்குழையை நினைப்பூட்டுகின்றனரன்றோ) அணங்கு கொல்! தெய்வப்பெண்ணோ? அன்றி, ஆய்மயில் கொல்! ஆராய்ந்தெடுக்கப் பெற்ற மயிலோ? அல்லது, மாதர்கொல்! ஒரு மானுடப் பெண்தானோ? என் நெஞ்சு - என் மனமானது, மாலும் - மயங்கி நிற்கின்றதே; என்று கூறி அவள் வயத்தே கண்ணைப் பறிகொடுத்துவிட்டான் ஆடவன்.

பிறகு நடந்ததென்ன? இவனது பார்வையை இடைமறித்து ஒரு வெட்டு வெட்டிவிட்டது, கொல் படையாகிய அம்மாதரார் மருண்ட விழிகள். உடனே எண்ணமிடுகின்றான் இளைஞன். என்ன வியப்பு இது!

**நோக்கினாள் நோக்கேதிர் நோக்குதல் தாக்கணங்கு**
**தானைக்கோண் டன்ன துடைத்து.** *2*

நோக்கினுள் - அழகினையுடையாளாகிய இவள், நோக்கு - எனது பார்வைக்கு, எதிர்நோக்குதல் - எதிராகத் தனது விழிகளைச் செலுத்துதல், தாக்கு அணங்கு - இயல்பாகவே தாக்கி வருத்தும் ஒரு தெய்வப்பெண், தானை - கொண்டு - அன்னது - உடைத்து, மேலும் தாக்குதற்குப் படையை யும் கொண்டு வருவதுபோல இருக்கிறதே; என்று கண் ஆகிய படையினுல் தான் உடைந்த வகையை உரைக்கின் ருன். ஆம்! முன்னரே அப்பாவையின் அழகு கண்டு வருந்திக் கண்ணைப் பிற பொருளில் செல்லவிடாது, கருத் தழிந்த அவனுக்கு அவள் கொல்படையான கண்ணேறு பொறுப்பதெப்படி? ஆகவே, அக்கண்ணேறு கொல்லுங் கூற்றுக்குச் சமம் என நினைக்கின்ருன் வள்ளுவரின் வாலிபன்.

பண்டறியேன் கூற்றென் பதனை இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு. 3

கூற்று-என்பதனை-பண்டு அறியேன், எமன் என்று சொல் லக்கூடிய ஒன்றை முன்னே நான் நேராக அறியேன்; இனியறிந்தேன், இப்பொழுதுதான் அதனைக் கண்முன் கண்டேன்; அக்கூற்றுப் பெண் தகைமையோடு கூடிய பெரிய கண்களையுடைய ஒன்று; என உரைத்து நின் ருன். கண்டவர்கள் உயிரைக் குடிக்கக் கூடிய தோற்றத் தோடுகூட இவ்வணங்குக்குக் கண்கள் பொருந்தி யிருக்கின் றனவே; என்ன கொடுமையிது! என நினைக்கின்ருன். அணங்கின் அழகில் மயங்கிய தலைவன் சாற்றுகிருன்.

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண். 4

பெண்தகைமை வாய்ந்த இப்பேதைக்குப் பார்த்தவர்கள் உயிரைக் குடிக்கும் தோற்றத்தோடு பொருந்தி யிருக்கின் றன கண்கள். உடனே தன்மீது செலுத்தப்பட்ட கண் ணைப் பற்றி ஓர் ஐயப்பாடு நிகழ்கின்றது அவனுக்கு.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 5

இப்பெண்ணினது கண், எமனா? அல்லது கண்தானா? அன்றிப் பெண்மான் கண்ணா? மூன்று மாதிரியாகவும் எனக்குத் தோற்றுகிறதே; என்னை அது கொல்வதைக் கொண்டு கூற்றம் என்று நினைக்கவேண்டிய திருக்கிறது; என்மீது வீழ்வதைப் பார்த்தால் கண்ணென்று சொல்ல லாம் போலிருக்கிறது; மருண்டு மருண்டு விழிப்பதைக் கொண்டு மான்கண் என்றும் வழுத்தலாம் எனத் தோற்று கிறது எனக் கற்பனை செய்த தலைமகன், நல்ல வேளை; இந்த வளைந்த புருவம் மேலே யிருந்துகொண்டு இவள் கண்கள் என்னைக் கொன்றுவிடாமல் காக்கின்றது; அது தவிர, மத யானை உலகை அழித்துவிடாமல் காக்க அதற்கு முகபடாம் இட்டதுபோல என் உயிரை அடியோடு வாங்கிவிடாமல் காக்கவே இவள் தனம் துகில் தாங்கியது போலும் என்று இயம்புகிறான்.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண். 6

‘கொடுமையான இவள் புருவங்கள் செம்மையான இக்கண்களைப் பாயவிடாமல் தடுக்குமானால் நடுங்கத்தக்க துயரத்தை இவள் கண்கள் செய்யமாட்டா.

கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துயில். 7

‘இம்மாதராரின் சாயாத தனங்களின் மேல் அணிந்த ஆடையானது, உலகை அழிக்கவல்ல மதயானைக்கு அழிவு வராமல் காப்பதற்காகப் போடும் முகபடாத்தை ஒக்கும். அந்தோ! இம்மாதரார் வயப்பட்டு என் வலி போய் விட்டதே எனக் கூறுகின்றான்.

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு. 8

இவள் அழகிய நெற்றிக்குத் தோற்று விட்டது, போர்க் களத்தே பகைவரும் அஞ்சுகின்ற என் பெருமை; எனக் கவல்கின்றான். இருக்கட்டும்! இயற்கை எழில் மிக்க இவட்கு ஏன் பயனின்றி இவ்வளவு நகைகளை இட்டிருக்கின்றனர்; என அவள் தூக்கிய சுமையைத் தான் சுமப்பது போலப் பெரிதும் வருந்துகின்றான்.

பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து. 9

அழகிய பெண்மானை நிகர்த்த மருண்ட பார்வையும் வெட்கமும் உடைய இவட்கு இந்நகைகளே போதுமானவை யாயிருக்க வேறுபட்ட அணிகளைப் போட்டு அலங்கரிப்பது எதற்காக?

கண்ட நங்கையின் கண் அம்புக்கு உயிரை ஊசலாட விட்ட தலைவன் புருவம் தனக்கு உதவி செய்யு மானால் தப்பிப் பிழைக்கலாம் எனக் கருதுகின்றான். நல்ல வேளை! தனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இன்றேல் அவை கொன்றே தீர்த்துவிடும் எனப் பேசுகின்றான். இயற்கையிலேயே எழில் நிரம்பிய இவளுக்குச் செயற்கை அணிகள் எற்றுக்கு என அம் மெல் இயல் உடையாள் தூக்கும் பாரம் பொறாமல் வருந்துகின்றான் வனப்பினால் தாக்குண்ட தலைவன். கடைசியாக அடக்க முடியாத ஆசை யுணர்ச்சியை உள்ளூர அழகிய உருவகத்தால் வெளியிடு கின்றான் நமது காதல் இளைஞன் பத்தாவது பாட்டில்.

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 10

அடுநறா - காய்ச்சப்பட்ட மதுவானது, உண்டார்கண் அல்லது - உண்டவர்களிடத்து அல்லாமல், காமம்போல் - காமத்தைப்போல, கண்டார் - மகிழ்செய்தல் - இன்று - கண்டவர்கட்கு மகிழ்ச்சியை யூட்டக்கூடியதன்று. மது, உண்டவர்கட்கே இன்பந்தரும்; மதுவைக் கண்டவர் இன்பம் எய்த முடியாது; காமம், அப்படியல்ல; அது காட்சியினளவாலேயே இன்பம் நல்குவது என, அப்பெண்மீது முழுக் காதல் கொண்டு மயங்கி நிற்கின்றான் இளைஞன். காதல், காமம் என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளில் கையாளப் பெற்றிருக்கின்றன பண்டை ஆசிரியர்களால். எனவே, ஆசிரியர் வள்ளுவர் நூலில் வரும் காமம் என்ற சொல் தாழ்ந்த பொருளிலேயே வருவதாகக் கொள்ளுமாறில்லை. எனவே, காமுற்ற-அல்லது காதல்கொண்ட தலைவன் காதற்குரிய பெண்ணின் வயப்பட்டு நின்ற நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் அதிகாரம் ‘ தகையணங் குறுத்தல் ’ என்பது.

## 2. குறிப்பு அறிதல்

வள்ளுவனார் காமத்துப்பாலின் இரண்டாவது அதிகாரம் 'குறிப்பறிதல்' என்பது. பூஞ்சோலையிலே கண்ட மங்கையின் அழகால் தாக்கப்பெற்று மயங்கி நின்ற இளைஞன், தான் விரும்பும் அம்மயிலின் குறிப்பு எது என ஆராயத் தொடங்குகின்றான். குறிப்பை அறிவதற்குக் கூறிய அதிகாரமே குறிப்பறிதல் என்பது. இவன் அவளைக் காதலித்தால் போதுமா? அவள் குறிப்பை - உள்ளக்கிடக்கையை - இவனைக் காதலிக்கிறாளா என்பதை - அறிந்து கொள்ளுதல் வேண்டுமல்லவா? அவள் குறிப்பை அறிந்து கொள்ளாமல் ஒழுங்கு மீறிய செய்கையிற் புகுவது இழிவன்றோ? மேலும், அவள் நினைவு இன்னதென்றே அறியாமல் அவள் மீது தான்கொண்ட ஆசை ஒன்று காரணமாக மட்டும், ஒரு பெண்ணைக் கூடுவதில், விரும்பும் இன்பம் சிறிதும் இராது என்பதை நுண்ணறிவுடையான் அறியாதிருப்பனோ? 'எதிரியைப் பற்றிய கவலையில்லை; தான் மட்டும் விரும்பினால் போதும்' என்பது இராவணன் அறம்; இது வள்ளுவர் அறமன்றோ? எனவே, நமது வள்ளுவரின் இளைஞன், தான் விரும்பும் கட்டழகி தன்னை விரும்பினாலொழிய அவளை அடைவதில் பயனில்லையெனக் கருதி, அவள் தன்னை எவ்வாறு நோக்குகின்றாள் என்ற குறிப்பை அறிகின்றான். அவன் குறிப்பை அவள் அறிந்துகொள்ள முயலவில்லையா என்ற கேள்விக்கு இடமே யில்லை. அவனது பரபரப்பு வெளிப்படையே யன்றோ? எனவே அவன் குறிப்பை

அவள் அறியத் தேவையில்லை யாகிவிட்டது. அப்பெண் தன்னைக் காதலிக்கிறாளா என்ற குறிப்பை - அவன் அறியத் தொடங்குகின்றான்.

உள்ளக்கிடக்கையைத் தெற்றென அறிவுறுத்துவது கண்ணே யென்பது அவனுக்குத் தெரியும். உடனே கண்ணை ஆராய்கின்றான்.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து. 11

இப்பெண்ணுடைய மைதீட்டிய கண்ணுள்ளே இரண்டு பார்வை யிருக்கின்றது; இவ் இரண்டனுள் ஒரு நோக்கு எனக்கு நோய் செய்யும் நோக்கு; மற்றொரு நோக்கு அந் நோய்க்கு மருந்தாகிய நோக்கு என எண்ணுகின்றான். அவளுடைய பார்வை இவனுக்கு இரண்டு விதமாகப் படுகின்றது. முன்னையது இவனுடைய உள்ளத்தே கிளர்ச்சியை உண்டாக்கிக் காமநோயைத் தருகின்றது; உடனே இன்னொன்று முதல் செய்த நோய்நோக்கிற்குத் தானே மருந்தாக அமைகின்றது என அவன் காண்கிறான். அவள் செய்த நோயை ஆற்றவல்ல மருந்து அவளிடம் உண்டே யன்றி வேறெங்கும் பெற முடியாதன்றோ? "மந்திரம் இல்லை, வேறோர் மருந்தில்லை, மையல் நோய்க்கு." நோய் நோக்குச்செய்த அவள், அது அவனைக்கொல்ல விட்டு விடாது மருந்து நோக்கையும் அருளினாள் எனக் கண்டதும் அவன் அடைந்த களிப்பிற்கு எல்லை சொல்ல முடியுமோ?

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. 12

என மகிழ்கின்றான் தலைவன். தலைவியின் மருந்துப் பார்வை - கள்ள நோக்கு - தன்மேல் வீழ்ந்தவுடன் மெய்யுறுபுணர்ச்சியில் ஒரு சரி யாதிக்குமேல் தான் நுகர்ந்து விட்டதாக இறுமாந்து இன்பக் கடலாடுகின்றான் இளைஞன். யான் காணாமல் இந்நங்கை என்மேல் செலுத்துகின்ற அருகிய களவுப் பார்வை, சேர்க்கையின்பத்தில் ஒரு

நேர்பாதியை மட்டும் தருகின்றது என்று சொல்ல முடியாது; அதில் சரிபாதிக்கு அதிகமான இன்பத்தையன்றே ஈகின்றது; எனக் கூறுகின்றான் என்றால், அவன்மேல் வீழ்ந்து களவு கொண்ட விழியினால் அவன் எவ்வாறு மருட்டப்பட்டான் என்ற இயற்கையைச் சொல்லவும் வேண்டுமோ? பார்வையிலே பெற்றுவிட்டான் பாதிக்கு அதிகமான இன்பத்தை!

**நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃதுஅவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்.** 13

நோக்கினாள் - என்னைப் பார்த்தாள்; நோக்கி-பார்த்ததும், இறைஞ்சினாள் - (நாணத்தால்) தலை குனிந்தாள்; அஃது - அவள் அப்படிச்செய்த அக்குறிப்பானது, யாப்பினுள் - (எங்கள் இருவரிடத்தும் தோன்றிய) அன்பு என்ற பயிருள், அவள் அட்டிய நீர் -(அப்பயிர் வளர்வதற்காக) அவள் பாய்ச்சிய நீராயிற்று. என்னைக் காதற் பார்வை பார்த்து நாணி அவள் தலை கவிழ்ந்த குறிப்புச் செயலானது எங்கள் காதற் பயிரை வளர்க்க அவள் கொட்டிய நீராயிற்று என இறும்பூதெய்துகின்றான்.

**யானோக்குங் காலை நிலனோக்கும்; நோக்காக்கால்**
**தானோக்கி மெல்ல நகும்.** 14

யான் அவளைப் பார்க்குங்கால் என்னை எதிர்த்துப் பார்க்காமல் தரையைப் பார்த்துக் குனிந்து நிற்கின்றாள்; நான் அவளைப் பார்க்காது கண்ணை வாங்கிக்கொண்டவுடன், அவள் என்னை நிமிர்ந்து பார்த்து மெதுவாகச் சிரிக்கின்றாள். அதுதவிர,

**குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்.** 15

நேராகக் குறித்து என்னைப் பார்க்காமல் ஒரு கண்ணைச் சுருக்கிக்கொண்டவள் போலப் பாவனை செய்து (கடைக் கண் வீசி) உள்ளே மகிழ்கின்றாள். எனவே அவள் குறிப்பு

நன்றே என உணர்கின்றுன் தலைமகன். குறித்த ஐந்து குறளாலும் அந்நங்கை தன்னைக் காதலிக்கிருள் என்ற குறிப்பைச் செவ்வனே அறிகின்றுன் இளைஞன்.

தொடக்கத்தில் இரண்டு பார்வையைச் செலுத்திஞள் அவள்; அவற்றுள் ஒன்று இவனுக்கு நோய்செய்தது; பிறிதொன்று அந்நோயைத் தணித்தது. பிறகு அவள் நோக்கு, கள்ளப் பார்வையை அள்ளியெறிந்தது; அது கண்டு மயங்கி இன்பத்தில் பெரும் பகுதியைத் திளைத்தவனுன் இவன். பின்றை அவள் இவனை ஒரு பார்வை பார்த்து அப்படியே தலைகுனிந்துவிட்டாள்; அதனுல் காதற் பயிர் வளர்ந்து செழித்துவிட்டது. அதன் பின், இவன் அவளைப் பார்த்தான்; அவள் பூமியை நோக்கிஞள். இவன் திரும்பிஞன்; அவள் மெதுவாக இவனை நோக்கிப் புன் முறுவல் தூவிஞள். கடைசியாகக் குறி வைத்து இவனை வெட்டுப் பார்வை பார்த்துக்கொண்டேயிராமல் கடைக்கண் வீசி இளநகை செய்து விட்டாள். எனவே அவள் குறிப்பு நன்றே என இவன் தெளிதற்குப் போதிய காரணங்கள் கிடைத்து விட்டன. தான் அவளைக் காதலிப்பது போலவே அவளும் தன்னைக் காதலிக்கின்ருள் என உணர்ந்தான் அவன். ஆனுல் ஒரு சிறு இடையூறு வந்தது. அதுவும் உடனே நீங்கிவிடுகிறது.

இந்நிலையில் தலைவியின் இச்செயலையும் அவள் வயப் பட்டு ஒரு பூமான் மயங்கி நிற்பதையும் அறிந்த தலைவியின் தோழி, தலைவியைக் கடிந்து ஏதேதோ சொல்லுகின்ருள். தலைவி என்ன செய்தாள்? தோழியை மறுத்து "நான் அவனைக் காதலிக்கத்தான் செய்வேன்" என்று சொல்ல வில்லை; அதற்கு நாணுகின்ருள் அவள்; அம்மனிதனை வெறுக்கின்றவள் போல் காட்டிக்கொண்டு அவனை வெறுத்துச் சில சொல்லுகின்ருள் வாய்விட்டு; கோபப்பார்வை பார்க்கின்ருள்; அவள் உரை காதில் வீழ்ந்தது; அவள் வெறித்த பார்வையுங் கண்டான். என்ருலும் அவன் ஏமாற வில்லை. அவ்வழகியின் உரை வெற்றுரை யெனவும் அக்

கடுஞ்சொற்குள்ளும் காதற் கலப்பு உண்டெனவும் அவன் அறிந்தான். அவ்விளைஞன் நுண்ணறிவினன்; எளிதில் ஏமாறக்கூடியவனல்லன். அவள் வெறித்த பார்வையுள் அடங்கியிருந்த காதல் வெள்ளத்தை அவனோ காணாது விடுபவன்?

உறாஅ தவர்போல் சொலினும் செறார்சொல்
ஒல்லை உணரப் படும். 16

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறார்போன்று உற்றார் குறிப்பு. 17

என அவன் மேலும் ஊக்கங் கொள்கின்றான்.

அவள் பொருந்ாதவள் போல் பேசினும், 'உண்மையில் உள்ளத்தே வேறுபாடு இல்லாதவர் சொல்லின் பயன் விரைவில் அறியப்படும்; வருத்தப்படுத்தாத கடுஞ்சொல்லும் பகைத்தவர் போற் காட்டுகின்ற கோபப் பார்வையும் பகைப்பவர் போன்று வெளிக்குக் காட்டுகின்ற நட்பினரது குறிப்பு அல்லவோ? இது எனக்குத் தெரியாதோ' என எண்ணமிடுகின்றான் அக்கூர்த்தமதியினன்.

ஆனாலும், 'என்ன இவள் இப்படிச் செய்கின்றாள்' என ஒரு விதமாகப் பார்த்தான் அவன். அவள் உடனே இவன் தன்மை கண்டு நெகிழ்ந்து மெதுவாகச் சிரித்து விட்டாள். ஒரு கணத்தே ஆனந்தம் பொங்கி விட்டது அவனுக்கு. அவள் பூத்த சிரிப்பால் ஒரு அழகுக் குறிப்பைக் கண்டு கொண்டான்.

அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். 18

"யான் பார்க்க, எனது பார்வையைக் கண்டவுடன் எனக்கு இரங்கி மெதுவாகச் சிரிக்கின்றாள் அவள்; அசைகின்ற நுணுகிய இயல்பினையுடைய அப் பெண்ணிடத்தே உண்டு காதற் குறிப்பு" எனப் பேரானந்தப் பெருவாரிதியில் திளைத்து விட்டான்.

குறிப்பறிதல் அதிகாரத்தில் இதுவரைக் கூறிய எட்டுப் பாக்களும் தலைவன் கூற்று. இனி இரண்டு பாட்டுக்கள் தோழி கூற்று. அனைத்தையும் கண்டாள் தோழி. இனித் தான் ஒதுங்கிக் கொண்டு காதலர்களைத் தனி விடுத்தலே தகுதியென உணர்கின்றாள் தோழி. தோழி தன்னுள்ளே சொல்லிக் கொள்ளுகின்றாள்.

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள** *19*

**கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.** *20*

*அயலாரைப்போல ஒருவரை ஒருவர் பொதுநோக்காகப் பார்த்துக் கொள்ளுதல் காதலரிடத்தேயே நிகழக்கூடியன ; ஒருவர் கண்ணொடு இன்னொருவர் கண்கள் பார்வையில் ஒத்துவிட்டால் பிறகு வாய்ச் சொற்கள் ஒரு பயனையும் தாரா என நினைக்கின்றாள் தோழி. கருத்தென்ன ? வாயினால் தன்னிடம் மறுத்துப் பேசுகின்றாள் ; ஆனால் செய்கை முற்றும் மாறாக இருக்கின்றது. கண்ணொத்து விட்டது ; நோக்கம் பொதுவில் வீழ்கின்றது ; வீண் வாய்ச் சொற்களில் என்ன பயன் எனக்கருதி, இனி நமக்கு வேலை இங்கு இல்லை எனத் தோழி விலகிவிடுகிறாள். பிறகு சொல்லவும் வேண்டுமா? காவிலே கருத்தொத்த காதலர் சேர்க்கை! காதலுக்கு இருவரும் வயப்பட்டார் ; கூடினர் ; களித்தார் ; குறிப்பறியப் பட்டது ; கூட்டுறவு நேர்ந்தது ; கருதிய இன்பம் கைகூடிற்று. இன்பம் துய்த்து மகிழ்ந்த உணர்ச்சி அடுத்த அதிகாரம் 'புணர்ச்சி மகிழ்த'லில் வெளிப்படும்.*

# 3. புணர்ச்சி மகிழ்தல்

தான் காதலித்த பெண்ணின் தகுதியால் தலைவன் தாக்கப்பட்டான். பின் காதலிக்கப்பட்ட தலைவியின் குறிப்பை அறிந்தான். தான் காதலிக்கும் அப்பெண் தன்னை நச்சுகின்றாள் என உணர்ந்தான். இருவர் கண்களும் தடையின்றி உறவாடின. இருவரும் கூடி இன்புற்றனர். 'கந்தருவ முறைமையினால் கடவுளர்க்கும் கிடையாத காமந் துய்த்தார்.' தம் வாழ்நாளில் இதுகாறும் காணாப் புத்தின்பத்தை இருவரும் எய்தினர். இன்பம் இருவருக்கும் ஒரு தகைத்தெனினும், பெண்ணியல்பால் போலும், உடனே அப் பூங்கொடி வாய்விட்டு ஒன்றும் கூறி மகிழத் தொடங்கினாளல்லள். ஆனால், தான் நுகர்ந்த அப்புதிய காதல் இன்பத்தை—அம்மெல்லியல்மாட்டுத் தான் பருகிய இள நலத்தை, எண்ணி எண்ணி மகிழ்கின்றான் இன்பக் கடலாடினோன். புணர்ச்சியை மகிழ்ந்து கூறும் முறையில் யாக்கப்பட்ட பாக்களைக் கொண்ட அதிகாரமாகலினாலேயே புணர்ச்சி மகிழ்தல் என்னும் பெயர் பெற்றது.

புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தின் முதற் குறள் இவ்வதிகாரத்தின் சிகரம் என்னத் தக்க முறையில் அமைந்து கிடக்கின்றது. சேர்க்கையின் முடிவில், தான் கண்ட இன்பத்தை அப்படியே காட்டுகின்றான் தலைவன்.

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.



இதுவே முதற்குறள். மனிதன் இன்பத்தை அடைவதற்கு ஏற்பட்ட வாயில்கள் ஐந்து. கண், காது, வாய், மூக்கு, உடல்

என்ற ஐந்தின் வழியாகவே உலகில் அனைவரும் இன்பம் அடைகின்றார். இவ்வைம்புல நுகர்ச்சியும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் பெறுவது அரிது. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறியும் ஐந்து கருவிகளின் இன்ப நுகர்ச்சியும் மங்கையிடந்தான் இருக்கின்றன; என்று இயம்புகின்றான் தலைவன். அவள் அழகை - அன்பைப் பருகும் இன்பத்தைக் கண்கள் கொண்டன. அக்குயிலின் இசையை உண்ணும் இன்பத்தைச் செவிகள் ஏற்றன. அப் பணிமொழியாளின் பாலொடு தேன் கலந்தன்ன திருவாய் அமுதத்தை மாந்தி, வாய் இன்பம் பெற்றது. அப்பாவை பூமேனியின் இயற்கை மணத்தையோ செயற்கை வாசனையையோ முகர்ந்து மூக்கு இன்புற்றது. அம்மடமயில் உடலொடு பொருந்தி, யாக்கை பெற்ற இன்பத்துக்கு எல்லையின்று. இப்படியாக ஐவகை இன்பத்தையும் ஒருங்கே பெற வல்ல ஒரு பொருள் உலகத்துண்டு என்றால் அப்பொருள் பெண்ணே எனத் தலைவன் வாயிலாக ஆசிரியர் வள்ளுவனார் சாற்றுகிறார்.

இக் குறளை அப்படியே எடுத்துச் சுவை குன்றாமல் இடமறிந்து தமது பெரிய புராணத்தில், காதல் விளையாட்டில் தேர்ந்த சுந்தர மூர்த்தி காதையில் சமைத்து இன்புற்றிருக்கின்றார் சேக்கிழாரடிகள் என்பதை இங்குக் குறிப்பிடுதல் பொருந்தும்.

> பண்டுநிகழ் பான்மையினால்
> பசுபதிதன் அருளாலே
> வண்டமர்பூங் குழலாரை
> மணம்புணர்ந்த வன்தொண்டர்
> புண்டரிகத் தவள்வனப்பைப்
> புறங்கண்ட நலத்தைக்
> கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று
> அமர்ந்திருந்தார் காதலினால்.

இப் பாட்டினுள் வள்ளுவனார் குறள் நன்றாகப் பதிக்கப்பட்டிருத்தல் காணத் தக்கது. அடுத்த குறள்,

**பிணிக்கு மருந்து பிற,மன் அணியிழை**
**தன்னோய்க்குத் தானே மருந்து.** 22

நோய்க்கு மருந்து வேறு ; அணியிழை தன் நோய்க்கு, அதாவது, பெண்ணால் தரப்பட்ட ஆசை நோய்க்கு அப் பெண் தான் மருந்து. மற்றைய நோயைப் போக்குதற்கு அந்த நோயே மருந்தாக உதவாது ; ஆனால் பெண்ணால் கொடுக்கப்பட்ட நோயை - அதாவது பெண்ணை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை நோயை, அகற்ற வல்ல மருந்து அவளாகவே யிருக்கின்றாள் என்பது இதன் பொருள். ஒரு நங்கையின் கூட்டுறவு விரும்பி மையல் பிணியை எய்திய ஒருவன், அவள் சேர்க்கையால் அந்நோய் நீக்கம் பெற்றதற்கு வியந்து ஏனை நோய்க்கும் மையற் பிணிக்கும் உள்ள வேறுபாட்டை நினைந்து பாராட்டி மகிழ்கின்றான்.

**மந்திரம் இல்லை ! வேறோர் மருந்தில்லை !**
**மையல் நோய்க்குச்**
**சுந்தரக் குமுதச் சேவ்வாய் அமுதலால்**
**அமுதச் சோல்லீர் !**

என்று கம்பர் கூறும் கருத்து இதனோடொத்தது.

அடுத்த செய்யுளில் தலைவனது இன்ப நுகர்ச்சிக்கு வைகுந்த லோகமும் ஈடாகாது எனச் சாற்றுகின்றார் புலவர் பெருமான்.

**தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல் !**
**தாமரைக் கண்ணான் உலகு.** 23

தாம் விரும்பும் மகளிரின் மெல்லிய தோளினிடத்தே துயில் கொள்தல் போன்ற இனிமையுடையதா, செங்கண்மால் உலகம் ?

அஃதிருக்கட்டும், ஓர் விந்தையான நெருப்பை இவள் வைத்திருக்கின்றாள். தீ, தொட்டால் சுடும் ; அகன்றால் விட்டுவிடும். இவளிடத்தே உள்ள தீ, நேர்மாறாக இருக்கின்றது.

நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்ருள் இவள்? 24

'இவளை விட்டு நீங்கினுல் சுடுகின்றது ; இவளை நெருங்கினுல் குளிர்கின்றது ; இத்தகைய தீயை இவள் எங்கிருந்து பெற்றுக்கொண்டாள்?

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினுள் தோள். 25

மலரணிந்த கூந்தலையுடைய இந்நாரியின் தோள், அநுபவிக்கும் போதெல்லாம், விரும்பிய பொழுதில் விரும்பப்பட்ட அவ்வப்பொருள்கள் கிடைத்தன போன்ற புத்தின்பத்தைத் தருவது போல் இன்பம் செய்கின்றது. மேலும்,

உறுதோறு உயிர்தளிப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 26

'என்னை அடையும் போதெல்லாம் என் உயிரைத் தளிர்க்கும்படி பொருந்துதலால் இப்பெண்ணின் தோள்கள் உயிரை நீங்காது காக்கவல்ல அமிழ்தம் என்ற உயரிய பொருளினுலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.' இவ்வாறு தன்னை இன்புறுத்திய தோள்களைப்பற்றி எண்ணிய தலைவன், தனது இப் பெண்ணின் சேர்க்கைக்கு நிகராக எதைச் சொல்லலாம் என ஆராய்ந்து துணிகின்ருன். ஒரு அழகிய ஒப்பையும் கண்டு பிடிக்கின்ருன்.

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு. 27

'இப் பெண்ணினது சேர்க்கையானது, ஒருவன் தமது வீட்டிலே இருந்து, தமது பொருளை - அதாவது தாம் ஈட்டிய பொருளை, கடமையறிந்து வேண்டுமாறு பகுத்துச் செலவிட்டு உண்டு அனுபவிக்கும் நல்லின்பத்தை யொக்கும்' என்பது இப்பாட்டின் போந்த பொருள். இன்பப்பாலிற் புகுந்து இன்பச் சொற்களையும் பொருள்களையும் வாரி வாரி வீசி, இளைஞர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேராசிரியர், இடையே ஈண்டுப் பொத்தென்று போட்ட நல்லறம்,

எல்லையற்ற வலிமை பெறுகிறது. தாமரைக் கண்ணன் உலகினும் இல்லையென்று சாற்றிய ஒரு இன்பத்துக்கு, தமது பொருளைப் பகுத்துண்ணும் இன்பம் சமம் என்ற வள்ளுவர் உள்ளக்கிடக்கை, சான்றோரால் தலைமேற்கொள்ளும் தகுதிவாய்ந்த உயர்ந்த கருத் தமைந்தது என்பதில் தடை யென்னே? அடுத்த பாட்டு,

வீழும் இருவர்க்கு இனிதே! வளிஇடை
போழப் படாஅ முயக்கு. 28

என்பது. விரும்புகின்ற ஆண், பெண் இருவர்க்கும் இனிமை பயப்பது எது? காற்றினுற்கூட இடை யறுக்கப்படாத சேர்க்கையே.

''காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்''

என்று சிலப்பதிகாரத்தில் மணக் காலத்தில் கண்ணகியை வாழ்த்தியதும்,

''சேர்த்தியகை ஞெகிழாமல் சேர்ந்து சேர்ந்து''

என்று வில்லி பாரதத்தில் சித்திராங்கதை விஜயன் இன்ப வாழ்க்கையைப்பற்றி இயம்பியதும் வள்ளுவனார் 'வளியிடை போழப்படாஅ முயக்'கை அரண்செய்கின்றன.

ஊடலில்லையேல் புணர்ச்சி பயனின்று என்ற உண்மையை,

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் 29

என்னும் பாட்டில் கூறப்படுகிறது. முதலிலே ஊடல்; பிறகு அளவறிந் துணர்தல்; அதன் பின் சேர்தல்: இவை தாம் காமமடைந்தார் பெற்ற பயன்கள் என உணர்கின்ருன் தலைவன். ஊடல்—அல்லது புலவி என்பதை இங்கு விரிக்கிற் பெருகும். அதுபற்றி வள்ளுவர் பின்னே அதிகாரம் வைத்திருக்கின்ருர்; ஆதலின் அங்கு அதனை ஆராயலாம். ஊடல் என்பதற்குச் சிறுசண்டை எனப் பொருள் கொள்ளலாம். ஊடலின்றேல் கூடல் பயனின்று என்பது வள்ளுவரின்

முடிந்த கொள்கை. புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தின் கடைசிப்பாட்டு,

> அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு. 30

என்பது. சேயிழையாள் இடத்துச் சேரச் சேர, இவளுடைய காதலானது, முன்னம் அறியாததை அறியும்போது பழைய அறியாமையைக் கண்டது போன்றிருக்கின்றது என வியந்து கூறுகின்றான். இது நிறைந்த கருத்துடையது. ஆராய்ச்சி எப்படி முடிவில்லாது செல்லுமோ, அத்தகையது இவ்வின்பம்; நாள்தோறும் புதிய இன்பம் காணப்படுகின்றது, என்பதே இதன் கருத்து.

புணர்ச்சி மகிழ்தலை - காதலிபால் தான் பெற்ற இன்பத்தை, நமது வள்ளுவனார் பெற்ற மகன், இவ்வாறு விரித்தோதித் தான்பெற்ற இன்பத்தை இவ் வையகம் பெறுமாறு செய்கின்றான், இனி அவன் தனது அருமைக் காதலியின் நலத்தைப் புனைந்து அடுத்த அதிகாரத்தில் உரைக்கப் போகின்றான்.

## 4. நலம் புனைந்து உரைத்தல்

காதலியைக் கண்டு, அவள் குறிப்பை அறிந்து, அவளோடு இன்பக் கடலாடிய தலைமகன், அவளது சேர்க்கை இன்பத்தை மகிழ்ந்து உரைத்தான் போன அதிகாரத்தில். இங்கு, அந்நங்கையின் நலத்தைப் புனைந்து உரைத்து மகிழ்கின்றான். நலம்—நலத்தை, புனைந்து—அலங்கரித்து, உரைத்தல்—சொல்லுதல். நலம் சிறப்பாக ஈண்டு அவளது அழகே. காதலன் நெருங்கிக் கலந்தான் காதலியோடு; எனவே, அவள் உறுப்புக்களின் எழிலை அப்படியே அறிந்தான்; தன் காதலியின் வனப்பு எல்லையற்றதென்பதை உணர்ந்தான்; அப்பூங்கொடியின் அழகிய அங்கங்களைத் தனித்தனியே அகக்கண்ணாலும் பார்க்கின்றான்; அவற்றிற்கேற்ற பொருள்களும் உலகத்துண்டோ எனத் தேடுகின்றான்; எந்தச் சீரிய பொருளும் தன் காதலியின் எழிலுக்கு நிற்காதெனக் காண்கின்றான். புணர்ச்சி மகிழ்ந்த காதலனுக்கு அவ்வாறு தோன்றுவதில் வியப்பொன்றுமில்லை. காதலி கண்ணகியால் புத்தின்பம் துய்த்த இளங்கோவலன் மெய்ம் மறந்து நலம் புனைந்துரைத்தல் பற்றிச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அள்ளிப் பொழியும் தேனென இனிக்கும் தீந்தமிழ்ச் சொற்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன.

> மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞை,நின்
> சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்;
> அன்னம், நன்னுதல்! மென்னடைக்கு அழிந்து,
> நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்;

அளிய தாமே, சிறுபசுங் கிளியே.
குழலும் யாழும் அமிழ்தும் குழைதத, நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்,
மடநடை மாது ! நின் மலர்க்கையின் நீங்காது
உடன்உறைவு மரீஇ ஒருவா ஆயின !
மாசறு போன்னே ! வலம்புரி முத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
அரும்பெறல் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே !
மலையிடைப் பிறவா மணியே என்கோ !
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ !
யாழிடைப் பிறவா இசையே என்கோ !
தாழிருங் கூந்தல் தையால் ! நின்னை ! என்று
உலவாக் கட்டுரை பலபா ராட்டி,

மகிழ்ந்தான் கோவலன். நமது வள்ளுவனார் பெற்ற இன்பப் பாலன், அவளையே முன்னிலைப் படுத்தாது, படர்க்கையில், அதாவது மற்றைப் பொருள்களைப் பார்த்துக் கூறும் முகத்தால் தன் காதலியின் நலனைப் புனைந்து உரைகின்றான். அவன் அனிச்சம் என்ற மெல்லிய பூவை நோக்குகின்றான். உலகத்தின் மெல்லிய பொருள்கட்கெல்லாம் மெல்லிதான அனிச்சம் என்ற அப் பூ, தன் ஆசையின் கனியைவிட மென்மை பெற்றிருக்கவில்லை யென்பதை அவ் விளைஞன் உணர்கின்றான். எனவே அம்மனிதனுக்கு அனிச்சப் பூவின்மேல் பொருமை தோன்றவில்லை. தன் காதலியைவிட அந்த அனிச்சம் சிறந்திருந்தாலன்றே அதைக்கண்டு வருந்துவான் ? எனவே அப்பூவைக் கண்டவுடன் மகிழ்ச்சியையே அடைகின்றான் ; அதற்கு வாழ்த்தும் கூறுகின்றான்.

நன்னீரை ! வாழி, அனிச்சமே ! நின்னினும்
மென்னீரள், யாம்வீழ் பவள். 31

‘ ஏ அனிச்சப் பூவே ! நீ வாழ்வாயாக. நீ நல்ல தன்மையையுடையாய் ! எனினும் எம்மால் விரும்பப்பட்ட அணங்கு

நின்னைவிட மெல்லிய நீர்மை வாய்ந்தவள்' என உரைக்கின்ருன். அவனுடைய விருப்பத்திற்கு இலக்கான பெண் அனிச்சத்தைவிட மெல்லியலாள் என அவன் தீண்டி உணர்ந்தாருகலின், தன் காதலியை நோக்கக் கேவலமான அந்த அனிச்சம் வாழ்வதில் அவனுக்குத் தடையில்லை. உடனே அவன், நாவால் தடவிய மையார் விழிகளின் அழகு அவன் முன்னே வந்து நின்றது.

**மலர்காணின் மையாத்தி ; நெஞ்சே ! இவள் கண்**
**பலர்காணும் பூவோக்கும் என்று.** 32

நெஞ்சே :—மனமே, இவள்கண் :—இவளுடைய கண்கள், பலர்காணும் :—பலராலும் காணப்படும், பூ ஒக்கும் :—மலர்களை நிகர்க்கும், என்று :—என. மலர்காணின் :—பூக்களைக் கண்டபோது, மையாத்தி :—மயங்கினுய் ; என நெஞ்சோடு சொல்லுகின்ருன். இதன் பொருள் : "யாரும் கண்டு அனுபவிக்கும் இயற்கை வாய்ந்த குவளைப்பூ தாமரை மலர் ஆகியவற்றைக் கண்டபோது எனது காதலியின் கண்களை இவை ஒத்திருக்கின்றன வென்று மயங்கி நீ நினைந்தாய், ஏ நெஞ்சே ! நீ அங்ஙனம் கொண்டது தவறு" என்பது. ஆம், வேறுயாருக்குமின்றி அவனுக்கு மட்டும் தனி இன்பம் தரும் அவள் கண்கட்கு அப்பூக்கள் நிகர் என்று அவன் நெஞ்சு எவ்வாறு கருதலாம் ? தன் நெஞ்சு அப்படிக் கருதியது பிழை என்பதை, வேறு யாரும் நுகரமுடியாத அன்னுள் கண்கள் தந்த சிறந்த தனி யின்பத்தை நுகர்ந்து பருகிய பின்னர், அவன் உணர்ந்து தெளிகின்ருன். இதனுல் கண்களின் நிகரற்ற தன்மையைக் காண்கின்ருன். பின்னர் அவளது மேனியும் பற்களும் மணமும் கண்களும் தோள்களும் அவன் உள்ளக் கண்ணின் முன்னே காட்சிகொடுத்து நிற்கின்றன.

**முறிமேனி முத்தம் முறுவல், வெறிநாற்றம்**
**வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.** 33

வேய்த்தோளவட்கு:—மூங்கில் போன்ற தோள்களையுடைய என் நங்கைக்கு, மேனி முறி - உடல், தளிர்போலும் நிற

முடையது ; முறுவல் முத்தம் - பற்கள், முத்துக்களாகும் ; நாற்றம் வெறி - மணம், நறுமணம் ; உண்கண் வேல் - மை யுண்ட கண்கள், வேல்களாக இருக்கின்றன ; என்று சில அவயவங்களின் ஒப்புநோக்கி மகிழ்கின்ருன். திரும்பத் திரும்ப அவள் கண்ணழகு அவனைவிட்டு அகலுகின்ற தில்லை. குவளையின் நினைவு அவனுக்கு வருகிறது. கண் ணழகுக்குக் குவளைப் பூவின் எழிலையே ஒப்புரைத்துச் சென்ருர் பழம் பெரும் புலவரெல்லாரும்.

**குவளையின் எழிலும் வேலின்**
**கொடுமையும் குழைத்துக் கூட்டித்**
**திவளும் அஞ்சனமென்று ஏய்ந்த**
**நஞ்சினுல் தெரியத் தீட்டித்**
**தவளவோண் மதியுள் வைத்த**
**தண்மைசால் தடங்கண்.**

என்று கூறினுர் கம்பர். "குவளைக் கண்ணி கூறன் காண்க!" என்ருர் மணிவாசகர். குவளையைக் கண்ணெடு பொருத்திக் கூறிஞேர் பலப் பலர். ஆனுல் குவளை, தன் இன்பப் பூங்கோதை கண்களை ஒவ்வொதென உணர்கின் ருன் வள்ளுவரின் தலைமகன்.

**காணிற் குவளை கவிழ்ந்து நிலநோக்கும்**
**மாணிழை கண்ணொவ்வேம் என்று.** 34

குவளை மலர்கள், காணும் தொழில் பெற்றிருக்குமானுல் இப்போதிருப்பதுபோல் மேல் நோக்கி இறுமாந்திரா ; மாட் சிமை பொருந்திய அணியுடையா ளாகிய கரும்பனையாள் கண்களை நாம் நிகர்க்க மாட்டோம் என உணர்ந்து அவை கள் (குவளைகள்) நிலம்பார்த்துத் தலை குனிந்துவிடும் ; காணும் உணர்வு இன்மையாலேயே குவளைகள் மேல் நிமிர்ந்து இறுமாந்து நிற்கின்றன ; என்பது இக் குறளின் உள்ளடங்கிய நுண்பொருள், இவ்வாறு கண்ணைப்பற்றி எண்ணியவனுக்குத் தான் கண்ட கொடியிடையின் நினைவு வந்தது. உடனே அவள் சூடியிருந்த அனிச்சமென் மலர் கள் அவன் கண்ணில் வந்து உறுத்திற்று.

அனிச்சப்பூக் கால்களையாள், பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 35

அனிச்ச மலரைக் காம்பைக் கிள்ளாது அவள் அணிந்து விட்டாள்; ஐயையோ! இனி அவள் இடுப்புக்கு நல்ல மங் கலப் பறைகள் ஒலிக்கமாட்டா; எனக் கவல்கின்றான். காம் பரியாது அனிச்சத்தைச் சூடுவதை அவள் மெல்லிய இடை எவ்வாறு பொறுக்கும்? என நுசுப்பின் மேன்மையைப் பாராட்டுகின்றான். அவன் உள்ளத்தைக் கள்ளுண்டவன் போலக் களிப்பித்த உவமைசொல்ல முடியாத திரு முகத்தை நினைந்தான். இந்த முகத்துக்குத் திங்களை இணை சொல்லுகின்றார்களே! அது பொருந்தாது!! பொருந்தாது !!! எனப் புகல்கின்றான். முகத்துக்கும் மதிக்கும் உள்ள வேறுபாட்டைப்பற்றி நான்கு பாட்டுகளில் பகர்கின்றான்.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன். 36

"வானத்து உலாவும் மீன்கள், தங்கள் மதியையும் எனது உயிரனையாள் முகத்தையும் வேறுபாடு கண்டு அறிய முடி யாது நிலையினின்றும் கலங்கித் திரிகின்றன. இது அறி யாமை! மதிக்கும் எம்மடந்தை வதனத்துக்கும் வேறுபாடு மிகப்பெரிது!"

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து. 37

"குறைந்த இடம் நிரம்பி விளங்கும் இயல்புடைய மதிக்கு இருப்பது போன்ற மறு-குற்றம், மாதர் முகத்தில் உண்டோ? அஃதில்லையாக, இவ்வளவு பெரிய வேறு பாட்டை ஏன் இந்த விண் மீன்கள் உணரவில்லை? குறை தலும் நிறைதலும் களங்கமும் பொருந்திய சந்திரன் எவ் வாறு ஈடாகும் மாதரார் திருமுகத்துக்கு?"

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை; வாழி மதி! 38

" திங்களே ! வாழ்வாயாக ! இம்மெல்லியலாள் முகத்தைப் போல நான் மகிழுமாறு ஒளிவீச உன்னால் முடியுமானால் நீயும் என்னுடைய காதலுக்கு உரியையாவாய் ! உன்னால் அது முடியாதென்பது தேற்றம் ! எனவே உன்னை நான் காதலிக்கப் போவதில்லை.

**மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாகில்**
**பலர்காணத் தோன்றல் ! மதி !** 39

" மதியே ! பூப்போலும் கண்ணினையுடைய என் காதலியின் முகத்தை நீ நிகர்க்க வேண்டுமானால், பலர் காணத் தோன்றாதே ! எல்லோரும் காணுமாறு நீ வெளித் தோன்றினாயானால் என்னுடைக் காதலியின் முகத்தை ஒக்கமாட்டாய்! என் காதலி முகம் எனக்கே இன்பம் தரும் ; நீ எல்லோருக்கும் ஒரேபடித்தாகத் தோன்றுவதால் நீ யான் விரும்பும் பெண்ணின் முகத்திலும் தாழ்ந்த ஒன்றே ; உனக்கு என் நங்கை இன் முகத்தைப் போன்ற நிலையடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் எனக்கு மட்டும் தனித்துத் தோன்று" என்றிவ்வாறு மதியை நோக்கிப் பல படக் கூறிய தலைமகன், முகத்தினின்றும் அவளது மெல்லிய திருவடிக்குத் தாவிக் குதிக்கின்றான்.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்.** 40

பூக்களுளெல்லாம் மென்மை வாய்ந்த அனிச்சப் பூவும், மிக நுண்ணிய பொருளாகிய அன்னத்தின் சிறகுகளும் மாதரது அடிகட்கு நெருஞ்சி முட்போலத் துன்பத்தைத் தரும். இவ்விரண்டு மெல்லிய பொருள்களே நெருஞ்சி முட்போலக் குத்தும் என்று சொல்லக்கூடிய அவ்வளவு மென்மை வாய்ந்தது அவள் அடிகள் எனப் பாராட்டுகின்றான்.

தன் காதலியை இன்னோரென்ன பலபடியால் அழகுபட நலம் புனைந்துரைத்து மகிழ்ந்த நிகழ்ச்சி இவ்வதிகாரத்தே நன்கு கூறப்பட்டது. அடுத்த அதிகாரம் " காதற் சிறப்புரைத்தல்." காதலின் சிறப்பை அவன் உரைப்பதன்றி அவளும் உரைத்து இன்புறுகின்றாள்.

# 5. காதல் சிறப்பு உரைத்தல்

மலர்க்காவிலே ஒருவன் ஒருத்தியைக் கண்டான்; அவள் தகுதியால் தாக்கப் பெற்ற அவன், அன்னாள் குறிப்பை அறிந்தான்; அவளொடு கூடிக்கலந்தான்; அந் நங்கை நலத்தைப் புனைந்து புகழ்ந்தான். இங்கு அப் பூமான், தனது பூங்கொடியின் காதல் சிறப்பை உரைக்கப் புறப்பட்டிருக்கின்றான். அவன் உரைத்து நிற்பதோ டன்றி அவன் காதலியும் வாய்திறந்து காதல் சிறப்பைப் பகர்வது ஒரு சிறப்பு. இதற்கு முந்திய நான்கு அதிகாரங் களிலும் ஆண்மகனின் காதல் புலப்பமே பெரிதும் கூறப் பட்டது. இங்குப் பெண்மகளும் காதல் வெள்ளத்தில் மூழ்கிக் கரைகாணாது வாய்திறக்கத் தொடங்கிவிட்டாள். முதல் ஐந்து பாக்கள் ஆண் கூற்று; பின் ஐந்து குறள்கள் பெண் பேச்சு. முந்தியது காதலன் புலப்பம்: பிந்தியது காதலி குழப்பம். குறட்பாக்களின் வைப்பு முறைப்படி முதலில் காதலனிடம் செல்வோம்.

முத்தம் கொடுக்கும், அல்லது வாங்கும் முறை இக் காலத்தேதான் மிக வளர்ந்து பெருகிக் காதல் வழியில் தலைமை இடம் பெற்றிருப்பதாகக் கொள்வது தவறு. முத் தம் பலவகை. அதில் தலை சிறந்தது என்று சாற்றலாம், அதரபானம் - உதடு உறிஞ்சுதல் - என்ற ஒன்றை. வள்ளு வர் எந்த நாகரிகக் காதலர்க்கும் பின்னடையவில்லை. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. இன்று மேடைகளில் ஆயிரக் கணக்கானவர் முன்னிலையில் அது தாராளமாக நடை பெறுகிறது. பண்டு அந் நிகழ்ச்சி தனியிடத்துக்குமேல்

போகவில்லை. நமது வள்ளுவனார் காதல் சிறப்பில் முதலாவதாக உதடுறிஞ்சிய இன்பத்தையே இயம்புகின்றார் காதலன் கூற்றாக.

பாலொடு தேன்கலந் தற்றே; பணிமொழி,
வாலெயிறு ஊறிய நீர். 41

'மென் சொல்வல்லாளின் தூய பற்களில் ஊறிய நீர், பாலோடு தேனைக் கலந்ததைப்போல் இருக்கின்றது' என்று கூறுவதானது, அதரபானத்தை எவ்வளவு நுணுகி அனுபவித்துக் கூறப்பட்டிருக்கிற தென்பதை நன்கு காட்டுகிறது. ஆசிரியர் இப்பாவை நயம்பட நன்கு நாகரிக முறைக்கு மாறாமல் சமைத்திருக்கின்றார். பால் - தேன் ஆகிய இரண்டு இனிப்புப் பொருள்களையும் ஒருங்கு சேர்த்தார். அவ் இரண்டு தீம்பொருள் அமுதத்தின் கலவைக்கு நிகர், அவள் பரிசுத்தமான பற்களின் ஊற்று நீர் என்றார்.

இவ்வாறு காதலியின் பவளவாய் பருகி மகிழ்ந்து இறுமாந்த காதலன், அவள் நல்கிய இன்பத்தை நினைக்குந்தோறும் தன்னைவிட அவள் வேறு என்று மதித்தானல்லன். உடம்பினுள் புகுந்த உயிர் போல, தான் அவளிடம் புகுந்து விட்டதாகவே எண்ணுகின்றான்.

உடம்போடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு. 42

'உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு எத்தகையதோ அத்தகையது அவளுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு' என்பது இதன் பொருள். வேற்றுமையற்ற வகைக்கு இஃதோர் சிறந்த சான்று. அது நிற்க, அடுத்த செய்யுள் மிக அழகிய ஒரு கற்பனை.

கருமணியில் பாவாய் ! நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 43

'என் கண்ணிற் பொருந்திய கருமணியிலிருக்கும் பாவையே! நீ போய்விடு ! நீ போகாது இருப்பாயானால் எம்மால் விரும்

பப்பெற்ற அழகிய நெற்றியுடையாளை வைக்க இடமில்லை எனக் கூறுகின்ருன். காதலி வருமுன் ஏதோ சும்மா இருந்த ஓர் இடத்தில் அப்பாவை வீற்றிருந்ததை அவன் தடை செய்யவில்லை. தனது ஆருயிர்க் காதற்பாவை தோன்றிய பிறகு அவளுக்கு உரிய உயரிய இடத்தைக் கேவலம் ஒரு வெறும் பாவை விட்டகலாதிருப்பதை எவ்வாறு பொறுக்க முடியும்? எனவே, அக்கண்ணிற் கருமணியுள் இருக்கும் பாவையை நோக்கி, 'நீ இதுவரை இருந்தது சரி, என் காதலிக்கு இருக்கை கொடுக்க என்னுடைய உடம்பில் கண்ணைவிடத் தகுதியான இடம் வேறு எனக்குத் தோன்றவில்லை ; ஆதலால் விரைந்து போய்விடு" என மரியாதையாகக் கூறுவது பாராட்டத்தக்கது. நீண்ட காலமாக அப்பாவை அங்கு வாழ்ந்தது எனக் கருதியே போலும் அப்பாவையைக் காரணங்காட்டி அன்பாக வழியனுப்புகிருன். சிவபெருமான் தன் காதலிக்கு, உடம்பில் ஒரு பகுதியையும் அவளறியாமல் மற்ெருருத்திக்கு, ஒளிந்து கொள்ளத்தக்க இடமாகிய தலைமேல் இருக்கும் சடைக் காட்டையும் விஷ்ணுமூர்த்தி காதற் கிழத்திக்குத் தம் மார்பையும், பிர்ம்மதேவன் அருமை மனைவிக்குத் தம் நாவையுமே இருக்கைகளாக ஈந்துவிட்டனர் எனப் புராணங்கள் கூறும். நமது வள்ளுவர் பெற்ற காதற் குமரன் தனது இன்பவல்லிக்கு இவைகளில் எதையேனும்கொடுத்து அந்தப் பாவையைத் துரத்தாதிருந் திருக்கலாம். ஆனுல் அவனுக்கு எல்லாவற்றையும்விட அவளைக் கண்ணுக்குள் வைத்துவிடுவதே சிறந்தது எனப்படுகின்றது. ஆம்! "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" யன்ருே? நிற்க. இக்குறளின் அழகிய சொற்களைத் திருநாவுக்கரசடிகள், "கண்ணே! கண்ணிற் கருமணியே! மணியாடுபாவாய்!" என்று எடுத்தாண்டிருப்பதை ஈண்டு ஞாபகப்படுத்துகிறேன்.

இவ்வாறு இன்பந்துய்த்த காதலன், இயல்பாக நேரக்கூடிய பிரிவு என்ற ஒன்றை நினைந்து வருந்துகிருன். பிரிவு என்று எண்ணுங்கால் சாவதாகவே அவன் கருதுகின்ருன்.

**வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை ; சாதல்**
**அதற்கன்னள் நீங்கும் இடத்து.** 44

'அவளோடு கூடுங்கால் உடம்பொடு கூடிவாழும் உயிர் போன்றிருக்கின்றேன் ; அவளை விட்டுப் பிரியுங்கால் நான் உடம்பின் நீங்கிய உயிர் போல் இருக்கின்றேன்' என வருந்துகின்றான். பிரிவுநாட்களில் அவளை நினைத்துக் கொண்டதுண்டோ என எங்கிருந்தோ ஒரு வினாப் பிறந்தது. ஓகோ ! இது என்ன விந்தை ! நன்றாக இருக்கிறது கேள்வி! மறப்பது என்ற ஒன்று முதலில் தோன்றினாலன்றோ நினைப்பது என்பது ஒன்று பின்னே வரும் ? மறப்பு இன்றேல் நினைப்புக்கு இடமேது ?

**உள்ளுவன் மன்யான் மறப்பின் ; மறப்பறியேன்**
**ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.** 45

'எனக்கு இனிய காதலியின் குணங்களை மறந்தாலல்லவோ நான் நினைப்பேன் ; மறப்பு என்பதையே அறியேனே என்று கூறுகின்றான். இவ்வாறாகத் தன் கற்பனைத்திறமைகளைக் காட்டி அவ் ஆண் மகன் காதல் சிறப்பை உரைத்தான்.

இனி அப் பெண் மகள் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம். அவள் அவனுக்குக் கொஞ்சமும் இளைத்தவளாகக் காணப் படவில்லை. அந்நங்கை, தன் காதற் சிறப்பைத் தோழி பால் மொழிகின்றாள்.

**கண்ணுள்ளின் போகார் ; இமைப்பில் பருவரார் ;**
**நுண்ணியர்எங் காத லவர்.** 46

ஏ ! தோழி! எம்முடைய காதலர் மிக நுணுக்கம் வாய்ந்தவர் ; ஏன் தெரியுமா ? ' அவர் இப்போது இங்கு இல்லை ; பிரிந்து சென்றுவிட்டார்' என்று கருதுகின்றாயா ? இல்லை! இல்லை !! அவர் எங்கும் போகவில்லை ! இங்குத்தான் இருக்கிறார் ! எங்கு என்று கேட்கிறாயா ? என் கண்ணுக்குள்தான் அவர் இருக்கின்றார். என்னை விட்டு அவர் போவாரா ? 'கண்ணுள்ளிற் போகார்' என் கண்ணை விட்டு அவர்

போகவே மாட்டார்; அது மட்டுமா! இமைப்பிற் பருவ ரார்; நான் கண்ணை மூடினுல்கூட என் கண்ணுக்குள்ளே இருக்கும் அவர் வருத்தப்பட மாட்டார். ஆகையினுலேயே அவர் நுண்ணியவர் என்று நுவல்கின்றேன்.

**கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து** *47*

காதலவர் :—எங்காதலர், கண்ணுள்ளார் ஆக :—எப்போதும் கண்ணினுள்ளே வீற்றிருக்கின்ருராதலால் தான், கண்ணும் எழுதேம் :—கண்ணுக்கு மைகூட நாம் தீட்டுவதில்லை. ஏன்? அப்படிச் செய்தால், கரப்பாக்கு அறிந்து :- அவர் மறைந்துவிடுவார் என்பதைத் தெரிந்துதான். அவ்வளவுதானு? அவர் பிரிந்த பிறகு கண்ணுக்கு மை தீட்டவில்லை யென்பது மட்டுந்தானு? அவர் பிரிவின் பிறகு நாம் சுடு பொருள்களைக் கூட ஏன் உண்ணவில்லை யென்பதை அறியாயோ தோழி! அதற்குச் சரியானகாரணம் இருக்கிறது.

**நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து** *48*

நெஞ்சத்திலே இடையருது அவர் உட்கார்ந்து கொண்டேயிருக்கின்ருர். காதலர் நெஞ்சத்தாராக:—நெஞ்சிலே காதலர் எப்போதும் நீங்காதிருக்குங்கால், எப்படிச் சூடுள்ள பொருள்களை உண்ண முடியும்? அப்படிச் செய்தால் உள்ளே இருக்கும் அவர் சூடுபட்டு வெந்து போகமாட்டாரா? ஆதலினுல்தான், வேபாக் கறிந்து :—அவர் வெந்து விடுவார் என்பதை உணர்ந்து, வெய்து உண்டல் அஞ்சுதும் :—சூடான பொருள்களை உண்பதற்கு அஞ்சுகின்ருேம். ஆனுல் இந்த ஊருக்கு ஒன்றுமே தெரியவில்லை. நான் அஞ்சனம் தீட்டாமையாலும் சூடுள்ள சோறு, பலகாரம் முதலியன உண்ணுமையாலும் நித்திரை கொள்ளாமையாலும் என்னை இன்னுேரன்ன துன்பங்கட்கு ஆளாக்கிய அவருக்கு என்மாட்டு அன்பு இல்லை எனக் கருதுகின்றனர்போலும் இவ் ஊரார். அவர்கள் கூற்றை

நான் உடன்படேன். அவரை - என் இன்னுயிர்க் காதலரை - அவ்வாறு தூற்றுவதை என்னால் பொறுக்க முடியாது. நான் கண் எழுதாமைக்கும் சூடுண்ணாமைக்கும் காரணங்களை முன்னமே மொழிந்தேன். நான் துயிலாமைக்குக் காரணம் இதோ சொல்லுகிறேன். கேளடி ! சகி !

**இமைப்பிற் கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே**
**ஏதிலர் என்னும்இவ் ஊர்** 49

நான் கண்ணை மூடினேனானால் அவர் மறைந்து விடுவதை நான் அறிவேன், இதனை மற்றவர் அறிவார்களா ? எனக்குத் தூங்கா நோயை அவர் தந்து விட்டார் ; அவர் அன்பில்லாதவர் என்று இந்த ஊர் சொல்கின்றது. இந்த அறியாமையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதுதவிர,

**உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் ; இகந்துறைவர்**
**ஏதிலர் என்னும்இவ் ஊர்.** 50

என் காதலர், மகிழ்ச்சியோடு என் உள்ளத்தே என்றும் இருக்கின்றார் ; என் நெஞ்சு நிறைந்த காதலரை, அவர் பிரிந்து வாழ்கின்றார் ; அன்பில்லாதவர் என்று இந்த ஊர் சொல்லும் ! இஃது என்ன விந்தை ! ஐயோ ! என் கண்ணை விட்டு நீங்காது வாழும் காதலரை - நான் கண்ணை மூடினாற் கூடத் துன்பப்படாத நுணுக்கம் வாய்ந்த காதலரை - என் நெஞ்சு நிறைய மகிழ்ச்சியோடு குடியிருக்கும் அருமைக் காதலரை, ஏன் வீணாகப் பழிக்க வேண்டும் !

என்றிவ்வாறு காதலி கூறும் முகத்தால் பிரிவுத் துயரத்தைக் காட்டாமற் காட்டிக் காதற்சிறப்பை உரைக்கும் உயரிய முறையைக் கண்டு களிக்காதார் யாரே இருக்க முடியும்!

## 6. நாணுத் துறவு உரைத்தல்

காதலியைக் கண்டு, அவள் குறிப்பை அறிந்து, அம் மடமயில் சேர்க்கையால் மகிழ்ந்து, தனக் கினியாளின் நலத்தைப் புணர்ந்து, காதற் சிறப்பையும் சொல்லி மயங்கி நின்ற தலைவன், ஈண்டு நாணத்தை முழுதும் துறந்து வாய் விட்டுக் கதறுகின்றான். அவனோடு இன்பந் துய்த்துக் காதலில் கட்டுண்ட அத் தலைவியும் நாணத்தைப் பெரிதும் கொள்ளும் தன் இயல்பையும் மறந்து வாய் திறந்து புலம்பு கின்றாள். நாணத்தைத் துறந்து சொல்லுதல் 'நாணுத் துறவு உரைத்தல்'.

நாண் துறந்த தன்மையை ஆசிரியர் வள்ளுவர், ஆண் பெண் இருவர் பாலும் ஏற்றுகின்றாராலும், ஆண்மகன் மீதே மிதமிஞ்சிச் சுமத்துகின்றார். பத்துப் பாக்களில் ஏழு அவன் கூற்று. மூன்றுதாம் அவள் கூற்று. அதனினும் அவன் முறைக்கும், அவள் முறைக்கும் வேறுபாடு மிகப் பெரிது. அவள் கூற்றைப் பெண்ணியல்புக் கேற்றவாறு மிக்க நயமாக- நுணுக்கமாக- நாகரிகமாகக் காட்டுகின்றார். இவ்வதிகாரத்தில் ஆசிரியர் வள்ளுவர் மடல், என்ற ஒரு செயலைப்பற்றிச் சொல்லுகின்றார்.

மடல் ஊர்தல் என்பதுபற்றிப் பழைய ஆசிரியர் பலரும் பேசியிருக்கின்றார். ஒரு பெண்ணை அடைய விரும்பும் ஒருவன், அவளைக் கட்டாயமாகப் பெற இம் மடல்ஊர்தல் வழியெனக் கூறப்படுகிறது. பனங்கருக்கால் ஒரு குதிரை யைச் செய்து அதன் மீது ஏறித் திருவீதின்ய ஒருவன் பவனி வரவேண்டுமாம். அவனுக்குச் சில முறைகள் கூறப் படுகின்றன. அம்முறை எந்த அறிவுள்ள ஒருவனும்

உடன்படத் தக்கதாகவில்லை. அப்படித் தன் உடம்பைச் சிதைத்து மானத்தையும் விற்றுவிட்ட ஒருவனுக்கு அவன் விரும்பிய பெண் உரிமையுடையவளாம்! இதனை விரித்துக் கொண்டு போக நான் விரும்பவில்லை. இது தனியாக ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டிய ஒரு பொருள். ஈண்டு வள்ளுவர் பாக்களில் மடல்பற்றி வருமிடங்களைப் பழைய உரை யாசிரியர்கள் கருத்தின் வழியே உரைத்துச் செல்வேன். மடலேறுவது என்பதன் விபரம் எதுவாயினும், மடலேறுதல் என்பது விருப்பம் மேலிட்ட ஒரு பெண்ணை அடைதற்குக் கையாளப்படும் முறை என வள்ளுவர் குறட்பாக்களினின்றும் தெரிகின்றது.

இங்கு, தான் விரும்பிக் களவு வழியில் கூடி இன்பந் துய்த்துக் களித்த காதலன், மடலூர்ந்தாவது அவளை மனையாளாகப் பெற முயலுகின்றான். அவளும் தனிபொருது அவனை அடையும் அவா மிகுதியால் நாணந் துறந்து பேசுகின்றாள். எனவே, முன் அதிகாரங்களிற் கூறியபடி இவ்வளவு நெருங்கி அளவளாவி இன்பம் பெற்று மகிழ்ந்த இப் பெருங் காதலர் முறைப்படி மணந்து கொள்ளுதலுக்கு ஏதேனும் தடை தோன்றியிருத்தல் வேண்டும் என்று ஊகிக்க வேண்டுவதாகிறது. முதலில் காதல் கொண்ட ஆணும் பெண்ணும் வேறு எவர் தலையீடுமின்றித் தாங்களாகவே கூடி உறவாடி இன்புற்று மகிழ்ந்து, பின்னர் திருமணம் செய்து கொள்ளுதல் என்ற முறை தமிழ்நாட்டில் பண்டை நாள் பெரிதும் இருந்து வந்ததாகத் தெரிகிறது. அம்முறையில் நமது வள்ளுவரின் இன்பச் செல்வனும் செல்வியும் முதற்படியை ஒல்லுமாறு கடந்துவிட்டனர். இரண்டாம்படி ஏறும்போது தடை தோன்றுகிறது. காரணம் யாதாக இருக்குமோ? வகுப்போ! மதமோ! பணமோ! அன்றி இவைபோன்ற பிற எவையோ! காரணம் யாதாயின் என்? இவ்வளவு தூரம் சென்று இன்பங் கரைகாணுதெய்திய அறவழி நிற்கும் வள்ளுவர் பெற்ற காதலர், எதையும் பொருட்படுத்தி அஞ்சுவரோ? துணிவுகொண்ட ஆண்மகன் மடலூர முன் வருகின்றான்.

**காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம்**
**மடலல்லது இல்லை வலி.** 51

பெண்களிடத்திலே காமத்தை அனுபவித்துவிட்டு அவ் அனுபவிப்புக்கு ஏற்படும் தடை காரணமாக வருந்திய ஆண்மக்கட்கு அவ்வின்ப நுகர்ச்சிக்குத் துணைசெய்ய வல்லது 'மடல்' என்ற ஒன்றைத் தவிர வேறில்லை; என்று கூறினன் தலைவன். "ஓகோ மடலா ஏறப் போகிறீர் உங்கட்கு அது எப்படி ஆகும்? நாணமும் ஆண்மையும் உள்ளார் அது செய்ய ஆற்றாரன்றோ?" என்ற உரைகள் அவன் செவியில் நுழைந்தன. அவ் உரைகளை அவன் மறுக்கின்றான்.

**நோனா உடம்பும் உயிரும் மடலேறும்**
**நாணினை நீக்கி நிறுத்து.** 52

மடலேறுதலில் உள்ள துன்பத்தைப் பொறுக்க ஆற்றாத என் உடலும் உயிரும் அதனாலேற்படும் வெட்கத்தைக் கூட உதறித் தள்ளிவிட்டு மடல் ஏறிவிடும்; அதில் தடையில்லை!

**நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்றுடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்!** 53

நாணத்தையும் நல்ல ஆண்தகைமையையும் முன்னே நான் உடையவனாக இருந்தேன்! இன்று நான் வேறு ஆள்! இன்று காமுகர் ஊரும் மடலினை உடையவனாக இருக்கிறேன். காமம் உழந்தபின் நாணமும் ஆண்மையும் இறந்த காலப் பொருள்களே!

**காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை.** 54

காமமாகிய பெரும் வெள்ளம் என்னிடமிருந்த நாணம் ஆண்மையென்ற தெப்பங்களை என்னைப் பிரித்துத் தூக்கித் தள்ளிவிட்டு அடித்துக்கொண்டு போய்விட்டது.

தோடலைக் குறுந்தோடி தந்தாள் மடலோடு
மாலை உழக்குந் துயர். 55

மாலைக்காலத்து அனுபவிக்கும் இத் துன்பத்தையும் அத் துன்பத்தைத் துடைக்கவல்ல "மடல்" என்பதையும் எனக்கு, வரிசையாகச் சிறுவளைகளை அலங்காரமாக அணிந்த அப்பெண் தந்துவிட்டாள். மாலைக்கால நோய் இன்னதென்றும் மடல் இன்னதென்றும் எனக்கு முன்னே தெரியா. எனக்கு இவள் தந்த பரிசு இவை.

என்றிவ்வாறு பலபட, எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாகின்றான் புலவன்பெற்ற பெருமகன். காமத்தை மாலைக்காலத்து நுகரும் துன்பம் என்று இங்குக் கூறிய கருத்தை, காமத்துப்பால் பொழுது கண்டு இரங்கல் என்ற அதிகாரத்தில்,

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்

என்று மிக்க நயம்பட உரைத்திருக்கின்றார் ஆசிரியர். இந் நோயானது காலையில் அரும்பும்; பகல் முழுதும் மொட்டாக இருக்கும்; மாலைக் காலத்தில் மலர்ந்து விளங்கித்தோன்றும். அக்கருத்தை மனத்துட் கொண்டே 'மாலை யுழக்குந் துயர்' என்று இங்குக் கூறப்பட்டிருக்கிறது. மாலை நோய் வாய்ப்பட்ட அவனுக்கு அந்நோய் போக்கும் மருந்து மடல் தவிர வேறு தோற்றவில்லை. துயிலும் அவனுக்கு இல்லாதாகிவிட்டது. காதலியைப் பிரிந்தோர் துயில் கொள்ளலாற்றாரென்பதைக் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

"சங்கிற் பொலிந்த கையாளைப்
பிரிந்த பின்பு தமக்கினமாம்
கொங்கிற் பொலிந்த தாமரையின்
குழுவும் துயில்வுற்று இதழ்குவிக்கும்
கங்குற் பொழுதும் துயிலாத கண்ணன்."

சீதையைப் பிரிந்த பிறகு இராமன் தூக்கம் என்பதையே அறிந்தானில்லை என்று இயம்புகின்றார் கம்பர். பிரிவுத் துயரால் வாடும் தலைவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

**மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன்; மன்ற** 56
**படலோல்லா பேதைக்கென் கண்.**

'அவள் காரணமாக என் கண்கள் தூக்கத்தையே முழுதும் நீத்துவிட்டன; ஆதலினால் எல்லோரும் உறங்கும் நள்ளிரவிலுங்கூட மடலூரும் நினைவே எனக்குத் தோன்றுகிறது.' என்று கருதிய அவன், அடடா! தான் பெண்ணாகப் பிறந்திருந்தால் ஆகாதா? பெண்ணாகப் பிறப்பதுதான் பெருமையுடையது என்று நினைக்கின்றான்.

**கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்ணிற் பெருந்தக்கது இல்.** 57

'கடல் போன்ற அளவில் மிகப் பெரிய காமத்தின் வயப்பட்டாலும் மடல் ஏறுதல் என்ற காரியத்தைச் செய்யாமல் பொறுத்திருக்கும் பெண் பிறப்புப் போல் பெரிய தகுதி வாய்ந்த ஒரு பிறப்பு வேறில்லை' என உரைக்கின்றான்.

பெண்கள் மடலேறுவது மரபாகக் கொள்ளப்படாமை கொண்டே இவ்வாறு கூறுகின்றான். ஈண்டுப் பெண்மையின் சிறப்புப் பெரிதும் போற்றக் கூடியதே. காம நோயால் தாக்கப்பட்ட தலைவன் நிலை இப்படியாக, அந்நோயினால் மோதப்பட்ட தலைவிபால் திரும்பலாம். நோயின் தாக்குதல் ஒன்றே எனினும் தனது மேன்மைக்கேற்ப அவள் மிருதுவாகப் பேசுகின்றாள்.

**நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்**
**மறையிறந்து மன்று படும்.** 58

ஐயோ! காமத்துக்குக் கண்ணில்லையா? "காமமானது, பெண்கள் நிறையினாலே அருமையுடையார்; அன்னார் மிகவும் கருணை செய்வதற்குரியார்; என்று கூடக் கருதி இரங்காது அவர் மறைத்தலையும் மீறி அம்பலமேறி வெளிப்பட்டுவிடுகின்றதே" என்று தனது நிலையைப் பொதுவாகப் பெண்ணினத்தின் மேலேற்றிச் சொல்லுகின்றாள். அவ்வாறு படர்க்கையில் பொதுவாகப் பேசிய தலைவி, அடுத்துத் தன்னையே முன்னிலைப்படுத்திக் கூறிக் கொள்ளுகிறாள்.

**அறிகிலார் எல்லாரும் என்றேயென் காமம்**
**மறுகின் மறுகும் மருண்டு.** 59

என்னுடைய காமமானது, எல்லோரும் இதுவரை என் நிலையை அறியவில்லை யென்று கருதியே தெருவின் கண்ணே மயங்கிச் சுற்றுகின்றது. என்னை இரகசியமாக இருக்கவிடாது வீதி வரை இழுத்து விட்டுவிட்டதே இந்தப் பொல்லாத காமம்! அந்தோ! இஃதென்னே?

-என்று இயம்பியவள் மேலும் சொல்லுகிறாள்; இந்த ஊரார் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்; அவர்கட்கு என்ன தெரியும்?

**யாம்கண்ணிற் காண நகுப, அறிவில்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு.** 60

எமது கண்ணுக்கு முன்னேயே எம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்! அறிவில்லாதவர்கள் அவர்கள்! நாம் பட்ட நோயை அவர்கள் அடையாமைதான் அவர்கள் அறியாமை நகைப்பிற்குக் காரணம்! அனுபவமிருந்தால் இப்படிச் சிரிப்பார்களா? பேதைகள்! என்று கூறித் தன் காம நோயை நாண் துறந்து வெளிப்படுத்துகின்றாள் தலைவி.

# 7. அலர் அறிவு உறுத்தல்

ஏழாவது அதிகாரம் 'அலர் அறிவு உறுத்தல்' என்பது. காமத்துப்பால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்னையது களவியல். பின்னையது கற்பியல். களவியல் ஏழு அதிகாரங்கள் கொண்டது. கற்பியல் பதினெட்டு அதிகாரங்கள் கொண்டது. முதலேழுங் களவியல். களவியலின் கடைசி அதிகாரம் இது. காமத்துப்பால் ஒரு காதல் மணநாடகம் போலவே ஆக்கப் பெற்றிருக்கிறது.

ஓர் உயர்தகையாளை ஒருவன் கண்டான் இன்பமயமான ஒரு தனியிடத்தில்; அவ் அணங்கினால் தாக்குண்டு கலக்கம் எய்தினான்; அம்மாதரசி மனக் குறிப்பைச் சீர் தூக்கினான்; அவளை முற்றும் உணர்ந்தான். அக்கட்டழகியும் அவன் மீது காதல் வைத்தாள். கூட்டுறவு நிகழ்ந்தது. அம்மெல்லியல் சேர்க்கையால் மகிழ்ச்சிப் பெருங் கடலைக் கண்டான் அவள் காதலன். தனக்கே இனிய அப்பெண் மானின் தனி நலத்தைப் புகழ்ந்து பாராட்டினான் வள்ளுவனார் இன்ப இளைஞன். பிறகு அப் பருவ மங்கையின் இள நலம் பருகிய அவன், காதலின் சிறப்பை உணர்ந்து களிப் பெய்தினான்; அதன் பின் நாணம் என்பதையே துறந்து வாய் திறந்து அயலறியப் புலம்பினான். தன் காதலனிடம் நுகர்ந்த புத்தின்பத்தால் அப் பெண்ணமுதுகூடத் தன் விரகங் கரையழிந்து வாய் திறந்து விட்டாள். அதன் பிறகு அலர் எழுகின்றது. காரியம் இவ்வளவு முற்றிய பின் அலர் எழுவதில் வியப்பு ஒன்றுமில்லையன்றோ?

அலர் பற்றிக் கூறுவதுதான் இவ்வதிகாரம். அலர் என்பது பிறர் கூறும் புறங்கூற்று. இவர்தம் புதிய காதல் வாழ்வைக் கண்டார் ஊரார். கண்டால் என் செய்வார்கள்! இதில் ஊரார் செயல் அன்றும் இன்றும் என்றும் ஒரே படிதான். "இவர்கள் இருவரும் இப்படியாகி விட்டார்கள்; களவு வழியில் இன்பம் துய்க்கிறார்கள்" என்று பலவாறாக ஆங்காங்கு ஊரார் வாயிலிருந்து சொற்கள் புறப்பட்டன. இப்புறங்கூற்றை - அதாவது அலரைக் காதலர் அறிவுறுத்திக் கொள்ளுதல்தான் அலர் அறிவுறுத்தல் என்பது. பிறர் கூறும் அலரைத் தங்கட்கு நன்மை செய்ய வல்லதாகக் கருதுகின்றார். ஆம்! அலர் தோன்றியமையால் இவ் அதிகாரத்தோடு களவியல் முடிகின்றது. இனி மணம் நடந்துவிடும். பிறகு கற்பியல் தொடங்கும்.

ஆசிரியர் அலர் அறிவுறுத்தலில் முதலைந்து குறள்களை ஆண் கூற்றாகவும் பின்னைந்து பாக்களைப் பெண் பேச்சாகவும் ஆக்கி யிருக்கின்றார், தொடக்கத்தில் அலரை அறிந்த தலைவன் சாற்றுகின்றான்:

**அலர்எழ ஆருயிர் நிற்கும்; அதனைப்**
**பலர்அறியார் பாக்கியத் தால்.** 61

'எங்கள் காதல் ஊரார் வாய்த் தூற்றுதலாக வெளிக் கிளம்புவதாலேயே ஆருயிர் நிலை பெற்றிருக்கிறது; அவ் உண்மையை நானே அறிவேன்; அது எனது பாக்கியத்தால்" பாக்கியமில்லாத பலர் அதனை அறியமாட்டார்' என்று கூறிய அவன் பின்னும் பகர்கின்றான்:

**மலரன்ன கண்ணாள் அருமை அறியாது**
**அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர்.** 62

'மலர்போலுங் கண்ணையுடைய எனக்கு இனியாளின் அருமையை அறியாமல் இந்த ஊர் எங்கட்குப் புறங்கூறுதலைத் தந்தது. ஊர் தந்த அலராலேயே அருமையுடைய அவளை எல்லோரும் காண எளிதில் விரைவாக நான் அடையப் போகிறேன். ஊரின் அலர் எனக்குப் பெருந்துணை செய்கின்றது. அது மட்டுமா?

**உருஅதோ ஊரறிந்த கௌவை ; அதனைப்**
**பெருஅது பெற்றன்ன நீர்த்து. 63**

'எங்கள் சேர்க்கை ஏன் பிறருக்குத் தெரியாதிருக்க வேண்டும்? அது தெரிந்தது நல்லதாயிற்று. எங்கள் கூட்டுறவை ஊர் அறிந்ததால் உண்டான (கௌவை) அலரானது எனக்குப் பொருந்துவதொன்றே. இக்கௌவையால் என் மனம், அதனை - அவர் கூறும் இன்பத்தை, பெருஅது - பெருமலிருந்தும். பெற்றவன் - பெற்றதைப் போலும், நீர்த்து - நீர்மையை யுடைத்தாகின்றது. ஊரார் அலரால் எனது வாழ்வில் முதன் முதலில் பெற்ற புத்தின்பத்தால் எவ்வாறு களிப்படைந்தேனோ அவ்வளவு களிப்பை அடைகின்றேன். காரணம் அவ்வின்பத்தின் நிலைபேறு கிட்டி விட்டமையாலேயே.'

**கவ்வையால் கவ்விது காமம் ; அதுவின்றேல்**
**தவ்வென்னும் தன்மை யிழந்து. 64**

'என்னுடைய காமமானது இவ்ஊரார் பேச்சினாலேயே விளங்கித் தோன்றுகிறது ; அது இல்லையாயின் தன் இயல்பு குறைந்து ஒருமாதிரியாக ஆகிவிடும். என் இன்பத்தை மலர்வித்த அலர் நல்லதேயன்றோ?"

**களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் ; காமம்**
**வெளிப்படுந் தோறும் இனிது. 65**

கட்குடியர்க்குக் களிக்கும் போதெல்லாம் கட்குடிப்பதில் இனிதே விருப்பம் செல்லுமாறுபோல, என்னுடைய இன்பமானது ஊராரால் தூற்றப்பட்டு வெளியாகும் போதெல்லாம் நான் இன்பத்தை அடைகின்றேன்.

என்றின்ன பலவாறு அலர், தனக்குச் செய்த பேருதவிக்கு இறும்பூ தெய்துகின்றான் தலைவன். இனி அலர் பற்றிய தலைவி கூற்றின் நயத்தை நோக்கலாம்.

**கண்டது மன்னும் ஒருநாள் ; அலர்மன்னும்**
**திங்களைப் பாம்புகொண் டற்று. 66**

'நான் என் காதலனைக் கண்டதோ ஒரே ஒரு நாள். ஆனால் அலரோ, திங்களைப் பாம்பு கொண்ட கதை எவ்வளவு பரந்து விளங்குகின்றதோ அவ்வளவுபெரிதாகஇருக்கிறது. எனவே, இவ்வளவு ஊரறிந்தபின் இனி மணத்துக்கு விரைதலே முறை.'

**ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்**
**நீராக நீளும்இந் நோய்.** 67

காமநோயான பயிருக்கு, ஊரார் அலர், எருவிட்டு உரம் செய்வது போலிருக்கிறது? ஊரார் பேச்சுக்கு அஞ்சி அன்னை சுடுகின்ற சொல், அப்பயிருக்கு நீர் விடுவது போன்றிருக்கிறது. எருவும் நீரும் இடையறாது இட்டால் பயிர் எப்படி நீண்டு வளருமோ அங்ஙனம் காம நோயாகிய பயிர் நீண்டு வளர்ந்து செல்கின்றது. 'மந்திரமில்லை வேறோர் மருந்தில்லை மையல் நோய்க்கு' அந்நோய் பெரு மரமாவதன்முன் அதற்குரிய வைத்தியனாகிய இன்பச் செல்வனைச் செவ்விதின் அடைதலே தகுதி.

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால், கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்.** 68

ஓகோ! ஊரார் இப்படியாகக் கருதுகின்றார்கள்! இது பெரிய அறியாமையல்லவா? தாங்கள் அலராகத் தூற்றிக் கொண்டேயிருந்தால் நாங்கள் அஞ்சி இன்பத்தை அவித்து விடுவோம் என்று நினைக்கின்றார்கள்? இது ஆகாத காரியம். தங்கள் அலரால் எங்கள் காமத்தை அவித்துவிடுவோம் எனக் கருதுதல், நெய்யை வார்த்து நெருப்பை அணைத்து விடமுயன்றவர் செயலேயன்றோ? நெய்யைச் சொரிந்தால் நெருப்பு நீளுமேயன்றி மாய்ந்து விடாது. அலராகிய நெய்யினால் எங்கள் காமத் தீ கொழுந்து விட்டு எரியுமேயன்றி நின்று விடாது என்று கூறிய தலைவி, உடனே எதையோ நினைந்தவள் போல் பெருமூச்சு விடுகிறாள். காதலனைக் காணாமைக்கு இரங்குகின்றாள்.

**அலர்நாண ஒல்வதோ, அஞ்சலோம் பென்றார்**
**பலர் நாண நீத்தக் கடை.** 69

‘காதலித்த அன்று அஞ்சாதே, விரைவில் மணப்பேன் என்று சொன்ன அவர், கண்டார் பலரும் வெட்க மடையும் விதம் என்னை நீத்துப் பிரிந்து சென்ற பின் அலருக்கு நாணி ஆவதென்ன ?’ எனக் காதலன் பிரிவு குறித்துத் துயரடைகின்ருள். இருக்கட்டும். இனி விரைவில் மண வினை நேரும். ஊரின் அலர் பெரிதாகி விட்டதால் இனி ஊரறிய விரைவில் நாங்கள் ஒன்று கூடுவது நிச்சயம் என மகிழ்கின்ருள்.

**தாம்வேண்டி நல்குவர் காதலர் ; யாம்வேண்டும்**
**கௌவை எடுக்கும்இவ் ஊர்.**

நாம் விரும்பும் அலரை இவ்வூர் எடுக்கின்றது. ஆதலால் நாம் வேண்டிஞல் காதலர் இனிதின் உடன்படுவர். எனவே ஊரின் அலர் நமக்கு மிகவும் நன்ருயிற்று, எனக் கருது கிருள் தலைவி. அலரின் முடிவு காதலர் இருவரையும் காதல் கனிந்த முழுச் சீர்திருத்தத் திருமணத்தால், ‘கவவுக்கை ஞெகிழாமல், தீதறுக என ஏத்திச் சின்மலர் கொடுதூவி’ச் சேர்த்து வைத்தது என்று செப்பவும் வேண்டுமோ ?

# கற்பியல்

## 8. பிரிவு ஆற்ருமை

கனி தரு சோலையில் கண்டு காதலித்துக் 'கந்தருவ முறைமையினுல் கடவுளர்க்குங் கிடையாத காமங் துய்த்த' காதலரிருவரும் கடிமணம் புரிந்து கொண்டனர். மணம் புணர்ந்து இல்வாழ்வாம் இன்ப வாழ்வு நடத்துங்கால் இருவருக்கும் பிரிவு நேர்கின்றது. காதலர் பிரிவு, ஆற்ருமை நல்க வல்லது எனச் சொல்லவும் வேண்டுமோ ? அப் பிரிவு பொருத தன்மையைக் கூறும் அதிகாரம் பிரிவாற்ருமை என்பதாகும். இது காமத்துப் பாலின் எட்டாவது அதிகாரம் ; கற்பியலின் முதல் அதிகாரம். முந்திய அதிகாரங்கள் ஏழும் களவொழுக்கம்பற்றி நிகழ்ந்தமையால் களவியலின்கீழ் வைக்கப்பெற்றன. மணம் முற்றிய பின்னிகழ்ச்சி கூறும் பிரிவாற்ருமையை ஆதியாகக் கொண்ட மற்றைய பதினெட்டு அதிகாரங்களும் கற்பியலின்கீழ் வருகின்றன. 'கற்பு - இயல், கற்பினது தன்மை.

பிரிவாற்ருமை அதிகாரத்தின் பத்துக் குறள்களையும் தலைவி கூற்ருகவே வள்ளுவர் வகுத்திருக்கின்ருர், பிரிந்து செல்வோன் தலைவனுகலின் அவனைத் தடைசெய்யும் முறையில் தலைவியின் ஆற்ருமையைத் தலைவி கூறுவது பொருந்தும் என்பது ஆசிரியர் கருத்து. பிரிவாற்ருமை பத்துப் பாக்களில் முதற் செய்யுள் பிரிவு கூறிய காதலனைப் பார்த்துக் காதலி தன் உள்ளக் கிடக்கை முற்றும் தோன்ற நேரா

கச் சொல்லிய முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது. இப் பாட்டுப் பலராலும் அடிக்கடி எடுத்தாளப்படுவதொன்று. இதனைத் தோழி கூற்றாக ஆக்கி வலிந்து பொருள் கொள்கின்றார் உரை ஆசிரியர் பரிமேலழகர். இது தலைவி கூற்று என்பதே என் கருத்து.

சேல்லாமை உண்டேல் எனக்குரை ; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 71

என்பதே அம் முதற்பாட்டு. 'சென்று வருகின்றேன்! விரைந்து வந்து விடுகின்றேன்; நீ பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்' எனத் தன் காதலியிடம், நேர்ந்த பிரிவைக் கூறி அவள் வாய் பார்த்து நிற்கின்றான் காதலன். 'செல்லாமை உண்டேல் எனக்குரை :—பிரிந்து போவதில்லையென்ற ஒன்று இருக்குமானால் அதை என்னிடம் சொல்; மற்று.- நான் சொல்லும் அது வல்லாத இன்னொன்றாகிய, நின் - உன்னுடைய, வல்வரவு :—விரைந்து வருகின்றேன் என்றதை, வாழ்வார்க்கு உரை :—நீ திரும்பி வரும்போது உயிர் வாழ்வார் யாராவது இருந்தால் அவர்க்குச் சொல்; என்றாள் காதலி. இவ்வாறு - இவ்வளவு கடுமையாக - உருக்கமாக - காதல் ஒழுக—காதலி காதலனிடம் கூறமுடியுமே யன்றித் தோழி சொல்லினாள் என்றல் எவ்வாறு பொருந்தும்? தவிர, 'செல்லாமை யுண்டேல் எனக்கு உரை என்பதில் எனக்கு என்ற சொல் காதலியின் தனியுரிமை யல்லவா? தனது தலைவியைக்கூடச் சேர்த்துக் கொள்ளாமல் தன்னை மட்டும் முன்னிலைப் படுத்தி எனக்கு எனத் தோழியுரைத்தாள் என்றல் பொருத்தமின்று. தோழி தன் தலைவியின் காதலனிடம் அவ்வளவு வேறுபாடு இல்லாமல் தன்னைத் தலைவியாகவே கருதி நடந்து கொண்டாள் என்று கூற நான் விரும்பவில்லை. தலைவியே கூறுவதாகக் கொள்வதில் தவறொன்றுமில்லை. தலைவியிடம் தன் பிரிவை ஒருவாறு வெளியிட்டுத் தேற்றப்பார்த்த கணவன், மனைவியின் நிலை கண்டு இரங்கிக் கலக்கம் எய்தி நின்றான். அப்போது தலைவி தோழியை நோக்கிப் பகர்கின்றாள்:

**இன்கண் உடைத்தவர் பார்வல்; பிரிவஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு.** 72

'ஒரு காலத்து அவருடைய பார்வை இன்பம் உடைத்தாயிருந்தது. இன்று அவருடைய சேர்க்கை பிரிவரென்னும் அச்சத்தால் துன்பத்தைத் தாராநிற்கின்றது'. அதாவது, அவரை நான் அடைவதற்கு முன் அவருடைய அருள் நோக்கே அவரை அணுகப் போகின்றேன் என்ற காரணத்தால் இன்பு கூட்டியது; இன்று அவரோடு சேர்ந்து வாழ்கின்றேன் எனினும் சேராத காலத்திருந்த இன்பம் இல்லை; பிரிந்து போகப் போகின்றார் என்ற அச்சத்தாலாகிய துன்பம் பெரிதாக இருக்கின்றது; சேராத காலத்து இன்பமும் சேர்ந்த நாளில் துன்பமும் தோன்றுவது வியப்பல்லவா? அவர் என்மாட்டு அன்புடையார் என்று தெளியவே மாட்டேன்.

**அரிதரோ தேற்றம்; அறிவுடையார் கண்ணும்**
**பிரிவோர் இடத்துண்மை யால்.** 73

'என்னுடைய நிலையையே நன்றாக அறிதலையுடைய என் காதலரிடத்துக்கூட ஒரு சமயம் பிரிவு உண்டாக நேர்தலால் என் காதலர்கூட என்பால் அன்புடையார் என்று தெளிதல் அரிதாக இருக்கிறது'

**அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தேளித்தசோல்**
**தேறியார்க்கு உண்டோ தவறு.** 74

'காதலி மீது கருணைகாட்டி, அஞ்சாதே, நின்னைப் பிரியேன்' என்று கூறிய காதலரே பிரிவாரானால் காதலர் பேச்சை நம்பியிருந்தவர்பால் குற்றமுண்டோ? சொன்ன சொல் மீறிப் பிரிந்தது குற்றம்; பிரிவை ஏற்றார்பால் குற்றமொன்றுமில்லை, எனத் தோழியிடம் தனது தூய தன்மையைப் பிறர் மேல் ஏற்றிக் கூறினாள். அவ்வாறு கூறிய தலைவி, ஆற்றாமை பொங்கியெழுதலால் தோழியிடம் பிரிவு நேராமல் நீ காப்பாயாக எனக் கூறுகின்றாள்.

**ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்! மற்றவர்**
**நீங்கின் அரிதால் புணர்வு.** 75

என்னுடைய உயிரைச் செல்லவிடாமல் நீ காப்பதாக இருந்தால் என் உயிரை ஆளுதற்கு அமைந்தார் என்னைப் பிரியாமல் தடுப்பாயாக! அவர் என்னை விட்டு நீங்குவாரானால் திரும்ப நான் அவரைச் சேர்தல் அரிது. ஏன்? அவர் திரும்பி வரும்வரை நான் எங்கு உயிருடன் இருக்கப் போகிறேன்? என்றிவ்வாறு, பிரிவுரைத்த நாயகன் சொல்லுக்கு ஆற்றாது புலம்பினாள் துணைவி. கணவனிடம் மனைவி நேராகச் சொன்னது முதற் பாட்டு ஒன்றுதான். அவள் நிலைமையையும் பேச்சையும் பிரிவுக்குரிய காரியத்தின் அவசியத்தையும் உணர்ந்த தலைவன், இனி அவள் முன் நிற்பதும் தேற்ற முயல்வதும் பயனற்றதெனக் கருதி மறைந்துவிட்டான். அதன் பின்னரே தோழியிடம் தலைவி இவ்வாறு பிரிவாற்றாமல் இரங்கியது. மேலும் சொல்லுகின்றாள் தலைவி தோழியிடம் இவ்வாறு; ஆம்! தோழியிடம் தவிர யாரிடம் சொல்லமுடியும்? கணவனையோ காணவில்லை.

**பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின், அரிதவர்**
**நல்குவர் என்னும் நசை.** 76

பிரிவு என்ற பொல்லாத உரையைச் சொல்லக்கூடிய அவ்வளவு வன்கண்மை யுடையவராக அவர் இருப்பாரானால் அவர் இனி வந்து ஏதும் சாதிப்பார் என்ற ஆசை வேண்டுவதில்லை எனக் கூறுகின்றாள். இந்த நிலையில் அவன்பாடு தேற்றும் வகையற்றவனாய் ஒருவாறு வெளியேறி விட்டான் என்பதைச் சில குறிகளால் அறிகின்றாள் தலைவி. ஓ! கோ! போய் விட்டானா! அவன் போனதை நான் அறிகின்றேன். அவன் பிரிவை, தோழி! நீ சொல்ல வேண்டாம்; எனது வளையல்கள் காட்டாவோ?

**துறைவன் துறந்தமை தூற்றாகோல்? முன்கை**
**இறைஇறவா நின்ற வளை.** 77

'எனது தலைவன் என்னைப் பிரிந்தமையை என் முன்கையி னது எல்லையைக் கடந்து வெளியே வந்த வளைகள் சொல்ல மாட்டாவோ?' என்று இயம்பினாள். என்றால் என்ன? கணவன் பிரிவறிந்தவுடன் உடம்பு இளைத்துப் போய் கைகள் மெலிய வளைகள் நெகிழ்ந்து விட்டன. 'நங்கை பயணம் நமக்கென்றுரைத்தளவில்......செங்கை வளைநெகிழ' என்றாரன்றோ ஒரு புலவர்? இவ்வாறு வளை இறவா நின்ற பிரிவாற்றாத் தலைவி, பின்னும் தனது பிரிவுத்துயரை உருக்கமான மொழிகளால் உரைத்து வருந்துகின்றாள்.

> இன்னாது இனனில்ஊர் வாழ்தல்; அதனினும்
> இன்னாது இனியார்ப் பிரிவு. 78

தம்மைச் சேர்ந்தோர் இல்லாத ஊரில் வாழ்தல் துன்பம் தருவது; ஆனால் அதைவிடக் கொடுமையான துன்பம் தருவது காதலர் பிரிவு. இஃதோர் கருத்து மிகுதியும் அமைந்த செம்பொருள்கொண்ட அழகிய பாடல். இன்ன பல கூறி வருந்திய தலைவிக்குத் தோழி தேறுதல் மொழிகள் கூறினாள். 'அம்மா! காமம் தீப்போல் வெதுப்பி விடும்; நீ ஆறுதலடைவாயாக!' என்றாள் தோழி. அப்படியா? நீ சொல்வது தவறு. தீக்குக் காமத்தைப்போல் அவ்வளவு ஆற்றல் ஏது?

> தோடிற்சுடின் அல்லது காமநோய் போல
> விடிற்சுடல் ஆற்றுமோ தீ? 79

நெருப்பு அதனைத் தொட்டால் சுடுமேயல்லால் காமமாகிய கொடிய நோயைப் போல் தன்னை விட்டாரைச் சுட ஆற்றாது; இக்காமநோய் தன்னைவிட்டு நீங்கினாரைத் தப்பாது சுடும் வன்மை படைத்தது. ஆதலான் காமநோய் நெருப்பினும் பொல்லாதது எனக் கூறுகிறாள்.

'ஏனம்மா! இப்படிப் பெருந்துயரடைகின்றாய்? அவசியமிருப்பின் இத்தகைய பிரிவு நேர்தல் இயல்பேயன்றோ? எத்தனையோபேர் இவ் உலகில் பிரிந்து வாழவில்லையா? நீ இவ்வாறு வருந்துதலாகாது' என்றாள் தோழி.

12660
031:1353:9
UNIVERSITY EXTENSION LIB

**அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்**
**பின்னிருந்து வாழ்வார் பலர்.** 80

பிரிவு உணர்த்திய அருமைக்கும் சம்மதித்து அதனாலுண்டாகும் துன்பநோயையும் பொறுத்து பிரிவையும் சகித்துப் பின்னும் இவ் உலகத்து உயிர் வாழ்வார் பலர் இருக்கின்றார்கள்! ஆம்! நீ சொல்வது உண்மைதான்! எனத் தோழியை நகையாடி உரைக்கின்றாள் தலைவி. அவ்வாறு வாழ்வோர் ஒருவருமில்லை யென்பது தலைவி கருத்து. அது தோன்றவே இப்பாட்டை எதிர்மறை முறையில் சொல்லுகின்றாள். தன் நிலைமையையே மற்றவர்மேல் ஏற்றுதல் ஓர் இயற்கையே யன்றோ? காதலர் பிரிவு போன்ற பெருந்துயர் நல்கவல்லது பிறிதில்லை யென்பதைத் தலைவி கூற்றாக ஆசிரியர் வள்ளுவர் நயம்பட உரைத்துவிட்டார்.

## 9. படர் மெலிந்து இரங்கல்

மணம் புரிந்த பின் காதலன் பிரிய அவன் பிரிவை ஆற்ருத காதலி, துன்பத்தால் மெலிவெய்தி வருந்துதல் பற்றி இவ்வதிகாரம் பகர்கின்றது. படர் :—துன்பம். மெலிதல் :—இளைத்தல். இரங்கல் :—வருந்துதல், நாயகன் பிரிவு, துன்பத்தைத் தருகின்றது; அதனுல் மெலிவை அடைகின்ருள்; வருத்தமுறுகின்ருள். அவள் தோழிபால் அவன் பிரிவு ஆற்ருமைப் படரைப்பகர்ந்து அலமருகின்ருள். 'நீ இப்படி வருந்துதல் தகுமா? நின் நாணத்துக்கு இஃது அடுக்காதே' என்ருள் தோழி. 'தோழி! நான் என் செய்வேன்!'

**மறைப்பேன்மன் யானிஃதோ நோயை ; இறைப்பவர்க்கு**
**ஊற்றுநீர் போல மிகும்.** 81

'இந்த நோயை யான் மறைத்துத்தான் பார்க்கின்றேன். ஆனுல் அது குறைகின்றதில்லையே! இறைக்கின்றவர்க்கு ஊற்று நீரானது எப்படிப் பெருகி வருமோ அவ்வாறு அதிகமாகி வருகின்றதே காமநோய்! யான் செய்யுமாறென்' என்ருள் தலைவி. 'சரி, இப்படியே புலம்பிக்கொண்டிருந்தால் ஊர் கேலி செய்யும்; ஆதலால் இத்துன்பம் வெளிப்படாமல் மறைக்க வேண்டும். இன்றேல் அவருக்குத் தூதாவது போக்குதல் வேண்டும்; இரண்டில் ஏதாவதொன்றைச் செய்தலே முறை, என்ருள் தோழி.

**கரத்தலும் ஆற்றேன்இந் நோயை ; நோய் செய்தார்க்கு**
**உரைத்தலும் நாணுத் தரும்.** 82

'நீ சொல்லும் இரண்டும் என்ருல் முடியவில்லை! இந் நோயைக் கரத்தலும் :—இந்த நோயை மறைத்தலும், ஆற்றேன் :—வல்லேனல்லேன். நோய் செய்தார்க்கு :—நோயை எவர் உண்டாக்கிச் சென்ருரோ, அவர்பால், உரைத்தலும் :—விஷயத்தை அறிவித்தலும், நாணுத்தரும் :—வெட்கத்தைத் தருகின்றது. என்ன சகி! உனக்குத் தெரியாதா? இதை நான் தூதுபோக்கிச் சொல்ல வெட்கமாக இராதா?" என்று கூறிய தலைவி பின்னும் பகர்வாள்.

**காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்**
**நோனு உடம்பின் அகத்து.** 83

காமமும் :—ஆசை நோயும், நாணும் :—அப்பிணியை எனக்கு நல்கியவரும் அது தீர்க்க வல்லவருமாகிய அவருக்கு அதை அறிவிக்க முடியாத எனது நாணமும், என் நோனு உடம்பின் அகத்து :—என்னுடைய ஒன்றுக்கொன்று மாறுபட்ட அவ் இருதுயரத்தையும் பொறுக்க மாட்டாத உடலின் கண்ணே, உயிர் காவாத்தூங்கும்:—உயிரைக் காவடித் தண்டாகப் பிடித்துத் தொங்குகின்றன. இனி இந்நிலையில் எனக்கு இறுதிக் காலமே போலும்! என ஏங்குகின்ருள் தலைவி.

இக்குறள் மிக நுணுகிய கருத்துப் படர்ந்தது. நாயகனைப் பிரிந்த நாயகி, பிரிவாற்ருமையால் பெருந்துயர் உறுகின்ருள். பிரிவோ ஆற்றுந்தரத்தினதாயில்லை. அதனுலாய காமநோய் ஒருபுறம் அழுத்துகிறது. அந்நோயை அது செய்தார்க் குரைத்தால் அந்நோயினின்றும் விடுதலை பெறலாம். ஆனுல் அவ்வாறு உரைக்கவொட்டாமல் தடுக்கின்றது நாணம். எனவே இன்னெரு பக்கம் நாணம் என்பது அவளை ஈடேற வொட்டாது கீழே பிடித்து இழுக்கின்றது. இதனை ஆசிரியர் அழகுறக் கற்பனை செய்கின்ருர். காமம், நாணம் ஆகிய இரண்டையும் இரண்டுநோயாக வர்ணிக்கின்ருர் வள்ளுவர். இரண்டு பெரும் பிணிகளையும் தாங்கமாட்டாமல் வருந்துகின்ற உடம்பினுள்ளே உள்ள உயிரை ஒரு காவடித் தண்டாக ஆக்கினுர். 'காவடித் தண்டு' என்பது தூக்கிச் செல்லும் காவடியின் குறுக்கேயுள்ள-

அதாவது நடுவே அமைந்த—தோளினிடையே சுமக்கப்படு கின்ற ஒருகோல். உயிராகிய அக் காவடிக் கம்பை, காமம் நாண் என்ற இருபொருளும் இருமருங்கும் பிடித்துப் போட்டி போட்டுத் தொங்குவதாக அலங்கரிக்கின்ருர் பேராசிரியர். அவ் இரண்டும் ஒன்றுக் கொன்று சமநிலே யில் தனித்தனியே ஒவ்வொரு பக்கத்தையும் பிடித்துப் பலங்கொண்ட மட்டுங் இழுத்து வெற்றிகளே விரும்பிஞல் அவ் விரண்டுக்கும் இடையே அமைந்த காவடித் தண்டாகிய உயிரின் நிலே என்னும்! இது மிக நயம்பட்ட கற்பனே.

இங்ஙனம் நவின்ற நாயகியை நோக்கி, 'அம்மா, காமம் கடல் போன்றது; அப்பொல்லாத பெரிய கடலே ஏற்ற தெப்பத்தைக் கொண்டு நீந்துதல் வேண்டும். என் ருள் சகி. 'ஆம், நான் உணர்கின்றேன்! காமம் கடல் போன்றதே!'

**காமக் கடல்மன்னும் உண்டே; அதுநீந்தும்**
**ஏமப் புணேமன்னும் இல்.** 84

'காமமாகிய கடல் என்னிடத்தே இருக்கின்றது. அதனே நீந்துதற்குரிய ஏமமாகிய தோணி என்னிடம் இல்லேயே! என் செய்வேன்! அந்தக் காமக் கடலே நீந்துதற்குரிய ஏமப் புணேயை நானடையுமாறு செய்வார் யாருமிலர்!' என்று தன் நாயகனே உடனே கொண்டு சேர்க்க முயலாத தோழி யைக் கடியுமுறையில் கூறுகிருள் தலேவி. பின் பாட்டால் தோழியை மிகவும் குத்துகின்ருள் தலேவி.

**துப்பின் எவனுவர் மற்கோல்; துயர்வரவு**
**நட்பினுள் ஆற்று பவர்.** 85

'நட்பினுள் துயர் வரவு ஆற்றுபவர்:—சிநேகமாக இருக்கு மிடத்திற்கூட துன்பம் உண்டாக்க வல்லவர், துப்பின் எவ னுவர்:—பகையாகுமிடத்து என்ன தான் செய்வாரோ?' இதன் கருத்தென்ன? நாயகி பிறரைக் கூறுவதுபோல் தோழியைக் கடிகின்ருள். தலேவனே விரைந்து கொணர்ந்து சேர்க்காமையால் தமக்குப் படர் தந்தாள் தோழியே எனக் கூறுகின்ருள். 'ஏ! சகியே! இவ்வளவு நட்புக்குள்ளேயே

இத்தகைய துன்பத்தை நீ செய்வாயானால் பகையினிடத்து யாதுதான் செய்யமாட்டாயோ? எனக் கடுகடுக்கின்றாள் என்பதே இக்குறளின் உட்பொருள்.

'அம்மா! பிறரை நோவதில் யாது பயன்! ஒன்றினால் இன்பமுற்றார் அதனாலாய துன்பத்தையும் நுகரத்தானே வேண்டும்? அதுதானே உலகியற்கை! காமநுகர் இன்பமும் அதுபெருத் துன்பமும் மாறிமாறித்தான் வரும்' என்று நயமாக ஒரு இடி இடித்தாள் தோழி. 'உனக்கு அப்படித்தான் இருக்கும்; படுகின்றவர்க்கன்றோ தெரியும்! காமத்தாலாய இன்பம் கடல் போல் அவ்வளவு பெரிதாகத் தானிருந்தது! ஐயமில்லை! ஆனால் இன்று அது பெருமையால் தோன்றும் துன்பம் அப்பெருங் கடலைவிட எத்துணையோ மடங்கு பெரிதாக இருக்கின்றதே!'

இன்பம் கடல்மற்றுக் காமம்; அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பேரிது. 86

'காமம் இன்பம் கடல் :—காமம் நுகருங்கால் அவ் இன்பம் கடல்போன்ற பெரியதே. அஃது அடுங்கால் :—அக்காமமே பிரிவினாலே கொல்லும்போது, துன்பம் அதனிற் பெரிது :—துன்பம் அக்கடலைக் காட்டிலும் பெரிதாக இருக்கிறது' என்றுரைத்த தலைவி மேலும் கூறுவாள்.

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்;
யாமத்தும் யானே உளேன். 87

(கடும்புனல் என்பது மிகுதியான நீரையுடைய கடலை உணர்த்தி நிற்கிறது.)

'காமமாகிய கடலை நீந்தினேன்; நீந்தியும் அக்கடலின் கரை கண்டேனல்லேன்; யாமத்தும் யானே உளேன் :—பேயும் உறங்கும் நள்ளிரவிற்கூட நான்மட்டும் ஒருதுணையுமின்றி இன்னும் இறவாது 'திடுதிடு' வென விழித்துக் கொண்டிருக்கிறேன். இந்த 'இரா' என்பது இருக்கிறதே! என்மாட்டு அது மிக இரக்கமற்றதாக இருக்கின்றது.'

**மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா**
**என்னல்லது இல்லை துணை.** 88

இரவானது உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் கருணை கூர்ந்து தூங்கச் செய்துவிட்டு, என்னைத் தவிர வேறுதுணையைப் பெருதிருந்தது. இரவு என்ற பொருளுக்கு நானே துணை! தனக்கு ஒரு துணை வேண்டும் என்பதற்காக என்னைப் பார்த்துப் பிடித்தது அந்த இரா! நல்ல துணையாகப் பொறுக்கியது அந்த இரா! இந்த எளியாள்தானு அந்தப் பொல்லாத இராவின் கண்ணுக்குத் தோன்ற வேண்டும்? அம்மம்மா! அந்த இரா கொடிது! கொடிது!!'

**கொடியார் கொடுமையில் தாங்கொடிய, இந்நாள்**
**நெடிய கழியும் இரா.** 89

'காதலனோடு இன்புற்றிருந்த நாட்களில் குறுகிய அளவுடையதாக இருந்து பிரிவுற்ற இந்நாளில் நெடியவாய் நீண்டு செல்கின்ற அந்தப் பொல்லாத இரா, பிரிந்துசென்ற கொடியார் செய்த கொடுமைக்கு மேலான கொடுமையுடையவா யிருக்கின்றன' என்று பலவாறு வருந்திக் கண்ணீரைத் தாரை தாரையாக வடித்தாள், பிரிவு எனுந்துயர் ஓர் உருக்கொண்ட மெல்லியல். 'அழாதே! அம்மா! அழாதே! கண்களின் பேரழகு அழிகின்றது' என ஆறுதல் கூறிய தோழியை நோக்கினுள்.

**உள்ளம்போன்று உள்வழிச் சேல்கற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னோவேன் கண்.** 90

'என் மனத்தைப்போல என் காதலர் இருக்கும் இடத்தே விரைந்து செல்ல வல்லனவாயின் என் கண்கள் இவ்வாறு வெள்ளமாகிய நீரில் நீந்தமாட்டா. உள்ளம் எவ்வளவு நீண்ட தூரமாயினும் பாய்ந்தோடி விடுகின்றது. உள்ளம் அத்தொழிலில் வல்லது. ஆனால் கண்களோ அவ்வலிமை பெற்றிருக்கவில்லை. அது முடியாமையால் ஓயாது அழுது அழுது கரைகின்றன.

எனத் தலைவி, தனது படரை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்ருள். அடுத்த அதிகாரம் 'கண் விதுப்பு அழிதல்' என்பது. இந்த அதிகாரத்தின் கடைசிப் பாட்டு அடுத்த அதிகாரத்துக்குத் தோற்றுவாயாக அமைந்திருக்கிறது. கண் விதுப்பை, அதாவது காதலனைக் காண்பதற்கு கண் விரைவுப் படுவதை, 'கண் விதுப்பழித'லின் முன் அதிகாரமாகிய 'படர் மெலிந்து இரங்கல்' என்ற இந்த அதிகாரத்தின் பத்தாவது பாட்டில் தொடங்கிக் காட்டுகின்ருர் ஆசிரியர். இவ்வாறு தோற்றுவாய் வேறு சில இடங்களிலும் உள.

# 10. கண் விதுப்பு அழிதல்

'கண் விதுப்பு அழிதல்' என்பதற்கு, 'கண்கள் துணையைக் காண வேண்டும் என்ற விரைவால் வருந்துதல்' என்பது பொருள். தன்னைப் பிரிந்து சென்ற நாயகனைக் காண வேண்டும் என்ற ஆசையால் கண்கள் அவசரப்பட அதனால் வருந்துந் தன்மை இவ்வதிகாரத்துக் கூறப்படுகிறது. இவ்வதிகாரத்துள்ள பத்துப் பாட்டும் தலைவி வாயிலாகவே சாற்றப்படுகின்றன. தலைவன் கூற்று ஒன்றுகூட இல்லை. பிரிந்த காதலர்க்குப் பிரிவுத் துயர் இருவர்க்கும் ஒரே படித்தாகலாலும் ஒருவரை ஒருவர் காண விரைதல் இருவர்க்கும் ஒரே மாதிரியாக இருக்க அமைத்தல் பொருந்துவதே ஆகலானும் இவ்வதிகாரத்துள் இருவர் கூற்றும் இணைத்திருக்கலாம். அவ்வாறு இல்லை. பொதுவாகவே பிரிவுத் துயரைப் பெண்கள்பால் அதிகமாக ஏற்றிச் செல்கின்றது திருக்குறள். இங்குத் தலைவி கூற்றாக ஆசிரியர் கூறும் கண் விதுப்பு அழிதலின் பாக்களில் மல்கிக் கிடக்கும் சொல்லடுக்கையும் பொருள் பொலிவையும் கருத்து நயத்தையும் ஆராயலாம்.

தோழி சொல்கின்றாள் தலைவியைப் பார்த்து :—"தவள ஒண்மதி யுள்வைத்த தண்மைசால் தடங்கண்" அழகு அழிகின்றதே; "அஞ்சனமென வாள் அம்புகளிடையே நஞ்சினை" இட வல்ல எனக்கு உங்கள் கண்ணினது நிலைமையைப் பொறுக்க முடியவில்லையே! நீங்கள் "ஆருகி இரு தடங்கண் அஞ்சன வெம்புனல் சோர" நிற்பது தகாது! அடக்குக!! அடக்குவீராக!!!

தலைவி செப்புகின்றாள் :—நான் செய்யக் கிடப்பதென்? என்றால் ஒன்றுமில்லை. எல்லாம் இந்தப் பொல்லாத கண்களால் வந்த வினை ! அந்த மனிதரை எனக்குக் காட்டியது இந்தக் கண்கள். இந்தக் கண்கள் அவரைக் காட்டவில்லையேல் எனக்கு இன்று படும் பிரிவுத் துயரே இராது. என்னையும் துன்பத்திற்குள்ளாக்கி இந்தக் கண்கள் தாமும் துன்புறுகின்றன.

**கண்தாம் கலுழ்வது எவன்கொலோ ! தண்டாநோய்**
**தாங்காட்ட யாங்கண் டது.** *91*

'தண்டாநோய் :—இக்குறையாப் பிணியை, யாங்கண்டது :—நாம் அறிந்தது, தாங்காட்ட :—தாம் (கண்கள்) எமக்குக் காதலரைக் காட்டியமையாலேயே. அவ்வாறாக, கண் தாம் :—கண்கள், (அன்று எமக்கு அவரைக் காட்டிய கண்கள்) கலுழ்வது :—(இன்று அவரைக் காட்டச் சொல்லி) அழுவது, எவன் கொல் :—என்ன கருதி? அன்று எமக்கு எவரை அந்தக் கண்கள் காட்டியனவோ, அவரை இன்றும் அந்தக் கண்கள்தாம் காட்ட வேண்டுமேயன்றி என்றால் ஆகாது அது.'

**தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்**
**பைதல் உழப்பது எவன் ?** *92*

'தெரிந்து உணரா :—(பின்னால் வரும் காரியத்தை) ஆராய்ந்து அறியாமல், நோக்கிய உண்கண் :—(அன்றையத்தினம்) அவரைப் பார்த்து நின்ற மையுண்ட கண்கள், பரிந்து உணரா :-(இது நம்மால் நேர்ந்ததாகலின்) பொறுத்துக்கொள்தல் வேண்டும் என்று பிரித்துத் தெரிந்து கொள்ளாமல், பைதல் உழப்பது எவன் :-வருத்தத்தை அடைவது எதற்காக? முதலிலேயே ஆராயாமல் அவரைப் பார்த்த தவறு, கண்களைச் சேர்ந்தது. இப்படி அவர் பிரிந்து போய்த் துன்பம் செய்வார் என்பதைக் கண்கள் முன்னரே அறிந்தில. பின் நிகழ்வதறியாது தவறு செய்த கண்கள், தம் தவறுதலினால் நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளவாவது வேண்டும். இரண்டிடத்தும் கண்கள் தவறு செய்தன.

**கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்;**
**இதுநகத் தக்க துடைத்து.** 93

'கண்கள் அந்தக் காதலரை அன்று விரைவாகத் தாமே பார்த்துவிட்டு இன்றும் அக்கண்கள் தாமாகவே இருந்து அழுகின்றன ; இக்காரியம் சிரிக்கத் தகுந்த ஒன்றேயாகும்'

**பெயலாற்ரு நீருலந்த உண்கண், உயலாற்ரு**
**உய்வில்நோய் என்கண் நிறுத்து.** 94

'உண்கண் உயல் ஆற்ரு உய்வில் நோய் என் கண் நிறுத்து:—கரு மை குடித்த கண்கள், அன்று நான் பிழைக்கமாட்டாமைக்கு ஏற்ற நீங்காத பிணியை என்னிடத்தே பொருத்தி வைத்துவிட்டு, பெயல் ஆற்ரு நீர் உலர்ந்த :—இன்று அழக்கூட முடியாமல் தம்மிடத்துள்ள நீர் முழுமையும் இழந்து வற்றிவிட்டன.

**படலாற்ருப் பைதல் உழக்கும், கடலாற்ருக்**
**காமநோய் செய்தஎன் கண்.** 95

'கடல் ஆற்ரு :—கடல்கூட எதிர்த்து நிற்க முடியாத (அவ்வளவு பெரிய)காமநோய் :—ஆசைப்பிணியை, செய்த என்கண் :—எனக்கு உண்டாக்கிய என் கண்கள், படல் ஆற்ரு :—தூங்க மாட்டாமல், பைதல் உழக்கும் :—துன்பத்தை அநுபவியா நின்றன. ஆம் ! தினையிட்டவன் தினையறுப்பான் ; வினையிட்டவன் வினைதானே அறுப்பான்? என் கண்கள் எனக்குச் செய்த தீவினையின் பயனை நுகர்கின்றன.

**ஓ ! ஓ ! இனிதே ! எமக்கிந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட் டது.** 96

'ஓ ! ஓ ! வேண்டும் ! வேண்டும் ! இனிது ! நல்லது ! எமக்கு இந்தக் காம நோயைத் தந்த கண்களாகிய அவைகளும் இத் துன்பத்திலே மாட்டிக் கொண்டன. பின்னை என்ன ? ஒருவருக்கு இப்படிப்பட்ட கொடிய துயரை உண்டாக்கினுல் தாமும் இமை கொட்டாமல் குந்தியிருந்து அழவேண்டுவது தான் !'

**உழந்துழந்து உண்ணீர் அறுக! விழைந்திழைந்து**
**வேண்டி யவர்க்கண்ட கண். 97**

'விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் :— விரும்பி உள்நெகிழ்ந்து காதலித்து அவரைக் கண்ட கண்கள், உழந்து உழந்து உள்நீர் அறுக :—துன்பத்தை நுகர்ந்துநுகர்ந்து தம்மிடம் உள்ள நீர் வற்றிப் போவதாக!'

என்றிவ்வாறு தன் கண்களேயே கடிந்து பல படப் பேசினுள் தலேவி. அவள் மேலும் சொல்லுகின்ருள்.

**பேணுது பெட்டார் உளர்மன்னே கோண்கனேக்**
**காணுது அமைவில கண். 98**

கொண்கனே :—கணவனே, காணுது அமைவில் கண் :— காணுமல் பொருந்துகின்ற அல்ல கண்கள், பேணுது பெட்டார் உளர்மன்னே :—ஒருவர் தம்மை விரும்பாத நிலேமையில் தாம் அவரை விரும்பினுர் இவ் உலகத்து இருக்கின்றனரோ? அவர்தாம் பிரிந்து போய் விட்டமையாலும் இத்துணே நாளும் வாராமையாலும் விரும்பவில்லேயென்று உறுதியாகின்றது. விரும்பாத அவரைக் காண இக்கண்கள் ஏன் நின்று அலேகின்றன? இக்கண்கள் எப்போதும் தொல்லேயையே தந்து நிற்கின்றன.'

**வாராக்கால் துஞ்சா, வரின்துஞ்சா; ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண். 99**

'வாராக்கால் துஞ்சா :—கணவன் வராத போதும் தூங்கமாட்டா! வரின் துஞ்சா :—வந்த இடத்தும் தூங்கமாட்டா; ஆயிடை :—இவ்விரண்டு வழியும், ஆர் அஞர் உற்றன கண் :—நிறைந்த துன்பத்தையே அடைகின்றன கண்கள். நாயகன் வராத காலத்து அவனேக் காணவேண்டும் என்ற ஆசையால் துயில் மறுக்கின்றன. அவன் வந்திருக்கும்போதோ எங்கே பிரிந்து போய்விடுவானே என்ற அச்சத்தால் அவன் காட்சி யின்பத்தை விடுத்துத் தூங்கமாட்டேன் என்கின்றன. இவ்வாறு இருவகையாலும் என் கண்கள் பெருந் துன்பத்திற்கே இலக்காகி நிற்கின்றன;

என்றிவ்வாறு ஒருவகையில் கண்கட்குப் பரிந்தும் உருகுகிருள் தலைவி. தலைவியின் நிலைகண்ட தோழி, 'அம்மா! நினக்கு இது அடுக்காது! மறைக்க வேண்டிய பொருளை மறைக்காமல் நீ இப்படி வெளிக்குக் காட்டுவாயாளுல் ஊரார் இந்தப் பிரிவை ஆற்ருத நின்னையும் தூற்றுவார்; பிரிந்த நின் ஆருயிர்த் துணைவரையும் இகழ்வார்; எனவே துயரை மறைப்பாயாக!' என்ருள்.

மறைபேறல் ஊரார்க்கு அரிதன்ருல், எம்போல்
அறைபறை கண்ணுர் அகத்து. 100

'எம்மைப் போலப் பறையறைகின்ற கண்களையுடையார் உள்ளத்தே அடக்கிய மறை பொருளை அறிந்துகொள்தல் ஊரார்க்கு அருமையேயில்லை. கண்கள் உள்ளக் கிடக்கையைக் கண்ணீரால் எல்லோரும் அறியத் தமுக்கு அடித்து வரும்போது ஊரார் ஏன் அறியமாட்டார். இக்கண்கள் இருக்கும் வரை ஊரார்க்கு எதனையும் மறைக்க முடியாது' என்று கூறுகின்ருள் தலைவி.

இவ்வாறு பலபடியாக உலகியற்கையை -உள்ளக்கிடக்கையை - உண்மை நிலையைத் தலைவியின் கண்விதுப்பு அழிதல் வாயிலாகக் காதல் உணர்ச்சி பொங்கியோடப் பிரிவுத் துயர்ப் பெருக்கை அலங்கரிக்கின்ருர் ஒப்பில் புலவர்.

## 11. பசப்பு உறு பருவரல்

பசப்பு என்பது பிரிவாற்ருமையால் வரும் ஓர் நிற மாற்றம். நாயகன் பிரிவை ஆற்ருத நாயகி அதனுலாய நிற வேறுபாட்டால் அடையும் துன்பம் பற்றிக் கூறுவது இவ் அதிகாரம். பருவரல்:—துன்பம். பிரிவினுல் பசலை என்ற ஓர் நிறத்தை யடைந்து தலைவி வருந்துதல் கூறும் பசப்புறு பருவரல் என்னும் இவ் வதிகாரத்துள்ள பத்துப் பாக்களும் தலைவி கூற்றே. மேனி பசந்த தலைவி கூறுகின்ருள் :—

**நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் ; பசந்தஎன்**
**பண்பியார்க் குரைக்கோ பிற.** 101

'என்னை விரும்பி யேற்ற தலைவருக்குப் பிரிவுக்கு அன்று உடன்பட்டேன் ; இன்று நிறம் பசந்த என் இயல்பை யாரிடம் முறையிடுவேன் ? முதலில் என்னை நயந்த அவர், பின்னர் அவர் பாட்டுக்குப் பயணம் வைத்துக்கொண்டார். நானும் அவரைப் பிரிய விட்டுவிட்டதால் எப்படியோ அவர் பிரிவை உடன்பட்டேன் என்பது நிச்சயம். இப்பசப்பு வந்து ஏன் என் பிராணனை வாங்குகிறது ? இந்தப் பசப்புக்கு எவ்வளவு ஆணவம் !'

**அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்**
**மேனிமேல் ஊரும் பசப்பு.** 102

'அவர் தந்தார் என்னும் தகையால் :—தன்னை உண்டாக்கினவர் அவர் என்ற தகுதியை எண்ணி அதனுல், என் மேனி மேல், இவர் தந்து ஊரும் பசப்பு :—என் உடம்பின்

மேல் ஏறிச் சவாரி செய்கின்றது இந்தப் பசப்பு என்பது. அவருடைய சலுகை யிருந்தால் எதுதான் செய்யக்கூடாது என்று கருதுகின்றது இந்தப் பசப்பு. அவருக்குச் சொந்தமானது இந்த உடம்பு. ஆதலின் தன் உடைமை மேல் அவரே ஏவினுல் அகப்பட்ட சந்தர்ப்பத்தை ஏன் விடல் வேண்டும் என்று கருதிப்போலும் பசப்பானது, முற்றும் தன் ஆட்சியைச் செலுத்துகிறது. என் மேனியில் பசப்பு ஏருத இடம் எங்கு இருக்கிறது? யாண்டும் பசப்பின் திருவிளையாடலே. தந்தார் அவர் என்ற தகையொன்றே அதற்கு இவ்வளவு ஊக்கத்தைக் கொடுத்து விட்டது. அதனுலேயே தன் பெருமையையும் உரிமையையும் நிலை நாட்டி அந்தப் பசப்பு என் மேல் ஆட்சி செலுத்துகின்றது. நல்ல காதலர் அவர்!

**சாயலும் நாணும் அவர்கோண்டார், கைம்மாரு**
**நோயும் பசலையும் தந்து.** *103*

'சாயலும் நாணும் அவர் கொண்டார்:—என் அழகையும் நாணத்தையும் அவர் எடுத்துக் கொண்டு விட்டார். எப்போது? என்னைப் பிரிந்து செல்லும்போது. ஆனுல் அவர் என்னிடம் கொள்ளை யடித்துக் கொண்டு போன என்னுடைய எழில், நாண் என்ற இரண்டு உயரிய பொருள்கட்கும் மாருக அவர் ஏதும் தந்து போகவில்லையா? தந்தார் இரண்டு பொருள்களை. அவை எந்த இரண்டு பொருள்கள்? அவைதாம் நோய், பசலை என்ற இரண்டு. காம நோயையும் பசலை நிறத்தையும் எனக்குக் கைம்மாருகத் தந்துவிட்டு, சாயல், நாண் என்ற என்னிடம் முன் இருந்த இரண்டையும் அவர் கவர்ந்து சென்று விட்டார். எனவே என்னிடம் முன்னே இருந்த சாயலும் நாணும் இன்று இல்லை. இப்போது என்பால் இருப்பன என் அருமைக் காதலர் தந்து போன நோயும் பசலையுந்தான். அவர் என்னுடைய உயர்ந்த பொருள்களை எடுத்துக் கொண்டு எவ்வளவு தாழ்ந்த பொருள்களை எனக்கு நல்கிய போதிலும் எனக்கு மட்டும் என்னவோ அவருடைய நினைப்புத்தான் எப்போதும்.'

5

**உள்ளுவன் மன்யான்; உரைப்ப தவர்திறமால;**
**கள்ளம் பிறவோ பசப்பு.** *104*

'நினைப்பது எப்போதும் அவரையே; நான் வாய்விட்டுப் பேசுவதும் என்றும் அவர் திறத்தையே; அங்ஙனமாக, இப்பசலை நிறம் வந்தது வஞ்சகம்! அவரை உளத்தாலும் உரையாலும் மறவாத என்னை ஏன் இப்பசலை வஞ்சித்துத் துன்புறுத்துதல் வேண்டும்? நான் மனத்தால் நினைத்தும் வாயால் உரைத்தும் என் சாயலும் நாணும் கவர்ந்த கள்வரைப் புகழ்ந்து கொண்டே யிருக்கும்போது என்னுடைய உடம்பில் இப்பசலை ஏன் இவர்கின்றது! என் காதலர் எப்போது பிரிந்து செல்வார் எனச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது இந்தப் பசப்பு! இதற்கு வேறு வேலை கிடையாது.'

**உவக்காணெங் காதலர் செல்வார்; இவக்காணென்**
**மேனி பசப்பூர் வது.** *105*

'எங் காதலர் உவ்விடத்துச் செல்வாராக இவ்விடத்து என் மேனி மேல் பசப்பு ஊர்ந்து விடுகிறது. அவர் பிரிய வேண்டுவதுதான் தாமதம். உடனே இது வந்து விடுகிறதே?'

**விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.** *106*

'விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல்:—விளக்கினது சோர்வைப் பார்த்து உடனே வருகின்ற இருளைப்போல, கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு:—கணவனது சேர்க்கையின் மெலிவைப் பார்த்து உடனே வந்து பொருந்தி விடுகிறது பசப்பு. சேர்க்கையில் தோன்றும் சோர்விலேயே இப்பசப்பு வந்துவிடுமானல் பிரிவில் என்ன தான் செய்யாது?'

**புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்**
**அள்ளிக்கோள் வற்றே பசப்பு.** *107*

'புல்லிக்கிடந்தேன்:—(முன் ஒரு சமயம் என் காதலனோடு)

அநுபவித்துக் கிடந்தேன். அப்படியிருந்த நான் என்னை யறியாது, புடை பெயர்ந்தேன் :—சிறிது விலகினேன். அவ்வளவுதான்! அள்ளிக்கொள்வற்றே பசப்பு :—அள்ளிக் கொள்ளை கொள்வதுபோல வந்து நிறைந்தது பசப்பு. இப்படிச் சிறு விலக்கத்திற்கெல்லாம் அள்ளிக்கொள்ளும் பசப்பு, இப்பிரிவில் என்னதான் செய்யாது! பசலை என்னைப் பெரிதும் துன்புறுத்துகின்றது. இந்நிலையிலும் நான் பசந்து விட்டேன் என்று கூறுவாரைக் காண்கின்றே னன்றி இவ்வாறு செய்தவர் அந்த மனிதர் என்று கூறு வாரைக் காணவில்லையே' எனத் தோழியைக் கடிகின்றாள் தலைவி.

**பசந்தாள் இவளென்ப தல்லால், இவளைத்**
**துறந்தார் அவர்என்பார் இல். *108***

'இவள் பசலை நிறமடைந்தாள் என என்னைத் தூற்றுவா ரைத்தான் காண்கின்றேன்; இவளை அவர் துறந்து சென்றார் என அவரைப் பழிப்பார் இல்லையே! தோழி! நீயும்கூட அப்படித்தான். சரி.'

**பசக்கமற் பட்டாங்கென் மேனி; நயப்பித்தார்**
**நன்னிலையர் ஆவர் எனின். *109***

'நயப்பித்தார் :—பிரிவை உடன்படுத்திச் சொல்லிச் சென்றவர், நல்நிலையர் ஆவர் எனின் :—நல்நிலையுடையராக (உனக்கு) இருப்பாரானால், என் மேனி :—என் உடம்பானது, பசக்க :—பசலை நிறத்தை யடைவதாக! அது மட்டுமா? பட்டாங்கு (ஆக):—பட்டது படட்டும். இது உனக்கு உடன்பாடுதானே சகி!' என்றாள் தலைவி. 'ஆம்! அம்மா! அவர் பிரிந்தது தவறுதான்' என்று கூறி ஆற்றினாள் தோழி. ஆனால், தன் காதலனைத் தான் எவ்வாறு கடியினும் பிறர் கடிய உடன்படுவாளா காதலி. எனவே, தோழி அப்படிக் கூறியது அவளுக்குப் பொறுக்கவில்லை. 'தோழி! நீ அவரை அவ்வாறு கூறலாகாது. நான் பசந்தேன் என்று பழிக்கப்படுவதை என்னால் பொறுக்க முடியும். அவர் பிரிந்த கொடுமையைத் தூற்றுவதை நான் பொறுக்க மாட்டேன்.'

**பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே: நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.** *1110*

'நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின்:—காதலரின் அருளாமையைத் தூற்றார் ஆனால், பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே:—பசப்பு என்ற பெயரை நான் பெற்றுக் கொள்தல் நல்லதே' என நவில்கின்றாள் தலைவி. நாயகனை மட்டும் தூற்றுதல் தகாது. தன்னை என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்பது அவள் கருத்து.

தலைவன்மேலுள்ள கடுங்காதலை இப்பசப்புறு பருவரல் அதிகாரம் நுண்மையாகக் கூறுகிறது.

# 12. தனிப் படர் மிகுதி

'தனிப் படர் மிகுதி' என்பது தனிமையாகிய துன்பப் பெருக்கம் எனப் பொருள்படும். காதலன் தன்னைப் பிரிந்து சென்றதால் ஆற்ருது, மேனி வெதும்பி, கண்ணீர் உகுத்து, நிறம் மாறிய ஆரணங்கு, தனிமை தாங்காது தளர்கின்ருள். அன்னுள் தனிமை பொருத் துயர்க் கடலை உரைப்பதே இவ்வதிகாரம். இவ்வதிகாரத்துப் பத்துப் பாக்களும் காதலி கூற்றே. புத்தின்பம் துய்த்து உடன் பிரிந்த காதலர் தனிமை பொருது ஆருத் துயருறுதல் இயல்பேயன்ருே? அத்துயர் பிரிவுற்ற ஆண் பெண் இரு வர்க்கும் ஒரே படித்தாக இருக்கவேண்டுவதே முறை. இங்கு ஆசிரியர் வள்ளுவர் தனிப் படர் மிகுதியை முற்றும் காதலி பால் ஏற்றியிருக்கின்ருர். 'தலைவன் அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தானுதலின் தனிப் படர் மிகுதி அவன்கண் இல்லையாயிற்று' என்று உரையாசிரியர் பரிமேலழகர் உரைக்கின்ருர். பிரிந்தது எது நோக்கி யாயினும் பிரிவுத் துயர் உணர்ச்சி எவ்வாறு இல்லாது போகும்? வள்ளுவனுர் தனிப் படர் மிகுதியை அவள்பால் ஏற்றினமையால் அவ னுக்கு அப்படர் இல்லையெனக் கொள்ளுதல் பொருந்தாது. தலைவனுக்குப் பிரிய மனமில்லை யெனினும் அவசியத்தைக் கருதி அவன் பிரிந்துபோய்விட்டான். பிரிந்த செய்கை அவ னுடையதாகலின் பிரிவு நல்கிய அவனைக் கடியும் முறையில் தலைவியின் துயரையே காட்டி வருகிருர் ஆசிரியர். அம் முறையிலேயே இத்தனிப் படர் மிகுதியும் ஆக்கப்பெற் றிருக்கிறது என்றே கொள்ள வேண்டும். பிரிவுத் துயர் தன்னைப்போல் அவனுக்கு இல்லையென அவள் கூற்ருக ஆசிரியர் கூறுவது கொண்டு உண்மையிலேயே அவன்

அந்நோயினின்றும் நீக்கம் பெற்றான் எனக் கூறுதல் ஆகாது. 'அவன் பிரிந்து போனான்; இன்னும் வராமலும் இருக்கின்றான்' என்ற கோபத்தால் அவன் இவ்வுணர்வு அற்றவன் எனத் தலைவி கடிவது இயல்பேயன்றோ? அம் முறையிலேயே தனிப் படர் மிகுதி அதிகாரம் அமைந்துளது.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
**காமத்துக் காழில் கனி.** 111

'தாம் வீழ்வார் :—தாம் விரும்புகின்ற கணவரால்; தம் வீழப் பெற்றவர் :—தம்மை விரும்பப்படும் பெண்கள், காமத்துக் காழ் இல் கனி :—காம நுகர்ச்சியென்னும் வித்து இல்லாத பழத்தை, பெற்றாரே :—பெற்றார் ஆவர்.' 'பெண்ணாகிய நான்மட்டும் அவரைக் காதலித்து என்ன பயன்? தாம் காதலிப்பதுபோல் கணவராலும் காதலிக்கப்படும் மகளிரல்லவா காம நுகர்ச்சியாகிய கனி ரசத்தை அருந்த வல்லார்? என் நிலை அவ்வாறாயிற்று.' என்று வருந்தும் காதலி பின்னும் பகர்வாள் :—

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்; வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 112

'வாழ்வார்க்கு :—(தன்னையே எதிர்பார்த்து) உயிர் வாழ்வார்க்கு, வானம் பயந்தற்று :—(காலமறிந்து) மழை பொழிந்ததுபோலும். வீழ்வார்க்கு :—விட்டுப் பிரிந்திருக்க மாட்டாமல் தம் வரவையே பார்த்து நிற்கும்) விரும்பிய காதலியர்க்கு, வீழ்வார் அளிக்கும் அளி :—விரும்பும் காதலர் செய்யும் கருணை. பிரிந்த காதலர் அளவறிந்து வந்து கூடுதல் பருவ மழையை யொக்கும்.

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே;
வாழுநம் என்னும் செருக்கு. 113

'விரும்பும் கணவரால் விரும்பப்படும் மனைவியர்க்கே, ஒருகால் பிரிந்தபோதினும் நினைவுகூர்ந்து விரைவில் வருவார்; இன்பம் நுகரலாம்; நமக்கு இன்னும் வாழ்வுண்டு என்னும்

செருக்கு இருக்க இடமுண்டு. எனக்கு இனியேது வாழ்வுச் செருக்கு ? நான் இனிக் காணத்தகுவது சாவேபோலும்"

இவ்வாறு பெரிதும் வருந்திய தலைவியைப் பார்த்து, 'அம்மா ! இணைபிரியாக் காதலனைப் பிரிந்தும் இதுகாறும் ஆற்றியிருக்கும் உங்களை உலகம் புகழ்கின்றது ; அவர் வந்துவிடுவார்' என்று தேறுதல் கூறினள் தோழி. 'யார் என்னை எவ்வளவு மதித்து என் பயன் ? அவரல்லவா எனக்கு வேண்டும்? அவரால் விரும்பப் பெறுத எனக்கு ஏது சிறப்பு' என நவில்கின்ருள் தலைவி.

**வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்.** 114

தாம் வீழ்வார் வீழப்படார் எனின் :—தாம் விரும்பும் காதலரால் விரும்பப்படாதவராகப் பெண்கள் இருப்பாராஞல், வீழப்படுவார் கெழீஇயிலர் :—(பிறரால்) மதிக்கப்படுவாரும் சிறப்படைய மாட்டார். என்னிலை அவ்வாறே. அவரைச் சொல்ல என்ன இருக்கிறது. நாம் அவரைக் காதலிக்கிருேம். அவர் நம்மைக் காதலிக்கவில்லை. இந்த நிலைமையில் நமக்கு அவர் என்ன செய்யப்போகிருர்.

**நாங்காதல் கோண்டார் நமக்கேவன் செய்பவோ ?**
**தாங்காதல் கோள்ளாக் கடை.** 115

'நாம் காதல் கொண்டார் :—நம்மால் காதல் கொள்ளப் பெற்ருர். தாம் காதல் கொள்ளாக் கடை :—நம்மைப் போல நம்மிடம் தாமும் காதல் செய்யாதபோது, நமக்கு எவன் செய்ப :—நமக்கு என்ன இன்பத்தைச் செய்வார் ? நம்மீது அவருக்குக் காதல் இல்லை. இருந்தால் இப்படி யாருக்கோ வந்த விருந்துபோல் இருப்பாரா ?'

**ஒருதலையான் இன்னுது காமம்; காப்போல**
**இருதலை யானும் இனிது.** 116

'காமமானது, காவடிப்பாரம் போல ஆடவர் பெண்டிர் என்னும் இருதலைக் கண்ணும் ஒக்குமாயின் அஃது இன்பந் தருவது ; அக்காமம் யாரேனும் ஒரு சாராரிடம் மட்டும்

தோன்றுமாஞல் அது துன்பந்தருவதே. ஈண்டு எனக்குள்ள விருப்பம் அவருக்கு இருக்குமாஞல் யான் காணும் இன்பம் பெரிதாகவே இருக்கும். அவருக்கு அஃதின்மையால் - காமம் ஒரு தலையானதால், நான் துன்புறுகிறேன்.

**பருவரலும் பைதலும் காணுன்கொல் காமன் !**
**ஒருவர்கண் நின்ருெழுகு வான். 117**

'ஒருவரிடத்திலேயே நின்று பொருகின்ற காமன்என்பவன், பசப்புறு பருவரலையும் துன்பமிகுதியையும் அறியமாட்டானே? கண்டும் இந்தப் பொல்லாத காமன் ஏன் அவரிடம் செல்லாது என்னையே துன்புறுத்துகின்ருன்? அவன் இருவரையும் ஒரே படித்தாக எண்ணுதலன்ரே முறை. இந்தப் பெண்ணிடம் மட்டும் அவன் தன் வீரதீர பராக்கிரமங்களை யெல்லாம் உபயோகிப்பதற்கு என்ன காரணம்? அந்த மன்மதன் ஒருகால் "பெண்கள் தாழ்ந்தவர்களே; அவர்களை எவ்வளவு வேண்டுமாஞலும் துன்புறுத்தலாம்; அது தங்கள் உரிமை?" என்று கருதுகின்ற வீர ஆடவர் கூட்டத்தில் முக்கிய அங்கத்தினஞகச் சேர்ந்து விட்டானே, என்னவோ தெரியவில்லையே' என்றிவ்வாறு ஏங்கிய பூங்கொடி, 'வருவதற்கு ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் செய்தியாவது அனுப்புதலாகாதா? என் காதலர் காதல், அது கூடச் செய்யுமாறு அவரைத் தூண்டவில்லையா?' என்று பெரிதும் அலமருகின்ருள்.

**வீழ்வாரின் இன்சோற் பேருஅ துலகத்து**
**வாழ்வாரின் வன்கணர் இல். 118**

'காதலரின் இனிய சொல்லைக் கூடப் பெருது உலகத்து வாழ்கின்றவரைப் போல வன்கண்மையுடையார் யாரும் இல்லை. நான் அவ்வன்கண்ணர் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கின்றேன். என்னிற் கொடியார் யார்? என் காதலரின் இனிய சொற்கூடப் பெருது நான் வாழ்கின்றேன்.

**நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்டு**
**இசையும் இனிய செவிக்கு. 119**

, எனக்கினியார் அன்பு கூர்ந்து விரைந்து வந்தருளார், எனினும், அவரிடமிருந்து யாதானும் ஒரு சொல் கிடைக்கு மாஞல் அது என் காதுக்கினிமை தரும். அவ் வின்பம் கூட நான் நுகர்வதில் அவருக்குச் சம்மத மில்லைபோலும்!' என்று இன்னவாறு வருந்திய தலைவியின் மனம், அவருக் குத் தாஞவது இதனை யுரைக்கலாமா எனக் கருதியது. உடனே அந்த நெஞ்சைப் பார்த்து உரைக்கின்ருள் தலைவி.

உருஅர்க்கு உறுநோய் உரைப்பாய்! கடலைச்
சேருஅஅய் வாழிய நெஞ்சு! 120

'நெஞ்சே! உன்ஞெடு சேராதார்க்கு நீ படும் துன்பத்தைச் சொல்ல நினைக்கின்ருய். அது அவ்வளவு எளிதன்று. எனவே அதை விடுத்து, உனக்குத் துன்பஞ் செய்கின்ற கடலைத் தூர்க்க முற்படு! அஃது எளிதில் முடியும்,' என இயம்புகின்ருள் தலைவி. தன் மாட்டு அன்பு கொண்டு விரைந்து ஓடிவராத நாயகனுக்குத் தூது போக்குவதை விடத் துன்புறுத்தும் கடலைத் தூர்ப்பது மேல் என நாயகி முடிவு செய்வதாகக் கூறும் கற்பனை சாலச் சிறந்தது. நங் கையின் நாயகன் பிரிந்ததால் தோன்றிய துயரை - தனிப் படர் மிகுதியை, மேற்குறித்தவாறு ஆசிரியர் அழகுறச் சித் திரித்துக் காட்டுகிருர்.

# 13. நினைந்து அவர் புலம்பல்

கற்பியல் ஆறுவது அதிகாரம் நினைந்து அவர் புலம்பல் என்பது. நினைந்து :—முன் நுகர்ந்த இன்பத்தினை நினைவு கூர்ந்து, அவர் :—இன்று பிரிந்து வாழும் தலைவன் தலைவியாகிய அவர், புலம்பல் :—வருந்திக் கூறுதல், என இவ்வதிகாரம் பொருள் படுகிறது. இவ்வதிகாரத்துக் காதலன், காதலி ஆகிய இருவர் கூற்றும் சொல்லப்படுவதாக அதிகாரத் தலைப்பிலிருந்து கொள்ளவேண்டிய திருக்கிறது. இதில் கூறப்பட்ட பத்துக் குறள்களில் முதலிரண்டு குறள்களைக் காதலன் கூற்றாகவும் பிந்திய எட்டைக் காதலி கூற்றாகவும் உரையாசிரியர் பரிமேலழகர் கொண்டிருக்கிறார். அவர், அவன் கூற்றுக்கும் முதலிரண்டு பாக்கள் அவள் கூற்றாகக் கொள்ளவும் தக்கவாறாகப் பொதுவாகவே நிற்கின்றன. பிந்திய எட்டில் சில சில சிறப்புக் காரணமாக அவள் கூற்றாகவே கொண்டு தீரவேண்டிய பாக்கள் போகப் பொதுவாக ஒருவாறு கூறத்தக்க சில இல்லாமலும் இல்லை அவ்வாராய்ச்சி இங்கு மிகப் பெருகி விடுமாகலின், அதிகாரத் தலைப்புக்கேற்ப, உரையாசிரியர் கொள்கையைப் பின்பற்றி முதலிரண்டு பாக்களை நாயகன் கூற்றாகவும் பின் எட்டையும் நாயகி கூற்றாகவுமே கொண்டு நானும் செல்கின்றேன்.

பிரிந்துபோன தலைவன், தான் முன்னே அனுபவித்த இன்பத்தை நினைவுகூர்கின்றான். அதனை நினைவுக்குக் கொணர்ந்ததும் அந் நுகர்ச்சியின் பெருமையைப் பின் வருமாறு சித்திரிக்கின்றான்.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்,
கள்ளினும் காமம் இனிது.

'நினைத்தாலும் நீங்காத அதிக மகிழ்வை உண்டாக்குவ தால் காமமானது கள்ளைவிட இன்பந்தருவது. கள் உண் டவர்க்கே இன்பந்தரும்; காமம் அப்படியல்ல; அநுபவித்த மையை எண்ணிணலே இனிமை பயக்கும்! "உண்டார் கண் அல்லது அடுநறாக் காமம்போல் கண்டார் மகிழ் செய்தல் இன்று" என்ற 'தகையணங் குறுத்தல்' அதிகாரப் பாட்டும் இக் கருத்தைத் தழுவியது. காமம் நுகர்ந்தவர்க்கே யன்றிக் கண்டவர்க்கும் மகிழ்ச்சி தரும்; நினைத்தவர்க்கும் மகிழ்வு நல்கும். காமம் நுகர்ந்த காதலன், பிரிவில்கூட ஓர் இன்பங் காண்கின்ருன் என்பது பின் வரும் செய்யு ளால் நன்கு வலியுறுத்தப்படுகிறது.

**எனைத்தொன்று இனிதேகாண் காமம்; தாம் வீழ்வார்**
**நினைப்ப வருவதொன்று இல்.** *122*

' தாம் வீழ்வார் :—தம்மால் விரும்பப்படுவாரை, நினைப்ப வருவது ஒன்று இல் :—நினைத்த அளவிலேயே வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை. காமம் எனைத் தொன்று இனிதே காண் :—(ஆதலால்) காமமானது எவ்வகையினும் இனி தான ஒன்ருகவே இருக்கிறது. காமம் நுகர்ந்தால் இன்பம் பயக்கும் ஒன்ருக மட்டும் இல்லை. பிரிவுக்காலத்தில் நுகர்ந்த பொழுதை நினைத்தாற்கூடப் பிரிவுத் துயரைப்போக்கவல்ல பெருமையை அக்காமம் பெற்றிருப்பதால் எவ்வகையானும் அது இன்புறத்தக்க ஓர் உயர் பொருளேயாம்.'

என்று பிரிந்த தலைவன் தன் பிரிவுக் காலத்திலும் தனக்கு இனியாள் மாட்டுத் தான் பருகிய இணையிலா இன் பத்தை நினைந்து புலம்புகின்ருன். அவன் நிலை அவ்வாருக, அவனைப் பிரியவிட்ட தலைவியின் தன்மை எட்டுக் குறள் களால் இயம்பப்படுகிறது. தலைவிக்குத் தும்மல் தோன்று கிறது. உற்ருர் யாரேனும் நினைந்தால் நினைக்கப்பட்டவர்க் குத் தும்மல் தோன்றும் என்பது தொன்றுதொட்ட உலக வழக்கு. அவ்வழக்கை ஈண்டு மேற்கொண்டார் ஆசிரியர் வள்ளுவர். பிரிவுத்துயரால் வாடும் பெண் கொடிக்குத் தும்மல்தோன்றிமறைகின்றது. எனவே,

**நினைப்பவர் போன்று நினையார்கொல்; தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்.** 123

என்று கற்பனை செய்கின்றாள் தலைவி. 'எனக்குத் தும்மல் எழுவது போலத் தோன்றி மறைகின்றது; ஆதலால் அந்தப் பிரிந்துபோன வன்கண்ணர் நினைப்பவரைப் போல் நினைக்கமாட்டார் போலும்! ஏன் இப்படி நினையாது நினைத்து என்னைத் தும்மல் தோற்றுவித்துத் துன்புறுத்தித் தொலைக்க வேண்டும்; ஒரேயடியாக நினைந்து ஓடி வந்து விடல் ஆகாதோ?'

**யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து; எம்நெஞ்சத்து**
**ஓஒ உளரே யவர்.** 124

'எம் நெஞ்சத்துள்ளே, அவர் இடையறாது இருக்கின்றார். ஆனால், அவருடைய நெஞ்சத்துள்ளே நாமும் இருக்கின்றோமோ என்னவோ?' என்று ஐயுறுகின்றாள் தலைமகள். ஓயாது அவனையே நினைக்கின்றாள் அவள். தன் நெஞ்சில் அவனையே குடிவைத்திருக்கின்றாள் அன்னாள். அவளைப் போலவே அவளுக்கு இருக்கையாக அவனும் தன்நெஞ்சினை நல்குதல் இன்றியமையாத ஓர் பண்டம் மாற்றல்லவா? அவன் தன் கடமையை உணர்ந்து அவ்வாறு செய்தானா என ஐயுறுகின்றாள்; பிறகு தெளிகின்றாள். தெளிவின் முடிவு தான் கொடுத்த நெஞ்சுக்குப் பதில் அவன் கொடுக்கவில்லை யென்பதே எனக் காண்கின்றாள். அம்முடிவு தோன்றியதற்குக் காரணம் அவன் விரைந்து ஓடோடியும் வாராமையே போலும்! உடனே முடிவு வெளிப்படப் பின் வருமாறு கூறுகின்றாள் :—

**தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்?**
**எந்நெஞ்சத்து ஓவா வரல்.** 125

'அவருடைய நெஞ்சினுள்ளே நாம் புகாமல் காவல் செய்துகொண்ட அவர், எம் நெஞ்சத்துள்ளே இடையறாது வந்துகொண்டே யிருக்க நாணமாட்டாரோ? என்ன இயற்கையிது! தம்மைப்போல மற்றவரை நினைக்க வேண்டாவோ?

அவருககு வெட்கமே இல்லையா என்ன? தம் வீட்டிற்குள்ளே ஒருவரை வருவதற்கு அனுமதிக்காத ஒருவர், எவரைத் தடை செய்கின்றாரோ அவர் வீட்டிற்கு எப்பொழுதும் போய்க் கொண்டே யிருப்பது என்ன நியாயம்? அவர் நெஞ்சினுள் நான் நுழைய முடியாமல் அரண் செய்து கொண்டவர் என் நெஞ்சை என்றும் நிறைத்து நிற்கின்றார். இது அவர் நாணமற்ற தன்மையையே காட்டுகின்றது' என்று இயம்பிய காதலி இனி வேறு வகையாகப் பேசுகின்றாள்.

'போகட்டும்; இந்த நிலைமையிலும் நான் இன்னும் சாகாது உயிர் சுமந்திருக்கின்றேன் என்றால் அது எதனால்?'

**மற்றியான் என்னுளேன் மன்னோ; அவரோடியான்**
**உற்றநாள் உள்ள உளேன்.** 126

'அவரோடு நான் சேர்ந்தகால இன்பத்தை நினைத்தலாலேயே பிரிவுத் துயரால் வாடும் இன்றும் நான் உயிர் தாங்கி நிற்கின்றேன்; அஃதில்லையேல் வேறு எது கருதி நான் உயிர் வாழ்வேன்? என்னைச் சாவாது காப்பது என் அருமைக் காதலர் கூட்டுறவால் தோன்றியபழய இன்ப நினைவேயாம்'

**மறப்பின் எவனாவன் மற்கொல்; மறப்பறியேன்;**
**உள்ளினும் உள்ளஞ் சுடும்.** 127

'முன் சேர்ந்த அவ் இன்பத்தை மறக்க அறியேனாய் நினைத்துக்கொண்டிருக்கும்போதே பிரிவு என்னுள்ளத்தைச் சுடுகின்றது; இன்பத்தை நினையாது மறந்து விடுவேனானால் என்ன பரிதாப நிலைமையை அடைவேனோ? இப்பொல்லாத பிரிவினும் சாகாத தன்மையை எனக்கருளியது மறவாத இன்பமே என்பதில் தடையில்லை.'

என்று உரைத்து நின்ற காதலி மேலும் பகர்வாள் :—

**எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்தன்றோ**
**காதலர் செய்யும் சிறப்பு.** 128

'எவ்வளவு தரம் நான் விடாது அவரை நினைத்தாலும் அவர் அதற்காகக் கோபப்பட மாட்டார். என் காதலர்

எனக்குச் செய்யும் சிறப்பு அவ்வளவு. என்னை எப்படி நினைத்துக்கொண்டே யிருக்கலாம் என அவர் சினங்கொள் வாராஞல் இன்ப நினைவிற்கே இடையூறு தோன்றி என்னை நிச்சயம் மாய்த்துவிடும். அவர் அவ்வாறு செய்யாது இன்ப நினைவுக்கு இடமளித்ததே போதும்! இதுவே எனக் கினியார் செய்த சிறப்பு. அவர் மனத்தின் கண்ணே எனக்கு இடம் தராதபோதிலும் வருத்தமின்றி என் மனத்தே நின்று எனக்கு என் காதலர் இன்பம் செய்வதே என் பாக்கியம்' என்று கற்பனைக் கடலாடிய காரிகைக்குச் சட்டென்று தாங்கமுடியாத பிரிவுத்துன்பம் தோன்றவே வேறுமாதிரி விளம்புகின்ருள் :—

**விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்,**
**அளியின்மை ஆற்ற நினைந்து.** *129*

'முன்னர் நாம் இருவரும் வேறு அல்லேம் என்று விளம் பியவரது கருணை யின்மையை மிகவும் நினைந்து என் இனிய உயர் வருந்துகின்றதே! ஆ! என் செய்வேன்!' என அலமருகின்ருள். வானத்தே வெண் திங்கள் விளங்கித் தோன்றுகின்றது. அச் சந்திரனை நோக்குகின்ருள். இவ் வாறு செப்புகின்ருள் :—

**விடாஅது சென்ருரைக் கண்ணிஞல் காணப்**
**படாஅதி வாழி மதி.** *130*

'ஏ மதியே! என் நெஞ்சினை விடாதிருந்தே விட்டுப் பிரிந்து போயினுராகிய என் காதலரை நான் என் கண்ணளவிஞ யினும் காணுமாறு நீ பட்டுவிடாது வாழ்வாயாக' என்று கூறிஞள். சந்திரன் தோற்றத்தின்மீது தன் கண் விழு மாறுபோலவே, தன் காதலன் பார்வையும் பதியுமாதலால் அவ் விண்மதியின் தோற்றத்தில் காதலனையே காண்பதா கக் கருதுகின்ருள் காதலி என்பது இவ்வதிகாரத்தின் கடைசிப் பாட்டின் போந்த பொருள். காதல் நினைவுக்கு மதி துணை செய்கின்ருஞதலின் அந்நினைவால் இன்பங் காணும் அவள், மதியைப் போகாமலிருக்குமாறு வாழ்த்து கிருள்.

## 14. கனவு நிலே உரைத்தல்

கற்பியல் ஏழாவது அதிகாரம் கனவு நிலே உரைத்தல் என்பது. காதலனைப் பிரியவிட்ட காதலி, பிரிவு எனும் துயர் உருவுகொண்டு வாடுகின்ருள். காதலன் பிரிவெனும் கடுஞ் சுரங்கொண்ட காதலி, செவ்விய உறக்கமின்றிப் பித்துப் பிடித்தவள் போல் பிதற்றிப் படுக்கையில் புரள்கின்ருள். ஒரோ வழி அயர்ச்சி காரணமாகச் சிறிது கண் மூடும் போது கனவு காண்கின்ருள். அக்கனவின் தன்மையை அணித்தேயுள்ள பாங்கிபால் பகர்கின்ருள். காதலி காணும் கனவைப்பற்றி அவள் கூறுவதாகச் சொல்லப்படும் பாக்கள் கொண்டதே கனவு நிலே யுரைத்தல் என்னும் இவ் அதிகாரம். கனவு நிலே உரைத்தல் என்பதற்கு, சொப்பனத்தினது தன்மையைச் சொல்லுதல் என்பது பொருள்.

தலேவி கொஞ்சம் கண் மூடியதும் தன் உள்ளத்தேயிருந்த இடைவிடா நினைவு எதுவோ அது கனவாகத் தோன்றியது. கணவனைப் பிரிந்தது முதல் வேருென்றை நினைக்கலாற்ருத உள்ளம் பெற்ற அவள் கனவில் - காதலனேடு ஒன்றிய நாளின்பத்தையே எண்ணி யெண்ணி, அக்களிப்பை இடைமறித்தேகிய அவன் பிரிவுக்கு விம்மி விம்மி, அத்தலேவன் என்று வருவான் என அன்னுன் வரவை எதிர் நோக்கி ஏங்கி ஏங்கிக் கண் பூத்த அம்மடக்கொடி கனவில் அவள் எண்ணத்தின் படம் தவிர வேறு தோன்றக் கிடப்பதுண்டோ? தன் இனிய காதலன், "என் அருமைக் கனியே! இதோ வந்துவிட்டேன்; நெஞ்சுக் கவலேயை ஒழி! உன்னைப் பிரிவுத் துயருக்குள்ளாக்கிய பாவியை மன்னித்து விடு!" என்று கூறித் தன் வருகையை உணர்த்தும் தூது ஒன்றை விடுத்ததாகக் காண்கின்ருள் கனவில்.

காதலனின் தூதைக் கொணர்ந்த நனவினைப் போற்றி மகிழ்கின்றாள். வாய்விட்டுத் தன் தோழியிடம் சொல்லு கின்றாள்.

**காதலர் தூதோடு வந்த கனவினுக்கு**
**யாதுசெய் வேன்கோல் விருந்து.** *131*

'என் காதலரின் தூதை என்னிடம் கொண்டு வந்த கனவுக்கு விருந்தாக நான் எதனைச் செய்வேன்? எனக்கு இவ்வளவு பேருதவி செய்த கனவினுக்கு - எனது உள்ளக் கருத்தை உள்ளவாறுணர்ந்து என்னை இன்பக்கடலாட்டிய கனவினுக்கு நான் செய்யும் கைம்மாறு ஒன்றும் தோன்ற வில்லையே!'

**கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு**
**உயலுண்மை சாற்றுவேன் மன்.** *132*

'கயலுண்கண் :—என்னுடைய கயல் போன்ற - மைஉண்ட கண்கள், யான் இரப்ப :—எனது இரக்கமாகிய வேண்டு கோளினால், துஞ்சின் :—நன்றாகத் தூங்குமானால், கலந் தார்க்கு :—அப்போது தோன்றும் கனவிலே என்னை வந்து கூடும் நாயகர்க்கு, உயல் உண்மை சாற்றுவேன் :—பிரி வாற்றி நான் வாழும் உண்மைத் தன்மையை ஒருவாறு அவர் உணருமாறு உரைப்பேன். நான் எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டாலும் என் கண்கள் நன்றாக உறங்குகின் றனவல்ல; அங்ஙனமாக என்னுடைய விரிந்த துயரை எங் ஙனம் சொல்லி முடிப்பது? என் கண்கள் நீண்ட நிகழ்ச் சியை நுகரும் சந்தர்ப்பத்தை எனக்குத் தாரா தொழியி னும் சிறிதாவது இடையிடையே மூடி எனக்குச் செய்யும் உதவியை மறக்குமாறில்லை. அவைகள் அப்படியும் செய்ய வில்லையேல் யான் பிழைத்திருக்க மாட்டேன்.'

**நனவினால் நல்கா தவரைக் கனவினால்**
**காண்டலின் உண்டேன் உயிர்.** *133*

'நனவிலே என்பால் போந்து அருள் செய்யாதாராகிய என் கொழுநரைக் கனவிலேயாவது காண்பதினாலேயே என் னுடைய உயிர் இன்னும் இருக்கின்றது. கனவிலும் அவர்

தோன்ருதிருப்பரேல் இதுகாறும் நான் மாண்டு மடிந்து மண்ணேடு கலந்திருப்பேன்.'

**கனவிஞல் உண்டாகும் காமம்; நனவிஞல்**
**நல்காரை நாடித் தரற்கு.** 134

'நனவினிடத்தே வந்து அருளாரைத் தேடிப் பிடித்து என்னிடம் கொணர்ந்து கனவானது தருதலால், கனவிஞல் நான் காமம் காணவில்லையேல் இன்று என்னைப் புதைத்த இடத்தில் புல் முளைத்திருக்காதோ?'

**நனவிஞற் கண்டதூஉம் ஆங்கே; கனவுந்தான்**
**கண்ட பொழுதே இனிது** 135

'முன் நனவின்கண் எனக் கினியாரைக் கண்டு அவரோடு பொருந்தி நுகர்ந்த இன்பமும் அன்று இனிதாக இருந்தது. இந்நாள் நனவின்கண் பெற்ற இன்பமும் கண்டபொழுதே இனிதாயிற்று. எனவே நாயகன் நனவிஞல் அருளாவிட்டாலும் கனவிஞலாவது அவ்வின்பத்தைத் தருவது என் பாக்கியமே. எனக்குச் சத்துருவாக நிற்பது அந்தப் பொல்லாத நனவு என்பது.'

**நனவென ஒன்றில்லை யாயிற், கனவிஞல்**
**காதலர் நீங்கலர் மன்** 136

'நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாபியானவன் இல்லாது ஒழிவாஞஞல் கனவில் வந்து என்னைச் சேரும் காதலர் பிரியவேமாட்டார். கனவிற் கூடிய என் அருமைத் துணைவரைப் பிரித்துத் தொலைப்பவன் நனவு என்னும் கொடியோன் அல்லவா?'

என்றின்ன பலவாறு எண்ணிய பாவை, சட்டென்று பிரிந்து சென்ற நாயகன் மேல் ஒரு பெரும் சீற்றத்தோடு பாய்கின்ருள். பிரிவுக் காலத்தில் சரியான உறக்கத்தை அவள் பெற்ருளல்லளாகலின் கனவு நேரத்தைவிட நனவு நேரமே அவளுக்கு அதிகம். அவள் கருத்துப்படி முழுமையும் உறங்கிவிட்டால் நல்லதே. கனவிஞலாவது இன்பத்தைக் கண்டுகொண்டேயிருப்பாள். ஆஞல் கனவு காணும் பொழுது சிறிதே. நனவுப் பொழுதே பெரிது.

நாயகன் உடனிருக்குங்கால் நனவுக்காலம் எத்துணை பெருகினும் இன்பமே. இந்நாள் நிலை மாறுபட்டதன்றோ? எனவே நனவிலேயே பெரிதும் துன்புற்று உழன்று கரை காணுக் காதலி, அதற்குக் காரணமாய, பிரிவு எனும் கொடிய அரக்கனைத் தன் வாழ்நாளில் புகுத்தி இன்பத்தைப் பறித்த காதலனைத் தூற்றுகின்றாள். பின் வருமாறு:—

**நனவினால் நல்காக் கொடியார், கனவினால்**
**என் எம்மைப் பீழிப் பது?** *137*

'நனவிலே வந்து இன்பம் செய்யாத அக்கொடியவர், கனவிலே தோன்றி எம்மை வீணே வருத்திக்கொண்டிருப்பது எதற்காக?' என்று போட்டாள் ஒரு போடு நாயகனை. இதைக் கேட்ட அருகிருந்த தோழி தலைவிக்கு ஆறுதல் கூறினள். ஆறுதல் அளிக்குங்கால் தலைவியை மகிழ்விக்கக் கருதி, அவள் கோபித்த நாயகன் கொடுமையைத் தோழியும் உடன்பட்டாள். அது பொறுக்கவில்லைத் தலைவிக்கு. தான் எவ்வளவு வேண்டுமாகிலும் வையலாம் தன் நாயகனை. ஆம்! அவ்வளவு உரிமை அவளுக்கு உண்டு. ஆனால், பிறர் அவனைத் தூற்ற அவள் சகிப்பாளா? எனவே திருப்பினாள் போக்கை வேறு வகையில். காதல் நோய்ப்பட்டார் நிமிடத்துக்கு ஒரு மாதிரிதான் பேசுவார். இங்கு முன்னுக்குப்பின் முரண் முதலிய இலக்கணங்களெல்லாம் செல்லா. எதிரே நிற்கும் தோழிமேல் சீறி விழுந்தாள் தலைவி. அடுக்கினாள் அதிகாரத்தில் எஞ்சிய மூன்று பாக்களையும். 'உனக்கென்னடி தெரியும் என் தலைவனைப்பற்றி?'

**துஞ்சுங்கால் தோள்மேல ராகி, விழிக்குங்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.** *138*

'என்னை அவர் பிரிந்து வாழ்கின்றார் என்று நினைக்கிறாய்! இல்லை! இல்லை! அவர் எப்போதும் இடையறாது என்னுடனேயே இருக்கின்றார். நான் தூங்கும்போது அவர் என் தோள்மேல் இருக்கின்றார் (கனவில்); நான் விழித்துவிட்டேனானால் அதி விரைவாக ஓடி வந்து என் நெஞ்சுக்குள்ளே புகுந்து விடுகின்றார். துஞ்சும்போதெல்லாம் தோள்மேல

ராயும் விழிக்கும்போதெல்லாம் நெஞ்சத்தவராயும் இருந்து திருவிளையாடல் புரிகின்ற என் காதலரை என்னை நீங்கினார் என்று எவ்வாறு சொல்லலாம்? என் காதலர் நிலை எனக்கல்லவா தெரியும்? மற்றவர்க்கு என்ன தெரியும்?'

**நனவினால் நல்காரை நோவர்; கனவினால்**
**காதலர்க் காணா தவர்.** *139*

'கனவிலே காதலரைக் காணாதவர்கள்தாம், நனவிலே அவர் தோன்றவில்லையென அவரை நோவர். தோழி! நீ எங்கே இதை அறியப் போகிறாய்! காதலனைப் பெற்றவரன்றோ கனவிலே கண்டு மகிழும் பேறு பெறுவர். உனக்கு மட்டுமா! இந்த ஊராருக்கே அந்த உணர்ச்சியில்லைபோலத் தோன்றுகிறதே? நம்மை அவர் நீத்துவிட்டார் எனப் புரியாமல் இவ்வூர் பழிக்கின்றது.'

**நனவினால் நம்நீத்தார் என்பர்; கனவினாற்**
**காணார்கொல் இவ்வூ ரவர்?** *140*

'நனவிலே நம்மை விட்டுச் சென்றார் என்று காதலரைத் தூற்றுகின்றார் இவ்வூரவர். ஆனால் கனவிலே இடையறாது அவர் தோன்றுவதைக் காணமாட்டார்போலும் அவர்' என்று பிறரைப் பழித்துத் தன் துணைவனை ஏற்றுகின்றாள் தலைவி. கணவனைப் பிரிந்த தலைவியின் வாயிலாகக் கனவின் நிலையைப் பல்வேறு சீரிய முறையில் இங்குக் காட்டியவாறு உரைத்து மகிழ்ந்தார் புலவர் பெருமான்.

# 15. பொழுது கண்டு இரங்கல்

பொழுது கண்டு இரங்கலாவது, பிரிந்த காதலர் மாலைப்பொழுது வருங்கால் அதனைக் கண்டு வருந்துதல் ஆகும். பிரிந்த காதலரைத் துன்புறுத்த அமைந்த முதற் காலம் மாலை. மாலைப்பொழுது, சேர்ந்த காதலர்க்கு நல் இன்பத்தையும் பிரிந்த காதலர்க்குப் பெருந்துன்பத்தையும் நல்க வல்லதென்பதை இளங்கோவடிகள், "தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்த—காதலர்ப் புணர்ந்தோர் களி மகிழ்வு எய்த......மல்லல் மூதூர் மாலைவந் திறுத்தென" என்னும் அழகிய அடிகளால் தமது சிலப்பதிகாரக் காவியத்தில் அலங்கரித்துச் செல்கின்றார். மேலும் கணவனைப் பிரிந்த தலைவியின் மாலைக்கால நிலையை இளங்கோ பின் வரும் வரிகளால் தமது செஞ்சொற் களஞ்சியத்தைத் திறந்து வாரி யிறைத்திருக்கின்றார்.

"அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்;
மங்கல அணியில் பிறிதணி மகிழாள்;
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்;
திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரிய,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப,
பவள வாள்நுதல் திலகம் இழப்ப,
தவள வாள்நகை கோவலன் இழப்ப,
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி."

அத்தகைய மாலைப்பொழுதைக் கண்டு பிரிவுத் துயரால் வாடும் நமது வள்ளுவர் பெற்ற பூங்கொடி இரங்கும் நிலையை நோக்கலாம்.

**மாலையோ அல்லை! மணந்தார் உயிருண்ணும்**
**வேலைநீ! வாழி பொழுது!** 141

'ஏ பொழுதே! நீ அந்த நாள் வந்த மாலைபோலவா இருக்கின்றாய்! இல்லை; இந்நாளில் காதலரை மணந்த மகளிர் உயிரைத் தின்னும் முடிவுக் காலமாக இருக்கின்றாய். போதும்! போதும்! அன்று நீ தந்த இன்பம் எங்கோ போய்விட்டது! இன்று நீ தரும் துன்பம் உயிரையே வாங்கிவிடும்போலிருக்கிறது!' என்று இயம்பிய அணங்கு, மாலைப்போதைக் கூர்ந்து நோக்கிவிட்டுப் பின்வருமாறு வினவுகின்றாள்.

**புன்கண்ணை! வாழி மருள்மாலை! எங்கேள்போல்**
**வன்கண்ண தோ?நின் துணை.** 142

'மாலையே! ஏது நீயும் என்னைப்போல ஒரு மாதிரியாக இருக்கிறாயே? மருள்மாலை :—மயங்கிய மாலையே! புன்கண்ணை :—ஒளியிழந்து நிற்கின்றாய்; ஆதலினாலே, எங்கேள்போல் வன்கண்ணதோ நின் துணை:—எம் துணைபோல உன் துணையும் வன்கண்மை யுடையதோ? இன்றேல் என்னைப்போல நீயும் ஒளியிழந்திருக்க நியாயம் இல்லையே?' என்று இயம்பிப் புலம்பி நின்ற தலைவியைப் பார்த்து ஆறுதல் மொழிந்தாள் தோழி.

'தோழி நான் எப்படி ஆற்றுவேன்? இந்த மாலை படுத்தும் பாடு கொஞ்சமல்லவே.'

**பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை, துனியரும்பித்**
**துன்பம் வளர வரும்.** 143

'நான் என் காதலருடனிருந்த நாளில் நடுங்கிக்கொண்டு எனக்குக் குளிர்ச்சி தந்து பசப்பி வந்த இந்த மாலை, அவர் இல்லாததறிந்து இன்று என்னைக் கொல்லத்தக்கவாறு துன்பத்தைப் பெருக்குகின்றது. ஹா! என்ன கொடுமையிது! எவ்வாறு சகிப்பது!'

**காதலர் இல்வழி; மாலை, கொலைக்களத்து**
**ஏதிலர் போல வரும்.** 144

'காதலர் உடன் இருந்த நாள் எனக்கு இன்பந் தந்துதவிய மாலை, காதலர் இல்லாத இவ்விடத்து அன்று இன்பஞ் செய்ததையும் மறந்து சும்மாவும் இருந்து தொலையாமல் கொலைக்களத்திலே வாளேந்திக் கொல்ல வருகின்ற பகைவரைப்போல வருகின்றதே? இத்துன்பத்தை எங்ஙனம் பொறுக்க வல்லேன்.'

காலைக்குச் செய்தநன் றென்கொல்? எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை? 145

'இந்தப் பிரிவுக் காலத்தில் காலைப்பொழுது எனக்கு ஒரு துன்பமும் செய்திலது; மாலைமட்டும் ஏன் என் உயிரை வாங்குதல் வேண்டும்? நான் காலை மாலை இரண்டையும் ஒரேபடித்தாகவே கருதுகிறேன். சகி! நீதான் சொல்ல வேண்டும். நீ எப்போதும் என்னோடுதானே இருக்கின்றாய்! காலைக்கு நான் என்ன நன்மையைச் செய்தேன்? மாலைக்கு என்ன தீமையைச் செய்துவிட்டேன்? சும்மாயிருந்தால் என்ன பொருள்? நான் அப்படி ஏதாவது இழைத்திருந்தால் சொல்!' எனக் குமுறினாள் தலைவி.

'அம்மா! அன்று அவரை விட்டுவிட்டு இன்று இப்படி வருந்துதல் தகுமா' என்றாள் சகி. 'நீ சொல்வது விந்தையாக இருக்கிறது. எனக்கு இன்பப் பேழையாக இருந்த இந்த மாலை எனக்கே இப்படித் துரோகம் செய்யும் என நான் எப்படி முன்னம் அறிய முடியும்? எனக்குப் பிரிவு புதிதேயன்றோ தோழி!

மாலைநோய் செய்தல், மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன். 146

'என்னுடைய இன்பமாலை, எனக்கு நோய் தருதலை என்னை மணந்த காதலர் என்னை நீங்காதிருந்த காலத்து நான் அறிந்திலேன். இந்த மாலையும் இப்படிச் செய்யும் என அறிந்திருந்தால் அவரை விட்டிருப்பேனா? அம்மம்ம! மாலை செய்யும் கொடுமை நினைக்க முடியாததாக இருக்கிறது. காம நோயை நன்றாக மலர்விப்பது இம்மாலைதான்.

**காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்.** *147*

'காம நோயாகிய பூ, காலையில் சிறிது அரும்பி, பகற் போதிலே போது வடிவாக விளங்கி, மாலைப் பொழுதிலே பூத்து விரிந்து விடுகின்றது. காம நோய் தன் முழுப் பலத்துடன் என்மீது படையெடுத்துப் பொருதற்குத் துணை நிற்பது இம்மாலை வேளையே.

**அழல்போலும் மாலைக்குத் தூதாகி, ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை.** *148*

'என்மீது மோதும் மாலைக்குப் படைகூட ஒன்று கிடைத்து விட்டது. அப்படையைக்கொண்டு எளிதில் என் உயிர் வாங்க வல்லதாகிவிட்டது மாலை. ஆயன் ஊதுங் குழல் எனக்கு இனிதாக இருந்தது அன்று. இன்று அந்த ஆயன் குழல், இதுகாலை என்னைத் தீப்போலச் சுடுகின்ற மாலைப் பொழுதிற்குத் தூதாக வந்ததுமல்லாமல் மாலையினது கொலைத் தொழிலுக்குக் கருவியாகவும் உதவுகின்றது. பொருள்களின் நிலைமாற்றந்தான் என்னே ?'

**பதிமருண்டு பைதல் உழக்கும் ; மதிமருண்டு**
**மாலை படர்தரும் போழ்து.** *149*

'மாலை வருகின்ற நிலையைப் பார்த்தால் என்னைமட்டு மல்ல, இந்த ஊரையே அது துன்பக் கடலுள் ஆழ்த்தி விடும்போல் தோன்றுகிறதே. கண்டாரெல்லாம் மதி மயங்கும் வகை இம்மாலை பரவும்போது இப்பதியே மருண்டு துக்கத்தில் உழன்று விடும்போலும் !'

**பொருள்மாலை யாளரை உள்ளி, மருள்மாலை**
**மாயுமென் மாயா உயிர்.** *150*

'காதலரைப் பிரிந்தும் சாகாதிருக்கின்ற என் உயிரானது, பொருள் தேடுதலையே இயல்பாகக்கொண்டு சென்ற அவரை நினைந்து, இம்மருள்மாலையிலே செத்துக்கொண்டிருக்கிறது. பிரிவினுல் சாகாத உயிரை மாலைப்பொழுது வாங்கிவிடுவதென்ருல் பிரிவைவிட மாலை கொடுமையுடைய

தன்ளுே?' என்று தலைவி சார்பாகக் குறளாசிரியர் 'தாழ் துணை துறந்தோர் தனித் துய'ரைப் பெருக்கும் மாலைப் பொழுதின் தன்மையைப் பொழுது கண்டிரங்கல் என்னும் அதிகாரத்தில் புகல்கின்ருர்.

## 16. உறுப்பு நலன் அழிதல்

பிரிவுத் துயரால் வருந்தும் காதலியின் அங்கங்கள் வாட்ட மடைவதைக் கூறுவது இவ்வதிகாரம். உறுப்பு :— அவயவம் ; நலன் :—அழகு ; அழிதல் :—கெடுதல். உறுப்பு நலன் அழிதல் :—உடம்பின் நற்பகுதிகள் வனப்பு இழத் தல். காதலனைப் பிரிந்த காதலி, பிரிவுக் காலத்தில் மணந் தார் உயிருண்ணும் மாலைப் பொழுதைக்கண்டு வருந்திய தன்மை சென்ற அதிகாரத்தில் கூறப்பட்டது. அவ்வருத் தம் பொங்கியெழ அவள் அங்கங்கள் சோர்வடைகின்றன. தலைவிக்கு உயிரனையாளாகிய தோழியால் தன்னால் பெரி தும் போற்றிக் காக்கப்பெற்ற உறுப்பு நலன் அழிதலைப் பொறுக்கக்கூடவில்லை. தோழியானவள் தலைவி அழ கிழத்தற் காற்றாளாகித் தலைவியை நோக்கி உரைக் கின்றாள்.

**சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின கண்.** *151*

'ஆற்றாமைச் சிறுமையை நம்மிடம் நிற்கவைத்து நீண்ட யாத்திரை போன அவரையே நீ நினைத்தலால், நின் கண்கள் நல்ல பூக்களுக்கு வெட்கமடையும் நிலைக்கு வந்துவிட்டன. குவளை தாமரை முதலான பூக்கள் அன்று நின் கண்களுக் குப் போட்டியிட வந்து ஆற்றாமல் தோற்று நாணமடைந் தமை இன்று கதையாகிவிட்டது. அவைகளை வென்று பொலிவெய்தி விளங்கிய நின் அஞ்சனந் தோய்ந்த வாட் கண்கள், இன்று அழுதழுது அருவிபோல் நீருகுத்து ஒளி யிழந்து கேவலம் அம்மலர்கட்குப் பின்னிடும் நிலையை எய்தி விட்டனவே.

**நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாரும் கண்.**

நிறம் மாறுபட்டு நீரைக் கொட்டி நிற்கும் நின் கண்கள், நம்மால் விரும்பப்பட்டாரது அருளின்மையைச் சொல்லுவன போல்கின்றன. அம்மா! "சேர்ந்தவர்கள் செய்த பெரும் தீமையெல்லாம் பொறுத்தல் வேண்டும்; அவர்களை உலகிற்குக் காட்டிக் கொடுத்தல் ஆகாது" என நீ எண்ணிய போதிலும் நினது பறையறையுங் கண்கள் விடமாட்டேனென்று வம்புசெய்து பிறர்க்கும் கேடுசெய்து தாமும் துன்புறுகின்றன. கண்கள் மட்டுமா? நின் தோள்களும் பொல்லாதன.

**தணந்தமை சால அறிவிப்ப போலும்,**
**மணந்தநாள் வீங்கிய தோள்.**

காதலர் நீங்கியமையை நன்ருக விளங்கச் சொல்லுவபோன்றிருக்கின்றன, மணந்த அந்நாளில் பருத்து இறுமாந்து நின்ற நின் தோள்கள். தலைவி! இது தகுமா? தோள்கள், மணந்த அன்று அவ்வளவு வீக்கம் கொள்ளலும் பிரிந்து இன்று இவ்வளவு தூக்கம் பெறுதலும் நியாயமன்று.

**பணைநீங்கிப் பைந்தொடி சோரும், துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்**

'வாழ்க்கைத் துணையைப்பிரிந்து அவர் சேர்க்கையால் பெற்ற அழகேயுமின்றி இயல்பான பழைய அழகையும் இழந்த நின் தோள்கள், அவர் வாரா நாட்கள் மிகமிக, மேலும் பெருமையிழந்து பசிய வளைகளையும் சோரவிடுகின்றன. நீ அவரை மணந்த நாள் பெரிதும் வீங்கியதும் இத் தோள்களே. இன்று சொல்லமுடியாத வாட்டமடைவதும் இத் தோள்களே. தமக்குப் பெரும் பூரிப்பு நல்கியவராயிற்றே; அவரைத் தூற்றுதல் தகாது என்று இத் தோள்கள் கருதிற்றில. ஆம்! அவைகள் தாம் என் செய வல்ல? பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? அவர் கொடுமை மிகுதிப்பட்டுவிட்டது. சொல்லித் தீரவேண்டுவதைத் தவிர வேறென் என்று தோள்கள் கருதிவிட்டன.'

**கோடியார் கொடுமை உரைக்கும், தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள்.** 155

'தொடியொடு தொல்கவின் வாடிய தோள் :—வளையோடு பழைய இயற்கை யழகையும் இழந்த தோள்கள், கொடியார் :—தம்மைப் பிரிந்த கொடியாரது, கொடுமை உரைக்கும் :—வன்கண்மையைச் சொல்லுகின்றன. அவர் கூட்டுறவால் கிடைத்த அழகை வேண்டுமானுல் அவர் குலேக்கலாம் ; அதற்கு அவர்க்கு உரிமையுண்டென்று வைத்துக் கொள்வோம். இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் சேர்த்து அடித்துக் கொண்டு போன மாதிரி தொன்மை எழிலேயும் அவர் பிரிவு பறிப்பதை எப்படித்தான் சகிக்க இயலும்! அது தவிர, இப்படிப் பிரிந்திருந்தால் என்ன நேரும் என்று அவருக்குத் தெரியாதா ? கவவுக்கை நெகிழினும் ஆற்றமுடியா இயல்பை அவர் அறிந்தவரல்லரா? அங்ஙனம் அறிந்தும் அவருடைய இச்செய்கை வெறுக்கத் தக்கதே என்பதை—அக்கொடியார் கொடுமையை, உரைத்தே தீரவேண்டும் எனத் தோள்கள் நினைத்து விட்டன.'

என்றின்ன பலவாறு தலேவிமேல் வைத்த தாங்கொணு அன்பு காரணமாகத் தலேவியின் உறுப்புநலன் அழிதற்கு ஆற்ருளாகித் தோழி சொல்லினள். தலேவனேப் பிரிந்து உறுப்புநலன் அழியும் தலேவி, கேட்டாள் தோழியின் இவ் உரைகளே. பிரிவுத் துயரால் எவ்வளவுதான் அம்மடக் கொடி வாடியபோதிலும் மற்ருெருத்தி தம் ஆருயிர் நாயகனேக் குறைத்துப் பேசுவதைக் கேட்டுப் பொறுக்க வல்லாளா ? தோழியிடம் பின் வருமாறு பேசினுள்.

**தொடியொடு தோள்நெகிழ நோவல், அவரைக்**
**கொடியர் எனக்கூறல் நொந்து.** 156

'எனக்கல்லவா தெரியும் என் கணவர் அருமை ? பிரிவு பெருந்துன்பம் தந்தபோதினும் என் ஆருயிர் அன்பரைத் தூற்றலாகாது என்ற காரணத்தால் நான் பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனுல் என் வயத்ததாக

வில்லை என் தோள்கள். தொடியோடு தோள்கள் நெகிழு கின்றன. அது கண்டு நீ அவரைக் கொடியார் எனக் கூறு கின்ருய். நீ அவ்வாறு கூறுதற்கு நான் நொந்து வருந்து கின்றேன். அவர் பிரிவு தரும் இன்னலைவிட அவரைக் கொடியார் என நீ கூறும் மொழி எனக்குப் பெரும் துன் பந்தருகின்றது. எனவே, என் இனிய தோழி ! நீ இனி அப்படிச் சொல்லாதே!' என்று இயம்பிய தலைவி தன் மனத் தைப் பார்த்து வழுத்துகின்ருள்.

பாடு பெறுதியோ நெஞ்சே ! கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து. 157

'நெஞ்சே :—ஏ மனமே ! கொடியார்க்கு:—கொடியார் என்று கூறப்படும் அவர்க்கு, என்வாடுதோள் பூசல் உரைத்து :— என்னுடைய மெலியும் தோள்களினுல் உண்டாகும் ஆர்ப் பாட்டத்தை நீ சென்று சொல்லி, பாடு பெறுதியோ :— பெருமையடைய வல்லாயோ ? என் மனமே ! நீ அந்தப் பெருமையை அடைந்துதான் ஆக வேண்டும். இது செய் தல் நின் கடனேயாகும். நான் சும்மா இருந்தாலும் மற்ற வர் விடமாட்டார்போலிருக்கிறது. அவர் தூற்றப்படுவதை நான் பொறேன்; பொறேன். இந்தத் தோளும் பிறவும் பொல்லாதன. அம்மம்மா ! என்ன பாடு படுத்துகின்றன ! மனமாகிய நீயாவது என்னேடு ஒத்துழைக்கலாகாதா ?' எனப் பரிதவித்தாள் உறுப்பு நலன் அழிந்த தலைவி. இவள் நிலை இங்ஙனமாக !

பிரிந்து சென்ற தலைவனுக்குச் சேர்ந்த நாள் இன்ப மும் பிரிவின் துன்பமும் மனத்தை வாட்டுகின்றன. தனி விடுத்துச் சென்ற தன் காதலியின் தனி பொருமையை மனக்கண்ணில் காண்கின்ருன். இவ்வாறு எண்ணமிடு கின்ருன்.

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது,
பைந்தொடிப் பேதை நுதல். 158

' அந்தோ ! என்ன காரியம் செய்தேன் ! என் இன்னுயிர்த் துணைவிக்குப் பெருந்தீங்கல்லவா இழைத்துவிட்டேன்

அவர் நீர்மை மிக நுண்ணியதன்றோ? முயங்கிய :—என்னைப் புல்லிய, கைகளை ஊக்க :—அவள் கைகளை அவளுக்குக் கை நோகுமென்று கருதி யான் சிறிது விலக்க, பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது :—பசிய வளையணிந்த என் பேதையின் நெற்றி உடனே நிறம் மாறிவிட்டது. இதனை அன்று யான் நேரில் கண்டனன் கண்களால். அச்சிறு இடை விலக்குக்கு ஆற்றாத அவள், இப்பிரிவை எவ்வாறு பொறுப்பாள்! அம்மட்டோ!'

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற,
பேதை பெருமழைக் கண். 159

'முயக்கிடை :—சேர்க்கையின் மத்தியில், தண்வளி:—சிறிய காற்றானது, போழ :-சேர்க்கையை இடையே பிழக்க, பேதை பெருமழைக்கண் பசப்புற்ற :—பேதையினது அகன்ற மழைக் கண்கள் பசலை நிறமுற்றன. இப்படி எங்கள் இருவர்க்கிடையே சிறிய காற்று நுழைவதைக்கூடச் சகிக்கலாற்றாத அவள் கண்கள், இன்று எங்கள் இரண்டு பேருக்கும் நடுவில் காடும் மலையும் பிறவும் கிடந்து தடுப்பதை எவ்வாறு பொறுக்கும்? யான் கைகளைச் சிறிது விலக்கியவுடன் நெற்றி பசந்தது; காற்றின் நுழைவால் கண் பசந்தது. கைகளை நீக்கியதால் பசப்படைந்த—தனக்கு அணித்தே யிருக்கும் நெற்றியைக் கண்டு அதன் பசப்பில் தானும் பங்கு கொண்டு வருந்தியது கண்.

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே,
ஒண்ணுதல் செய்தது கண்டு. 160

நெற்றி செய்த பசப்பைக் கண்டு பசந்த கண் இன்னும் வருந்தியது. இப்படி எனது பிரிவறியாக் காதலியின் உறுப்புக்கள் நான் உடனிருந்த நாளிலேயே சிறு சிறு நிகழ்ச்சிகளால் அழிந்ததைக் கண்ட நான், அவைகளின் தன்மையுணராமல் இப்பிரிவைத் தந்தது பிசகான காரியம்; இனி அவளை விரைந்து அணுகுதல் வேண்டும், என முடிவு கட்டுகின்றான் காதற் செல்வன்.

## 17. நெஞ்சொடு கிளத்தல்

நெஞ்சொடு கிளத்தலாவது மனத்திேைடு சொல்வது. காதலன் பிரிவால் துயர் பல பெற்று, உறுப்பு நலன் அழிந்த காதலி, இனிச் செய்வதின்னதென அறியாமல் தன் மனத்தையே நோக்கி வழுத்துகின்ருள். மற்றையரோடு வாதாடுதலைவிட மனத்தொடு போர் செய்தல் எளிதேயன்ருே? மேலும் யாரொடும் சொல்ல முடியாதவற்றையெல்லாம் உளத்தொடு உரைத்தல் கூடுமன்ருே? பிறரிடம் தன் காதல் நோயைப் பன்னிப் பன்னிப் புலம்பிஞல் அவர் எவ்வளவுதான் உயிர்த் தோழர் எனினும் ஒருகால் சலிப்புறவும் செய்வர். இன்ன பிற மனத்தொடு வரைவதில் இலேயன்ருே; எனவே காதல் என்னும் பிறிதெதனுலும் தீர முடியாத நோய்வாய்ப்பட்ட இளந் தலைவி, தனித்திருந்து மனத்தொடு பகர்கின்ருள்.

**நினைத்தொன்று சொல்லாயோ? நெஞ்சே! எனைத்தொன்றும்**
**எவ்வநோய் தீர்க்கும் மருந்து.** 161

'ஏ மனமே! எனது இந்நீங்காப் பிணியைப் போக்கவல்ல ஏதாவதொரு மருந்தை நீ ஆராய்ந்து பார்த்து எனக்குச் சொல்லமாட்டாயா? எனக்குத்தான் அது இன்னதென அறியும் ஆற்றல் இல்லாது போயிற்று; சொல்லுவார் பிறரோ இலர்; நீயாவது சொல்லுதலாகாதா? உனக்கும் சட்டென்று படவில்லையாஞல் நினைத்துப் பார்த்தாவது சொல்! இந்தச் சிறிய உதவி நீ செய்யலாம்; இதை நீ செய்யக் கடமைப்பட்டிருக்கிருய்; செய்துதான் ஆகவேண்டும். ஆஞல் நீ அஞ்சாமல் உரைக்கலாம். நீ சொல்லும் மருந்து

எதுவாக இருந்தாலும், அது எவ்வளவு கசப்பாக இருந்தாலும் நான் விழுங்கித் தொலேக்கத் தயார். காதல் தீயினுல் வேகின்றேன். அந்நெருப்பை அவிக்கும் மருந்தைச் சொல்! மனமே! எங்கே, பார்க்கலாம்' எனச் சொல்லுகின்ருள் தலைவி. என் செய்யும் மனம்! "மந்திரமில்லை வேருேர் மருந்தில்லை மையல் நோய்க்கு" அல்லவா. மையல் நோய் தீர்க்கும் மருந்து ஒன்றுதானே உளது. "அணியிழை தன்னேய்க்குத் தானே மருந்து." அணியிழை நோய்க்கு அவளே மருந்து. அவன் தந்த நோய்க்கு அவனே மருந்து. இம் மையல் என்னும் "தீராநோய் தீர்த்தருள வல்லான்" அந் நோய் செய்த தலைவன் ஒருவனே யன்ருே? அங்ஙனமாக அதற்குப் பிறிது மருந்தை நெஞ்சு கூறுவது எங்ஙனம்? ஒன்றும் தோன்ருது விம்மி விம்மிக் குமுறியது நெஞ்சு. அதனைப் பார்த்து மீண்டும் புகல்கின்ருள் தலைவி.

காதல் அவர்இல ராகநீ நோவது
பேதைமை வாழி !என் நெஞ்சு. 162

'என் நெஞ்சு :—என் மனமே! வாழி :—நீ வாழ்வாயாக! காதல் அவர் இலராக :—நம்மிடத்து அவர் காதல் இல்லாதவராக இருக்க, நீ நோவது :—அவர் வரவு பார்த்து நீ வருந்துவது, பேதைமை :—அறியாமையுடையது. அவர் நம்மிடம் காதல் உடையவராக இருந்தாலன்ருே அவர் வருவார் என எதிர்பார்க்கலாம்; நீ அவர் வருவார் என ஏங்கி நிற்பது வீண். வருபவராயின் இதற்கு முன்னரே வந்திருக்க மாட்டாரோ? இன்னும் வருவர் அவர் என எண்ணி நீ நன்ருக வாழ்ந்து தொலைத்தாயில்லை. அவர் ஒருநாளும் வாரார். தேவையானுல் இனி நாம் அவர் இருக்கும் இடம் நாடிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று, பிரிந்த தலைவனின் வாராமையால் தோன்றிய கடுங்கோபக் கனலைக் கொட்டிய தலைவி, மேலும் சொல்லுவாள்.

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே! பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல் 163

நெஞ்சே! இருந்து உள்ளி பரிதல் என்?:—மனமே!

இங்கே இருந்துகொண்டு அவரை நினைந்து வருத்தப்படுவ தில் என்ன பயன்? பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல்:—நமக்கு இத்துன்பநோய் தந்தவரிடத்து நமக்கு இரங்கி வரும் கருத்து இல்லையே. அவருக்கு அது இல்லாதபோது நீ இங்கிருந்து வருந்துவது பயனற்றது. வீண் காரியத்தில் நீ தலையிடவேண்டாம். ஒன்று விரைந்து அவர்பால்செல்! இன்றேல் இறந்துபடு! இரண்டில் எதையும் செய்யாது இங்கே இருந்து அழுது அழியாதே! நீ அவரிடம் போவாயானால் ஒரு காரியம் அவசியம் நீ செய்தாக வேண்டும். இந்த என் கண்களையும் நீ உடன் கொண்டு போய்விடு. இவைகள் என்னைப் படுத்தும்பாடு கொஞ்ச மன்று.'

**கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவைஎன்னைத்**
**தின்னும் அவர்க்காண லுற்று.** *164*

'மனமே! கண்களையும் நீ உடன்கொண்டு செல்வாயாக! அவரைக் காணவேண்டும், காண வேண்டும் என்று இவைகள் (இந்தக் கண்கள்) என்னைத் தின்னுகின்றன. நாயகனைப் பிரிந்து துயருற்று வாடும் ஓர் பெண் கொடிக்கு எத்துணை தொல்லைகள்! அம்மம்மா! பொறுக்குந்தரத்தின வாக இல்லையே! இப்படி எல்லாமாகச் சேர்ந்து உயிரை வதைத்தால் கேவலம் ஓர் பெண் என்னதான் செய்வாள்! என்பாடு எனக்குத் தெரியும். அவரைக் காட்டு! காட்டு!! என இக்கண்கள் என்னைத் தின்பதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீ இவற்றைக் கொண்டுபோய் விடு! நன்றாக இருப்பாய்! விரைந்து செல்! அவரையணுகி நிலைமையை யுரை! உன்னைத் தவிர வேறு யாரை நான் தூதுபோக்க வல்லேன்? அவர் வன்னெஞ்சர் எனக் கொண்டு என்னை நீ மறுத்துரையாதே!'

**செற்றார் எனக்கை விடலுண்டோ? நெஞ்சேயாம்**
**உற்றால் உறாஅ தவர்.** *165*

'மனமே நாம் விரும்பவும் அவர் நம்மை விரும்பி வாராராகி வெறுத்தார் என நினைந்து, அவரைக் கை விட்டிருக்கும்

ஆற்றல் நமக்கு உண்டோ? அது நம்மிடம் இல்லை யென்பது உறுதி. அங்ஙனமாக இனி நீ போய்த்தான் ஆக வேண்டும். உன் பிடிவாதம் இங்கு பயன்படாது. கோபத்தை விட்டுக் காரியத்தைப் பார்.'

கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்!
போய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு! 166

'நெஞ்சு :—மனமே! கலந்து உணர்த்தும் காதலர்க்கண்டால் :—என் புலவியைக் கலவியாலே நீக்கவல்ல காதலரைக் கண்டால், புலந்து உணராய் :—பொய்யாகவேனும் சிறிது ஊடல்கொண்டு பின் அவரை அடையமாட்டாய்! அத்தகைய நீ, பொய்க்காய்வு காய்தி :—இப்போது அவர் தீயர் எனப் பொய்க் கோபம் கொள்கின்றாய்! எனக்குத் தெரியாதோ உன்னை? ஏன் இந்தப் பாசாங்கு! அவரைக் கண்டால் அப்படி? காணாதபோனால் இப்படி? வேண்டாம் இந்தத் தந்திரங்கள். ஒன்றும் குறைவாராது. நீ போய் அவரை அழை! நான் சொல்லப்போகும் இரண்டில் ஒன்றை நீ செய்துதான் ஆகவேண்டும்.

காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே!
யானோ பொறேன்இவ் இரண்டு. 167

'நல்நெஞ்சே!-நல்ல மனமே! ஒன்று காமம் விடு :—ஒன்று ஆசையை விடு; இன்றேல் நாண்விடு :—நாணத்தை விட்டு விடு. இவ் இரண்டும் யான் பொறேன் :—இவ்விரண்டையும் விடாதிருக்கின்ற நின் செய்கையை யான் பொறுக்கும் வலிமையில்லேன். இரண்டில் ஒன்று செய்தல் நியாயம். ஒன்று அவர்மீதுவைத்த ஆசையை விட்டு விடு. அவரை நினையாதே! துன்பம்இல்லையாகும். இல்லையேல்! நாணத்தை விட்டுவிட்டு உடனே அவரிடம் முறையிட்டுக் கூட்டிவா! அதுவும் முடியாது; இதுவும் செய்யமாட்டேன்; காமம் நாணம் ஆகிய இரண்டையும் இறுகப் பிடித்துக்கொண்டு உன்னைச் சித்திரவதை செய்துகொண்டுதான் இருப்பேன் என்று சொல்லாதே! மனமே! நீ பேதை!'

**பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு !** 168

'என் நெஞ்சு :—என் மனமே! பேதை :—நீ அறிவிலி! பரிந்து அவர் நல்லார் என்று ஏங்கி :—விரும்பி வந்து அவர் நமக்கு அருளமாட்டார் என ஏக்கம் கொண்டு, பிரிந்தவர் பின் செல்வாய் :—பிரிந்துபோன அவர் பின்னே போய்த் திரிந்தலைவாய்! எனவே, உனக்குச் செய்வது தவிர்வது தெரியவில்லை. உண்மை உணரும் ஆற்றல் உனக்கில்லை. நீ அவரை எங்கே தேடியலைகின்றாய் ! இது விந்தையாய் இருக்கின்றதே.'

**உள்ளத்தார் காத லவராக, உள்ளிநீ**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு !** 169

'என் மனமே! காதலவர் உள்ளத்திலே எப்போதும் இருக்க அதாவது உன்னிடத்திலேயே அவர் இடையறாது அமர்ந் திருக்க, இப்போது அவிரைத் தேடி நீ செல்வது எங்கு? யாரிடத்து? நன்று நின் செய்கை! என்ன, ஒன்றும் புரிய வில்லை. எல்லாம் தடுமாற்றமாக இருக்கிறதே' என்று நெஞ்சோடு பல படப் புலம்பிய தலைவி,

**துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா,**
**இன்னும் இழத்தும் கவின்.** 170

என்று நெஞ்சொடு கிளத்தலின் கடைசிப் பாட்டில் கூறி னைகின்றாள். 'கூடாது நீங்கிப் போயினாரை உள்ளத்தே குடிவைத்தேமாக! அதன்பயன் இன்னும் எஞ்சி நிற்கும் சொற்ப அழகு ஏதும் உடம்பிலே இருக்குமானால் அதனையும் இழப்பதைத் தவிர வேறிலது' என உருகுகின்றாள் காதலி. தனது மெல்லிய அழகிய கண்கவரும் கவின் வாடுவதை - அவள் பேரெழில் கக்கும் உறுப்புக்கள் நலனழிவதை அவ ளால் சகிக்கக் கூடவில்லை. அதற்குக் காரணமான காதலன் பிரிவெனும் பிணியைப் போக்கவல்ல மருந்துண்டா என ஆய்ந்தாள். தென்படவில்லை. அவன் கூட்டுறவைத் தவிர

வேறு மருந்துண்டென அவளால் காணமுடியவில்லை. அவனைப் பெற மனத்தைப் பலவாறு தேற்றித் தூதுவிட முனைந்தாள். அதுவோ ஆவதாகவில்லை. நெஞ்சைவிட்டு நீக்குவதும் ஆமாறில்லை. எனவே செய்வதொன்றும் தோற்ருது திகைத்தாள். இனி "நிறையழித" லைத் தவிர என் செயவல்லாள்! பாவம்!

## 18. நிறை அழிதல்

காதலனது பிரிவாற்ருத தலைவி, காம விருப்பம் மிகுதிப்பட மறைபொருளை மறைக்கலாற்ருது, பிறர் அறிய வாய்விட்டுரைத்தல் நிறையழிதல் ஆகும். நெஞ்சொடு கிளந்த தலைவி, காம வேதனை ஏற ஏற வாய்விட்டு நிறையழியத் தொடங்கிவிட்டாள். மறைபொருளை உலகறிய வெளிப்படக் கூறுதல் இழுக்கு என உணர்ந்தாளல்லள் அவள். அந்நங்கையின் நிலைமை அவளை அங்ஙனம் உணர விட்டிலது. தலைவியின் நன்மை தீமைகளில் இடையருது பங்கு கொள்ளும் தோழி, தலைவியின் நிலை கண்டு இரங்கிஞள்; மனம் துடிதுடித்தாள்; நாயகியின் அந்தரங்கம் அம்பலமேறுவதை அவள் சகி விரும்பவில்லை. "உள் வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்பல"மேற உற்ற தோழி எவ்வாறு பொறுப்பாள்? எனவே, தலைவியைத் தகைந்தாள். 'அம்மா? நீ இவ்வாறு ஊரறிய எல்லாவற்றையும் உரைத்தல் முறையன்று; அடக்குக உணர்ச்சியை; பெண்மையின் உயர் தகைமைக்கு இஃது குறையல்லவா?' என்ருள் தோழி 'ஐயோ! தோழி! நான் என்ன செய்வேன்; வேண்டுமென்ரு நான் ஏதும் செய்கிறேன்; என்ஞல் முடியவில்லையே.'

காமக் கணிச்சி உடைக்கும், நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 171

'நிறையென்பது மறைபொருளைப் பிறர் அறியாமல் காக்கும் கதவு என்பது உண்மை. அந்த நிறையென்ற கதவு

என்னிடம் இல்லாமல் இல்லை. அந்தக் கதவை நான் சும்மா கூட மூடி வைக்கவில்லை. நாண் என்ற தாழ்ப்பாளைப் போட்டு நிறையென்ற கதவை நான் மூடி வைத்தேன். அவ்வளவு கெட்டியாக என்னால் மூடி வைக்கப்பெற்ற நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னும் கதவை, (காமக் கணிச்சி யுடைக்கும்) காமமாகிய கோடரி உடைத்தெறி கின்றதே; நான் செய்யக் கிடப்பதென்னே?'

காமம் எனவொன்றோ கண்ணின்று; என்நெஞ்சத்தை
யாமத்தும் ஆளுந் தொழில். 172

"காமம் எனச் சொல்லப்படும் ஒன்றுக்குக் கண்ணில்லை. அருளற்ற அந்தக் காமம் - தாட்சண்யம் இன்னதென்றே அறியாத அந்தக் கொடுங் காமம், என் நெஞ்சத்தை நள்ளிரவிலும் அடக்கி யாண்டு ஏவல் கொள்கின்றது. பேயும் உறங்கும் நடு இரவில்கூட இந்தக் கண்ணற்ற பொல்லாத காமம் என்னை உறங்கவிடாது வேலை வாங்குகின்றதே. இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லித் தொலைப்பது! இந்தக் காமத்துக்கு அந்தோ! நானா ஆளாக வேண்டும்? நல்ல அடிமை அகப்பட்டேன் அதற்கு.'

மறைப்பேன்மன் காமத்தை யானோ; குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 173

"மறைப்பேன்மன் காமத்தை யான் - நான் அதனை வெளித் தோன்றாதிருக்குமாறு மறைத்துத்தான் பார்க்கிறேன். குறிப்பின்றி தும்மல்போல் தோன்றிவிடும் - என் குறிப் பின் வழி நில்லாமல் தும்மலைப்போல் அது வெளிக் கிளம்பி விடுகின்றது. என் கருத்துக்கியைய அக்காமம் அடங்கி மரியாதையாக நடப்பதே கிடையாது. என்னை ஆட்சி செலுத்தி இராப் பகலாக ஏவல் கொள்ளும் அது எனக்கு அடங்கும் என எதிர்பார்ப்பது அவலமேயன்றோ? இத் தகைய காமத்தின் வாய்ப்பட்ட எனக்கு இனி அமைதியும் அடக்கமும் கொண்ட வாழ்வு ஏது?'

நிறையுடையேன் என்பேன்மன் யானோ; என் காமம்
மறைஇறந்து மன்று படும். 174

'என்னை நான் நிறையுடையேன் என்றுதான் சொல்லிக்கொண்டிருப்பேன்; ஆனால் என் காமமானது (மறையிறந்து) நான் மறைத்தலையெல்லாம் கடந்து (மன்றுபடும்) சபையேறிவிடும். ஆஹா! எனக்கும் என் ஆசைக்கும் எவ்வளவு வேறுபாடு! நான் ஒருவருக்கும் தெரிய வேண்டாம் என்றால் என் காமம் தண்டோரா அடித்து விளம்பரப்படுத்துகின்றது. எனக்குள்ளே இருக்கும் ஒன்றே இப்படி எனக்கு முரணாக நடந்தால் மற்றையோரைச் சொல்ல என்ன இருக்கிறது?' என்று பெரிதும் வருந்தினாள் தலைவி. 'நம்மைப் பிரிந்துபோய் நமக்கு இத்துணை துன்பம் தந்து இன்னும் வராமல் மறந்திருந்தாரை நாம் ஏனம்மா நினைந்து நினைந்து உருகுதல் வேண்டும்? சிறிது அவரை மறந்திரு' என்றாள் தோழி. 'சகி! நன்றாக இருக்கிறது உன் கூற்று! முடியாத காரியத்தைச் செய்யச் சொல்கிறாயே!'

> சேற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை, காமநோய்
> உற்றார் அறிவதொன்று அன்று. 175

'நீங்கிச் சென்றார் பின்னே செல்லாதிருத்தல் பெருந்தகைமைதான்; தாங்க முடியாத இன்னலைத் தந்து பிரிந்து போய் தலைவருக்குப் பின்னே பேதை மனத்தை ஓடவிட்டு வாடி யழியா நிறையுடைமையைக் காமப் பிணியென்னும் கடுஞ்சுரங் கொண்டார் அறிவதெப்படி? காமத்தின் வயப்பட்டாரால் அது ஆகாது. அப்பெருந்தகைமை காமநோய் காணாதார்க்கே தகுவது.

> சேற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ;
> என்றேன்னை உற்ற துயர். 176

'பிரிந்து போனவருக்குப் பின்னே போகுமாறு என்னைச் செலுத்துகின்றதே, அடடா! என்னை யடைந்த காம நோய் எத்தகையது! அது கருணையுடையதுதான்!' என்று இழிவு சிறப்பாகக் கூறினாள் தலைவி. 'இந்தப் பொல்லாத காமநோயை, தனியிருக்கும் எனக்குத் துணை வைத்துப் போன அவர் வரட்டும்; ஒருகை பார்த்துவிடுகிறேன். ஒரு பெண்பிள்ளையைத் தனிவிடுத்துச் சென்ற அவரை வெட்கப்

பட அடிக்கிறேன்' என்று எக்களிப்புடன் கூறினாள் காதலி. இவ்வுரை கேட்ட தோழி பகர்ந்தாள்:—'அம்மா! ஏன் இந்த வீண் பேச்சு! அவரைக் கண்டதும் எல்லாம் வேறு விதமாகிவிடும்!' எனக்குத் தெரியாதா உங்கள் வீராப்பெல்லாம்' என்று ஒரு கிண்டல் விரிவுரையை வீசியெறிந்தாள் அவள் இன்னுயிர்த் தோழி. 'ஆம்! சகி! நீ சொல்வதும் உண்மைதான்! என்ன செய்து தொலைப்பது! அந்த மனிதர் என்னதான் செய்துவிட்ட போதிலும் அவரைக் காணும் வரைத்தான் வன்மமெல்லாம். நேரில் கண்டவுடன் எல்லாம் காற்ருய்ப் பறந்துதான் போகிறது; நேரே அவரைக் கண்டுவிட்டால் நமக்கு வெட்கமேயில்லாமல் அவர் செய்ததையெல்லாம் மறந்தேவிடுகிரும்.'

**நாணென ஒன்ரே அறியலம்; காமத்தாற்**
**பேணியார் பெட்ப செயின்.** 177

'நம்மால் விரும்பப்பட்டவர் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவில் நாண் என்று சொல்லக்கூடிய ஒன்று இன்னதென்றே நமக்குத் தெரியவில்லை. பழையன யாவும் மறந்தே போய்விடுகிறது. இதற்கென் செய்வது! அவர் வந்தால் ஐயோ! என்ன பசப்புப் பசப்புகிருர்!'

**பன்மாயக் கள்வன் பணிமொழி அன்ரோநம்**
**பெண்மை உடைக்கும் படை.** 178

'பல மாயங்களும் வல்ல அந்தக் கள்வனுடைய தாழ்மையான வித்தைச் சொற்களல்லவா நமது ஒப்புயர்வில்லாப் பெண் தகைமையை உடைக்கும் படையாக இருக்கின்றது. அந்தப் படையைக்கொண்டு அக்கள்வன் நமது உள்ளத்தை எளிதில் கவர்ந்துவிடுகின்ருன். அப்பணிமொழிப் படை அவனிடம் இருக்கும் வரை நாம் அவனை வெல்லுமாறில்லை. நமது உள்ளத்தை எப்போதும் அவன் கொள்ளைகொண்டே விடுகின்ருன். முன்னைய நிகழ்ச்சி ஒன்று உனக்குத் தெரியுமே, என் உயிரனைய தோழி! ஒரு சிறு காரியம்கூட என்னுலாவதில்லை.'

**புலப்பல் எனச்சென்றேன் ; புல்லினேன் ; நெஞ்சம்**
**கலத்தல் உறுவது கண்டு.** *179*

'பிணக்கம் காட்ட நினைந்து முன் நில்லாமல் சிறிது விலகிச் சென்றேன் ; முடிந்ததா ? இல்லை. நிகழ்ச்சி மாறிவிட்டது. புலக்கக் கருதிய நான் விரைந்து வந்து புல்லினேன்; அணைந்துகொண்டேன். ஏன் ? நெஞ்சத்தைப் பார்த்தேன். அது புலக்கக் கருதவில்லை. அது கலத்தலுறுவதைக் கண்டேன். கலக்கக் கருதும் மனத்தை யுடைய நான் புலக்க நினைந்து யாது பயன் ? அவர் நெஞ்சு அவர்க் காதல் கண்டும் என் நெஞ்சு எனக்காவதில்லை. இன்ன உளம் பெற்ற நான் என்செய வல்லேன். மனத்தின் வழி ஓடுவதைத் தவிர வேறு கதியில்லை.'

**நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ ?**
**புணர்ந்தூடி நிற்பேம் எனல்.** *180*

'நிணம்-கொழுப்பை, தீயில் இட்டன்ன-தீயில் போட்டால் எப்படி உருகுமோ அங்ஙனம் காதலரைக் கண்டதும் உருகு கின்ற, நெஞ்சினார்க்கு - மனத்தை யுடைய மகளிர்க்கு, புணர்ந்து - அவர் நெருங்க, ஊடி நிற்பேம் எனல் உண்டோ - பிணங்கி நிற்பேம் என்ற தன்மை உண் டாகுமோ ? காதலரைக் கண்டவுடன் நெருப்பில் இட்ட கொழுப்புப்போல உருகுகின்ற மனப்பாங்குடைய மங்கை யர்க்கு அவர் சேர்க்கையைத் தவிர்த்து ஊடி நிற்கும் நிலை யேது ? நானே அத்தகையினள் ! நிணந் தீயிலிட்டன்ன நெஞ்சை யுடையவள் !' என்று இன்ன பலவாறு பல வகை யினும் தன் வழி வராது மாறுபட்டுத் துயருறுத்தும் முரட்டு மனத்தை நொந்து காதலி நிறையழிந்தாள்.

## 19. அவர் வயின் விதும்பல்

பிரிவு நிலையடைந்த காதலன் காதலியாகிய இருவரும் ஆசை மிகுதியால் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல் இவ்வதிகாரத்தில் கூறப்படுகிறது. 'அவர்' என்பது அவன், அவள் ஆகிய இருவர்க்கும் பொது. 'விதும்பல்' விரைதல் எனப் பொருள்படும். எனவே, அவர் வயின் விதும்பல் என்ற சொற்றொடர் அவள் அவனைக் காண விரைதல் என்றும் அவன் அவளைக் காண விரைதல் எனவும் பொருள் தந்து நிற்கின்றது. அவர் வயின் விதும்பலுக்கு உரையாசிரியர் பரிமேலழகர் கொண்ட கருத்தும் இதுவே. அவர் வயின் விதும்பலை அவள் கூற்றாகவே கொண்டு அவனைக் காண அவள் விரைதல் எனப் பொருள் செய்து, அவர் என்ற சொல் அவன் என்பதன் மரியாதைப் பன்மையென வேறு சில உரையாளர் கொண்ட முறையை ஆசிரியர் பரிமேலழகர் அழகாக மறுத்திருக்கிறார். பிரிந்த தலைவன், தலைவியாகிய இருவருக்கும் காண வேண்டும் என்ற விருப்பத்தின் வேகத்தைப் பொதுவாக ஆக்குதலே யன்றோ முறை. பாட்டுகள் தலைவன் தலைவி இருவர் கூற்றுக்கும் பொருந்தியனவாகவே காணப்படுகின்றன. முதல் ஏழு பாக்கள் தலைவி கூற்று. பின் மூன்று குறட்கள் தலைவன் பேச்சு.

பிரிந்த நாயகன் வாராமைக்கு வருந்தி உறுப்பு நலன் அழிந்து, நெஞ்சொடு கிளந்து, நிறையழிந்த நாயகி, அவனைக் காணும் ஆசை பொங்கி வழியப் பின்வருமாறு புகல்கின்றாள் :—

**வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற**
**நாள்ஒற்றித் தேய்ந்த விரல். 181**

'அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - காதலர் விட்டகன்ற நாள்களை (குறித்த கணக்கை) தொட்டு எண்ணி எண்ணி விரல் தேய்ந்து போய்விட்டன. வாள் அற்றுக் கண்ணும் புற்கென்ற - (அவர் வரவு பார்த்துப் பார்த்து) ஒளி இழந்து கண்களும் புல்லியவாகி விட்டன.'

இந்நிலையில் நின்ற தலைவியைப் பார்த்துத் தோழி உரைத்தாள்:— 'அம்மா! அவர் சென்ற நாள்முதல் பொழுது விடிந்ததும் நாளைக் குறிப்பதும் ஒரு நாளுக்குப் பலமுறை அவற்றை விரல்கள் தேயத் தொட்டுத் தொட்டு எண்ணுவதும் ஓய்வு ஒழிவு இல்லாமல் வழியைப் பார்த்துப் பார்த்த கண்கள் பூத்துப் போவதுமாகவே இருந்தால் என்ன ஆவது! சிறிதாவது அவரை மறந்திரு!'

இவ்வுரை கேட்ட தலைவி சாற்றுவாள்:—

**இலங்கிழாய்! இன்று மறப்பின்,என் தோள்மேல்**
**கலங்கழியும் காரிகை நீத்து. 182**

'விளங்குகின்ற நகையை யணிந்த தோழி! இன்று நான் காதலரை மறப்பேனுல் மேற்பிறப்பிற்கூட நான் அழகு இழக்க என் தோள்கள் வளை கழலப்பெறும். ஆதலால் அவரை மறக்குமாறு நீ சொல்லாதே. இன்று பிரிந்து போனூர் என்பதற்காக அவரை மறந்து விடுவதா? அவரை மறந்தால் அந்தப் பழி தொடர்ந்து அடுத்த பிறவியினும் பிரிவுத் துயரைத் தரும். எனவே, அவ்வாறு நீ கூறுதே. அவரை மறவாமையினுலேயே நான் இன்னும் சாகாதிருக்கின்றேன்.'

**உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றூர்**
**வரல்நசைஇ இன்னும் உளேன். 183**

'உரன்நசைஇ - வென்றியை விரும்பி, உள்ளம் துணையாகச் சென்றூர் - ஊக்கத்தைச் துணையாகக் கொண்டு போயினூர், வரல் நசைஇ - வருதலை விரும்புதலாலேயே,

இன்னும் உளேன் - நான் இன்னும் உயிர் சுமந்திருக்கின்றேன். அவரை மறந்தால் நான் உயிர் வாழ்வதெங்கே? அவர் வருவார் என நினைந்து நினைந்து உருப்போட்டுக் கொண்டிருத்தலாலேயே இக்கொடிய பிரிவிலும் உயிர் தங்கியிருக்கிறது' என்றுரைத்தாள் வள்ளுவன் பெற்ற பிரிந்த கொடி. கம்பன் ஈன்ற சீதை, பிரிக்கப்பட்ட இராமனைக் காணமுடியும் என்ற நசையினாலேயே உயிர் வாழ்வதாக இராவணனிடம் நவிலும் அழகிய கருத்தமைந்த பின்வரும் பாட்டு இக் குறளொடு பொருந்துவது.

ஊணிலா யாக்கை பேணி
உயிர்புகழ் சூடாது உன்முன்
நாணிலாது இருந்தேன் அல்லேன் ;
நவைஅறு குணங்கள் என்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும், என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய் !

இது நிற்க, 'வரல்நசைஇ இன்னும் உளேன்' என்றுரைத்த மாது பின்னும் பகர்வாள் :—

கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகோடு ஏறுமென் நெஞ்சு. 184

'நீங்கிப் பிரிந்து போயவர் கூடிய காமத்துடன் வரவிருக்கின்றார் என்பதை நினைந்து என் மனமானது வீறு கொண்டு கிளைத்து எழுகின்றது' என்றிவ்வாறு கூறிய தலைவி, ஒருவித உணர்ச்சி கொள்கின்றாள். பிரிவு நீடித்து விட்டதால் இனி அவன் வரவு அணித்தே நிகழவல்லதென நினைக்கின்றாள். இனி அவள் பேச்சு அதற்கேற்ப ஓடுகின்றது.

காண்க!மற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோட் பசப்பு. 185

'என் கண்கள் ஆரும் வகை காதலனைக் காண்பேனாக! அவ்வாறு நான் கண்டபின் எனது மென்மையான தோட் பசப்பு விலகிக் கொள்ளும்.'

வருக!மற் கோண்கன் ஒருநாள் ; பருகுவன்
பைதல்நோய் எல்லாங் கெட. 186

'ஒருநாள் என் காதலன் என் கண்முன் வருவானாக! வந்தால் என்ன செய்வேன் தெரியுமா? அவன் தந்துபோன இத்துன்ப நோய்களெல்லாம் நீங்க இன்ப ரசத்தைக் குடித்தே விடுவேன். ஆனால் இப்போது பெரிய சந்தேகம் வந்துவிட்டது. அவர் வந்துவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். என்ன செய்வது என எனக்குப் புரியவில்லையே.'

புலப்பேன்கோல் புல்லுவேன் கோல்லோ கலப்பேன்கோல்
கண்ணன்ன கேளிர் வரின். 187

'என் கண்ணை ஒத்த காதலர் வந்து விடுவாரானால் இத்துணை நாட்களாக என்னைவிட்டு நீங்கினார் என்று கோபக் குறி காட்டிப் புலவியை மேற் கொள்வேனா? பிரிவினால் வருந்திய நான் புலவியில் நேரத்தைப் போக்காது எனது வாட்டம் தீர அவரைத் தழுவி மகிழ்வேனா? அன்றி, புலவியையும் கலவியையும் சேர்த்து ஓர் கலவை போட்டுக் காரியத்தை யாற்றுவேனா? யாது செய்வதெனத் தெளிந்திலனே' என்றாள் இளங் கொடியாள். அவனைக் காண்டலில் விரைந்து நின்ற காதலி செயல் இதுவாக, அவனைக் காண முந்திய காதலன் போக்கை நோக்கலாம்.

போர் கருதிப் புத்தின்பம் நுகர்ந்த தனிக் காதலியை விடுத்துக் களம்புகுந்த தலைவன், வெற்றிச் சிகரத்தை நெருங்குகின்றான் ; தனி விடுத்த தையலையும் துறந்த இன்பத்தையும் நினைந்து உருகுகின்றான். தான் இனி விரைந்து வீடு சேரவேண்டும் என்பதை மூன்று பாக்களால் மொழிகின்றான்.

வினைகலந்து வென்றீக வேந்தன் ; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 188

'வேந்தன் வினையிற் கலந்து வென்றியை மேவுவானாக ! யாமும் மனைவியைச் சென்று கலந்து மாலைப் பொழுதிற்கு விருந்து வைத்து மகிழ்வோமாக !'

இது பிரிந்த காதலனின் விரைந்த எண்ணம். மன்னன் வெல்ல வேண்டுவது. அடுத்த நிமிடம் நடக்க வேண்டுவது என்ன ! ஓடோடியும் வீடு சேர வேண்டுவது. மனையாளும் தானும் சேர்ந்து மாலைப் பொழுதிற்கு ஓர் இணையற்ற நல்ல பெரிய விருந்து கொடுத்துவிட வேண்டுவது. இவ்விருந்திற்கு இக்காலத்திய ஆரவாரக்காரர்களைப் போலப் பணத்தை வாரி இறைக்க வேண்டிய அவசியமில்லை. அழைப்புக்கூட எவருக்கும் வேண்டுவதில்லை. முக்கிய விருந்தினர் மாலைப் பொழுதாராகலின் அவருடைய அரிய நண்பர்களெல்லாம் அழையாமலே அணுகி அலங்கரித்து விடுவர். எனவே வீடு போந்ததும் சிறிதும் தாமதமின்றி முதலில் செய்யவேண்டிய காரியம் இது என முடிவு செய்தான் வினைவயிற் பிரிந்த போர் வீரன். இனிச் சிறிதும் தாழ்க்காது செல்ல வேண்டும் எனக் கருதுகின்றான் அவன். ஏன் ?

> ஒருநாள் எழுநாள்போல் செலலும்,சேட் சென்றார்
> வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 189

' தூரத்துச் சென்ற கேள்வர் வரும் நாளைக் குறித்து வைத்துக்கொண்டு வருந்தும் காதலியர்க்கு அவர் வாரா ஒவ்வொரு நாளும் பலப்பல நாள் போலத் தோன்றுமல்லவா ? அங்ஙனமாக நான் இத்துணை நாட்கள் கடத்தினால் அவள் நெஞ்சு ஒடிந்து துரும்பாகி இறந்தவள் போலாகிவிடுவாள். பிறகு அவளை யணுகி என் பயன் ?'

> பெறினென்னும் ! பெற்றக்கால் என்னும் ! உறின்என்னும் !
> உள்ளம் உடைந்துக்கக் கால். 190

' அவள் உள்ளமானது என் வாராமை காரணமாக உடைந்து நொறுங்கிய பிறகு என்னைப் பெறக்கூடிய நிலைமையை யடைந்தாலென்ன ? பெற்று விட்டால்தான் அதனால் என்ன பயன் ? அன்றி மெய்யுறக் கலந்தாலும்

அதனுல்தான் என்ன நலன்? எனவே என் காதற் செல்வி மனமுடைந்தழியாமுன் நான் அவளைக் காணுதல் வேண்டும்' என விரைகின்ருன் காதலன். இங்குக் காட்டிய வாற்ருல் காதலி, காதலன் ஆகிய இருவர் கூற்றினும் வைத்து 'அவர் வயின் விதும்பல்' என்ற அதிகாரத்தை அழகுபடச் சித்தரிக்கின்ருர் புலவர் பெருமான். இவ்வதிகாரத்தோடு பிரிவு நிலை முடிவுறுகின்றது.

## 20. குறிப்பு அறிவு உறுத்தல்

இன்பப் பகுதியின் இருபதாம் அதிகாரம் குறிப்பு அறிவு உறுத்தல். குறிப்பு அறிவு உறுத்தல் என்ருல் என்ன ? ஒருவர் குறிப்பை மற்ெருருவருக்குக் காட்டுதல். இது பிரிந்து சென்ற காதலன் திரும்பி வந்த பிறகு நடக்கும் நிகழ்ச்சி. காதலன் வீடுவந்து விட்டான். "பிரிந்தவர் கூடிஞல் பேச வேண்டுமோ ?"

காதலியைப் பிரிந்து சென்று திரும்பிய காதலன், அவன் தவறுதலே அறிவுறுத்துவதுபோல், அவன் வரவால் தோன்றிய மகிழ்ச்சியை மறைத்து ஒரு மாதிரியாகக் கோணிநின்ற நங்கையைப் புகழ்ந்து பாராட்டுகின்ருன். 'நீ எவ்வளவு மறைத்தாலும் பயனில்லே; உன் கண்கள் உள்ளத்தை உள்ளவாறு உரைக்கின்றன.'

**கரப்பினும் கையிகந்து ஒல்லா,நின் உண்கண்**
**உரைக்கல் உறுவதோன்று உண்டு.** *191*

' கரப்பினும் - மறைத்தாலும், கையிகந்து-அதனேக் கடந்து, ஒல்லா - கட்டுப்படாமல், நின் உண்கண் - நினது மையுண்ட கண்கள், உரைக்கலுறுவது - சொல்லி நிற்பது, ஒன்று உண்டு - ஒரு ரகசியம் இருக்கிறது.' அதை ஏன் மறைக்கப் பார்க்கின்ருய் ? கண்களேக் கட்டுப்படுத்த வலிமையிருந்தால் உன் முயற்சி பயன்படும். அஃதில்லாதபோது வீண் முயற்சி எற்றுக்கு ? என அவள் கண் மூலம் வெளிப்பட்ட காதலேப் பலபடப் பாராட்டிக் கொண்டிருக்கும்போது ஆருயிர்த் தோழி தோன்றுகின்ருள். தோழியிடம் காதலி நலத்தைப் புனேந்து நான்கு குறள்களில் கூறுகின்ருன் தலேவன்.

**கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்**
**பேண்நிறைந்த நீர்மை பேரிது.** 192

'கண்நிறைந்த - என் கண்களில் நிறைந்திருக்கின்ற, காரிகை - அழகையுடைய, காம்பு ஏர் தோள் - மூங்கிலை நிகர்த்த தோள்கள் வாய்ந்த, பேதைக்கு - நின் பெண்ணுக்கு, பெண் நிறைந்த நீர்மை - பெண்மக்களிடம் பெருகிய தன்மை 'பெரிது - அளவு கடந்ததாக இருக்கின்றது'.

**மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதொன்று உண்டு.** 193

'கோக்கப் பெற்ற மணியினுள் கிடந்து வெளித்தோன்றும் நூலைப்போல இம்மங்கையின் அழகினுள் கிடந்து புறத்தே விளங்கித் தோன்றும் ஒரு அரிய பொருள் இருக்கிறது.'

**முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
**நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு.** 194

'அரும்பினது குவிதலுக்குள் இருக்கின்ற நறுமணம்போல, இப்பேதையின் மூடிய சிரிப்பினுள் ஏதோ ஒன்று இருக்கின்றது.'

**செறிதொடி செய்திறந்த கள்ளம், உறுதுயர்**
**தீர்க்கும் மருந்தொன்று உடைத்து.** 195

'செறிதொடி - நிறைந்த வளையல்களையுடைய இவள், செய்து-என்னிடம் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பனை செய்து, இறந்த கள்ளம் - என்னை மறைத்துப்போன வஞ்சகத்தில், உறுதுயர் - எனதுமிக்க துயரத்தை, தீர்க்கும் - போக்குகின்ற, மருந்து ஒன்று உடைத்து - மருந்து இருக்கின்றது.

என்று இவ்வாறு தலைவியின் காதலைப் புகழ்ந்து தலைவன் தோழியிடம் கூறினுக, தலைவி தோழியின் காதுக்குள் ஏதேதோ முணுமுணுத்தாள். அவை மூன்று பாக்களாக வருகின்றன.

**பெரிதாற்றிப் பேட்பக் கலத்தல், அரிதாற்றி**
**அன்பின்மை சூழ்வது உடைத்து.** 196

'காதலர், பிரிவுத் துன்பத்தைச் சாலவும் மாற்றி மகிழ்ச்சி பொங்கக் கலப்பதானது, பிரிவுத் துயரை அருமையாகப் பொறுத்துக்கொண்டு அவரது அன்பில்லாமையை நினைக்கச் செய்யும் ஒன்ருக இருக்கின்றது. பிரிவு எவ்வளவு கொடிது என்பதை அவர் உணர்ந்ததாகவே தெரியவில்லை. அத்துயரத்தின் எல்லையை நாம் நன்கு கண்டு விட்டோம். அவர்தம் பசப்பு வார்த்தைகளைப் பார்த்தால் இன்னும் எங்கே விரைவில் பிரிந்து போவதற்குத்தான் அடிப்போடுகிருரோ என்று தோன்றுகிறது. இனி நம்மால் பிரிவைத் தாங்க முடியாது. பிரிவை முன்னர்க் கூட்டியே அறிவுறுத்தும் கருவிகள் நம்மிடம் இருக்கின்றன; அவர் பிரியும் முன்னே அக்கருவிகள் நமக்குக் காட்டிவிடும்.'

**தண்ணந் துறைவன் தணந்தமை, நம்மினும்**
**முன்னம் உணர்ந்த வளை.** 197

'குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையையுடைய தலைவன் நம்மைவிட்டு நீங்கப் போகின்ருன் என்பதை நமக்கு முன்னே வளைகள் உணர்ந்து விடுகின்றன. அவை எப்படியோ அறிந்துகொண்டு கைகளைவிட்டு வீழ்ந்து விடுகின்றன.'

**நெருநற்றுச் சென்ருர்எங் காதலர்; யாமும்**
**எழுநாளேம் மேனி பசந்து.** 198

'எம் காதலர் சென்றது நேற்றுத்தான்; என்ருலும் நாம் இளைத்து உடம்பு நிறம்மாறி ஏழுநாட்கள் ஆகிவிட்டன. அவர் பிரிவதற்கு ஆறு நாட்கள் முந்தியே பசலை வந்து பிரிவைச் சொல்லி விடுகின்றது. இவ்வளவு அறியும் அளவு கருவிகள் இருக்க நாம் ஏன் ஏமாற வேண்டும். இதுவரை நடந்தது போகட்டும். இனி நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும்' என்றிவ்வாறு தோழியிடம் கற்பனை உச்சியில் நின்று கூறினுள் காதலி.

தலைவன் பார்வை உடனே தோழியை நோக்கியது. 'என்ன, ஏதேதோ சொல்லுகின்ருளே காதுக்குள்' என்ற

கேள்வியோடு எழும் தலைவனின் குறும்புப் பார்வைக்குத் தோழி பதிலிறுக்கின்றாள்.

**தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதாண்டு அவள்செய் தது. 199**

'தொடிநோக்கி - வளையல்களைப் பார்த்து, மென்தோளும் நோக்கி - மெல்லிய தன் தோள்களையும் பார்த்து, அடி நோக்கி - தன் கால்களைப் பார்த்து, ஆண்டு அவள் செய் தது அஃது - அங்கு அவள் செய்தது அவ்வளவே. பிரிவு நேர்ந்தால் கழலக் கூடிய வளையல்களை ஒரு பார்வை பார்த் தாள்; அதனால் மெலியக்கூடிய தோள்களை இன்னொரு பார்வை பார்த்தாள்; அங்ஙனம் நிகழாமல் உடன் செல்ல நீ தயாராக இருக்கவேண்டும் என்று தன் அடிகளைப் பார்த் தாள்; அவள் செய்தது இக் குறிப்புக்களே' என்றாள் தோழி.

இனிக் கவலை வேண்டாம்; நான் பிரியப்போவதே இல்லை என்ற குறிப்பைத் தோழியிடம் அறிவுறுத்துகின் றான் தலைவன்.

**பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப; கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு. 200**

'காமநோயை, தம் தோழியரிடத்துக்கூட வாயால் சொல்லாது கண்ணினால் சொல்லிக் குறிப்பாகத் தம் அடியினை இரந்து கெஞ்சுதல், பெண்மைமேலும் சிறந்த ஓர் பெண்மையையுடையது என்று இயம்புவர் மேலோர்' என்று காதலன் வாயிலாகக் குறளாசிரியர் கூறிக் குறிப்பு அறிவு உறுத்தல் அதிகாரத்தை முடிக்கின்றார்.

காதலர் ஒன்று கூடினர். குறிப்புக்கள் வெளிப்பட்டன; இனிக் கூடி மகிழ்தலே இயற்கையன்றோ? எனவே அதற்கு விரைகின்றனர். அடுத்த அதிகாரம் புணர்ச்சி விதும்பல் என்பது.

## 21. புணர்ச்சி விதும்பல்

இருபத்தோராம் அதிகாரம் "புணர்ச்சி விதும்பல்" என்பது. புணர்ச்சி விரும்பலாவது சேர்க்கைக்கு அவசரப் படுதல். பன்னாட்கள் பிரிவு வாழ்க்கை நடாத்திய காதலனும் காதலியும் ஒன்று சேர்ந்தவுடன் கூடிக் கலப்பதற்கு ஒருவரோடொருவர் போட்டி போட்டு முந்துகின்றனர்.

'பிரிந்து போன தவறு, தலைவனுடையதாதலாலும் இயற்கையாலும் தலைவன் விரைதல் சரிதான்; அவன் இல்லாக் காலத்து அவன்மீது எண்ணற்ற குறைகள் சொல்லிக் கொண்டிருந்த நீ கொஞ்சமும் அவனோடு பிணங்காது பந்தயம் போட்டு அவனைத் தழுவ ஓடும் அழகு நன்று நன்று!' எனத் தலைவியைக் கேலி செய்யத் தொடங்கி விட்டாள் தோழி. அந்தத் தோழியிடம் காமத்தின் சிறப்பைப்பற்றி ஒரு பெரிய விரிவுரை நிகழ்த்துகின்றாள் தலைவி. அவ்வுரைக்குப் பத்தில் ஏழு பாட்டுக்களைக் கொடுக்கின்றார் ஆசிரியர் வள்ளுவனார். முதல் ஏழு குறள்களும் தலைவியின் கூற்று. தன்னை நகையாடிய தோழியிடம் தலைவி கூறுகின்றாள்.

'ஏண்டி இப்படிச் சிரிக்கின்றாய்; உனக்குத் தெரியாதா காமத்தின் பெருமை?'

**உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில்; காமத்திற்கு உண்டு.** *201*

'நினைத்த மாத்திரத்தில் ஒரு களிப்பு; கண்டவுடனே ஒரு ஆனந்தம்; கள்ளுக்குக்கூட இக்குணம் இல்லை; காமத்திற்கே இச் சிறப்பியல்பு உண்டு. கள் என்று மனத்தில்

நினைத்தால், அல்லது கள்ளைக் கண்ணால் கண்டால் மகிழ்ச்சி ஏற்படாது; அதைக் குடித்தால்தான் ஆரவாரமெல்லாம். காமம் அப்படியில்லை; நினைத்தாலும் களிப்பு; காமத்திற் குரிய பொருளைக் கண்ணாற் கண்டாலும் பெருமகிழ்ச்சி.'

**தினைத்துணையும் ஊடாமை வேண்டும்; பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்.** 202

'காமம் பனையளவு நிறைந்து பெருகிவிடுமானால் தினையளவுகூட ஊடல் செய்யமுடியாது.'

**பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக்**
**காணாது அமையல கண்.** 203

'நமது விருப்பத்தை மதியாது அவன் விரும்பியவாறே அவன் பிரிந்து சென்றானாலும் கணவனைக் காணவில்லையானால் என் கண்கள் அமைதி பெறமாட்டேன் என்கின்றன. அந்தக் கண்களை வைத்துக்கொண்டு நான் எப்படி ஊடுவது?'

**ஊடற்கண் சென்றேன்மன் தோழி! அதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.** 204

'தோழி! நான் என்ன செய்வேன்? ஊட வேண்டுமென்றே நினைத்துச் சென்றேன்; அவனைக் கண்டவுடன் அவ் விஷயமே மறந்து போய்விட்டது; என் மனமானது கூடலையே நாடிவிட்டது; மனத்திற்கு மாறுபடும் வலிமை எனக்கில்லையே; என் செய்வது?'

**எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல், கொண்கன்**
**பழிகாணேன் கண்ட இடத்து.** 205

'மை எழுதும்போது அஞ்சனந் தீட்டும் கோலைக் கண்கள் எப்படிக் காணமாட்டாவோ அவ்வாறே கொழுநனைக்கண்டபொழுது அவன் தவறுகளைக் காண எனக்குத் தெரியவில்லை.'

**காணுங்கால் காணேன் தவறாய; காணாக்கால்**
**காணேன் தவறல் லவை.** 206

' அவனைக் காணுங்காலத்து அவனிடம் தவறுடைய எதை யும் என்னால் காண முடியவில்லை; காணாதபோது அவன் மாட்டுத் தவறல்லாததாக ஒன்றைக் கூடக் கண்டேனல் லன். கணவன் செய்யும் தவறுகளெல்லாம் அவன் இல்லாக் காலத்தேதான் மலை மலையாகத் தோன்றுகின்றன; அவன் எதிர்ப்பட்டு விடுவானானால் எல்லாம் எங்கோ ஓடி மறைந்து விடுகின்றன.

வள்ளுவர் தந்த இன்பக் காதலியின் இக் கொள்கை யைப் பெரிதும் ஒத்தது ஒரு கலிங்கத்துப் பரணிப்பாட்டு.

பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்தபொழுது நினைந்துஅவரைக்
காணும்பொழுது மறந்திருப்பீர் !
கனப்பொற் கபாடந் திறமினோ?

காணும்பொழுதைய நிகழ்ச்சி வேறு; காணாக்கால் தோன் றும் மனப்போக்குப் பிறிது என்பதைக் காட்டும் இதனோடு ஒருவாறு ஒத்த கருத்துள்ள 'முத்தொள்ளாயிரம்' என்ற பழைய நூலில் உள்ள ஒரு உயர்ந்த வெண்பா இதோடு சேர்த்துப் பார்க்கத்தக்கது.

மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன்-கண்டக்கால்
பூணாகம் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோடு உடன்பிறந்த நான்.

நிற்க, கடைசியாகச் சொல்லுகின்றாள் தோழியிடம் தலைவி.

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தேன் புலந்து. 207

'நம்மை இழுத்துக் கொண்டு போவதையறிந்தும் ஓடுகின்ற நீரிலே பாய்கின்றவரைப் போல, புலவி செய்தால் அது பொய்த்துவிடும் என்பதை அறிந்திருந்தும் புலப்பதால் என்ன பயன்? அதனாலேயே வீணாக ஊடுவதை விடுத்து நான் கூடுவதில் விரைந்தேன் என்று கூறிமுடிக்கின்றாள் பெண் கொடி.

இவ்வுரை கேட்ட தோழி தலைவனிடம் சொல்லு கின்ருள் .—

**இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்குக்**
**கள்ளற்றே ; கள்வநின் மார்பு.** 208

'இகழத் தக்க துன்பத்தைச் செய்தாலும் உண்டு களிக் கின்றவர்க்குக் கள்ளின்மேல் செல்லும் விருப்பம் போல நின் மார்பின் கவர்ச்சி யிருந்ததாயது நங்கைக்கு; ஏ! கள்வ! உன்மீது கொண்ட வேட்கை மிகுதியால் எல்லா வற்றையும் மறந்து விடுகிருள் ; ஊடல் செய்ய வேண்டியி திருக்க அதனை விடுத்துக் கூடலில் விதும்புகின்ருள் எம் தலைவி' என்று தோழி சொல்லத் தலைவன் சாற்றுகின்ருன் :–

'ஆம் ! ஆ !! எனக்குத் தெரியாதா, அவள் நீர்மை ?'

**மலரினும் மெல்லிது காமம் ; சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்.** 209

'தொட்டால் - முகர்ந்தால் வாடிவிடும் பூவைவிடக் காமம் மென்மை வாய்ந்தது; அதன் நுண்ணிய தன்மையை அறிந்து நடப்பவர் உலகத்துச் சிலரே ; அச்சிலருள் ஒருத் தியே எனக்கினிய தலைவி.'

**கண்ணில் துனித்தே கலங்கினுள், புல்லுதல்**
**என்னினும் தான்விதுப்பு உற்று.** 210

'முன்னொரு சமயம் கண்ணினுல் மட்டும் கொஞ்சம் ஊட லைக் காட்டிவிட்டு அணைவதற்கு என்னைவிட வேகமாக முனைந்து அவள் கொண்ட கலக்கம் எனக்கல்லவா தெரி யும் ! அன்னநீர்மையள் புலவியை மறப்பதும் புணர்ச்சிக்கு விதும்பலும் புதுமையன்று'என்று புகலும் தலைவன், அவள் விதும்பல் காட்டும் முகத்தால் தன் விதும்பலையும் குறித்துக் காட்டுகின்ருன்.

## 22. நெஞ்சொடு புலத்தல்

நெஞ்சொடு புலத்தல் இன்பப்பாலின் இருபத்திரண்டாம் அதிகாரம். நெஞ்சொடு புலத்தலாவது, மனத்தோடு சண்டையிடுவது. தவறு செய்த காதலனோடு பிணங்க வேண்டியதிருக்க அவ்வாறு செய்யாது புலவியை மறந்து கலவிக்கு விரைந்த தன் நெஞ்சுடனே காதலி ஊடுகிருள். 'நீ அவரோடு ஊட மறுக்கிருய் ; அது தகாதது என்பதற்காக நான் உன்னோடு ஊடுகிறேன்' என்று உளத்தோடு பூசலிடுகின்ருள் தலைவி. இவ்வதிகாரத்தில் பத்துப் பாக்களும் காதலி கூற்ருக அமைதலே பொருத்தமுடைத்து. ஆசிரியர் பரிமேலழகர் கடைசி இரண்டு குறள்களைக் காதலன் கூற்ருக ஆக்குகின்ருர். அவற்றையும் காதலி வாயிலாக வைப்பதற்கு அவை இடந்தருகின்றன. பிரிவு நிகழ்த்திய தலைமகன் நெஞ்சொடு புலக்க வேண்டுவதில்லை. எனவே எல்லாவற்றையும் தலைமகள் பேச்சாகவே கொள்ளல் சிறப்புடைத்து. நெஞ்சைப் பார்த்துப் பேசுகின்ருள் தலைவி :

**அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே**
**நீஎமக் காகா தது.** 211

'என் மனமே ! அவருடைய மனம் அவர் வழி நிற்கின்றது. அதை நீ அறிந்திருக்கிருய் ; அறிந்திருந்தும் நீ நான் சொல்கின்றபடி நடவாதது ஏன் ? அந்த மனிதருடைய மனம் அவர் சொல்வதைக் கேட்கின்றது ; நீயோ என்னோடு ஒத்துழையாமை செய்கின்ருய் !'

உறுஅத வர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறுஅரேனச் சேறிஎன் நெஞ்சு. 212

'என் நெஞ்சே! அன்பு பொருந்தாத அவரைக் கண்டும், அவரிடம் சென்றால் கோபிக்கமாட்டார் எனக் கருதி அவர் பால் செல்கின்றாய்? இது பெரியதோர் அறியாமையுடையது. நீ அவர்மாட்டுச் செல்வதை மட்டும் அவர் தடுக்காதிருந்தால் போதுமா? அவருக்கோ நம்மிடம் அன்பு இல்லை; அன்பு இருந்தால் இத்துணை காலமும் பிரிந்திருப்பாரா? இவ் உண்மையை உணராமல் விழுந்து விழுந்து அவரை நோக்கி ஓடும் நின் அறிவின்மையை என்னென்பது.'

கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ; நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 213

'உளமே! உன் விருப்பப்படி நீ அவர் பின்னே போதல், கெட்டவர்க்கு நண்பர் இல்லையென்ற உலகியல்பையே காட்டுகின்றது. அவரால் பிரிவுத்துயர் தரப்பட்டு மெலிந்து போனேன் நான்; மெலிவு பெற்றவரிடம் நட்புரிமை கொள்வார் யாரிருக்கப் போகின்றார்? அதனாலேயே என் மனமாகிய நீ கூட என் விருப்பத்தை மதியாமல் அவர் பின்னே சென்றலைகின்றாய்.

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார்; நெஞ்சே!
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 214

'மனமே! புலவியை உண்டாக்கிப் பிறகாவது நீ கலக்கக் கருதமாட்டாய்! இனி அந்த மாதிரிக் காரியத்தை உன்னோடு யாரால் ஆராய முடியும்? இனி நான் உன் வம்புக்கே வரவில்லை; நீ நினைத்தபடி எது வேண்டுமானாலும் செய். சொன்னால் கேட்பவர்க்குத் தானே சொலல முடியும்.' இவ்வாறாகத் தன் நெஞ்சிடம் தலைவி சொல்லிக் கொண்டிருக்கும் போது, தோழி தலைவாசல் வழிச் சென்றாள். உடனே அவள் காது கேட்கத் தன் நெஞ்சொடு புலந்து வாய்விட்டு

மொழிகின்றாள் தலைவி. எஞ்சிய ஆறு பாக்களும் தலைவி வாயினின்றும் புறப்பட்டுத் தோழி காதுகளைத் துளைக்கின்றன.

**பெருஅமை அஞ்சும் ; பெறிற்பிரி வஞ்சும்**
**அருஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.** 215

'காதலரைப் பெறவில்லையானால் அதற்காக அஞ்சும்; பெற்றுவிட்டால் நேரக்கூடிய பிரிவை நினைந்து அஞ்சும்; ஆதலால் என் நெஞ்சு எப்போதும் நீங்காத துயரத்தையுடையதாகவே இருக்கின்றது.'

**தனியே இருந்து நினைத்தக்கால், என்னைத்**
**தினிய இருந்ததுஎன் நெஞ்சு.** 216

'தனியே இருந்து அவர் பிரிவை நான் நினைக்குங்கால் என்னைத் தின்பது போன்ற துன்பம் செய்வதற்காகவே என் மனம் என்னோடு இருந்தது. புலக்கவேண்டிய சமயத்தில் அது செய்வதற்கல்ல.'

**நாணும் மறந்தேன் ; அவர்மறக் கல்லாஎன்**
**மாணா மடநெஞ்சிற் பட்டு.** 217

'என்னை மறந்த அவரை மறக்கமாட்டாத என்னுடைய மாண்பு இல்லாத அறியாமை நிரம்பிய நெஞ்சுக்கு ஆட்பட்டு, சிறந்த பெண் தகைமையான நாணம் என்பதைக் கூட நான் மறந்து விட்டேன். எல்லாவற்றிற்கும் காரணம் மனமே. நெஞ்சுக்கு அறிவு இருக்குமானால் அவர் வந்தவுடன் அவர் தவறுதலை அறிவுறுத்திப் புலவியை மேற்கொள்ளுமல்லவா? அதற்கு முற்றிலும் மாறாகப் புலத்தலை மறந்து கலத்தற்கு விதும்புமா ?'

**எள்ளின் இளிவாமென்று எண்ணி அவர்திறம்**
**உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.** 218

'உயிர்மேற் காதலையுடைய நெஞ்சானது, அவர் நம்மை இகழ்ந்து பிரிந்து சென்றாரேனும் நாமும் அவரை இகழ்வேமாயின் அது நமக்கே குறைவெனக் கருதி அவர் திறமையே நினையா நின்றது.'

**துன்பத்திற் கியாரே துணையாவார்? தாமுடைய**
**நெஞ்சம் துணையல் வழி.** 219

'ஒருவர்க்கு இடுக்கண் வந்த காலத்து அத்துயர் துடைக்க எல்லாவற்றிற்கும் மேலாக அவர்க்கு உரிமை பூண்ட நெஞ்சமே துணையாக இருந்து உதவி செய்யாவிட்டால் வேறு யார்தான் அத் துன்பம் பொறுக்கத் துணை செய்யப் போகின்றார்? நிச்சயமாக ஒருவரும் இருக்கமாட்டார்.'

**தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய**
**நெஞ்சம் தமரல் வழி.** 220

'தமக்கே உரித்தான நெஞ்சம் ஒருவர்க்கு உறவாக-தமதாக இல்லாதபோது அயலார் தமக்காகாமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. என்னோடு பிறந்து வளர்ந்த நெஞ்சே எனக்கு மாறாக இருக்கின்றது. இது என் சிறுமையையே காட்டுகின்றது.' என்றிவ்வாறாக புலவாது காதலனைக் கலக்க விரைந்த நெஞ்சோடு புலக்கின்றாள் காதலி.

## 23. புலவி

இருபத்து மூன்றும் அதிகாரம் புலவி என்பது. புலவி யாவது ஊடல். புலவியின் சிறப்பு இவ் அதிகாரத்தில் நன்கு வலியுறுத்தப்படுகின்றது. முதல் இரண்டு குறள்கள் தோழியின் கூற்று. தோழி தலைவியிடம் கூறுகின்றாள்.

புல்லா திராஅப் புலத்தை ; அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 221

'அம்மா ! உன் கையிருப்பை இன்று செவ்வையாகக் காட்டி விடல் வேண்டும் ; தெரிகிறதா ? மடமடவென்று போய்த் தழுவி விடலாகாது ; புல்லாமல் இன்றிரவு புலவியை மேற் கொள்வாயாக ! அதனால் அந்தப் பிரிவுத்துயர் நல்கிய மனி தர் அநுபவிக்கும் துன்ப நோயைப் பார்த்துக் கொஞ்சம் விளையாட்டுச் செய்யலாம்' என்றுரைத்த தோழி பின்னும் பகர்கின்றாள். ஒருகால் புலவியை நீட்டித்துவிட்டால் ஆபத்தல்லவா? விளையாட்டு விபரீதமாக ஆகக் கூடாதே என்று நினைத்தாள் தோழி. மற்றொரு குறள் தோழி வாயி னின்றும் தோன்றுகின்றது.

உப்பமைந் தற்றால் புலவி ; அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 222

'புலவி என்பது என்ன தெரியுமா ? கூர்மையாகக் கவனித் துக்கொள். புலவி 'உப்பு'க்குச் சமம். சமையல் செய்வ தில் உப்புக் கலப்பு எவ்வளவு சுவை தருகிறதென்பது உனக்குத் தெரியும். உப்பு இன்றேல் எல்லாம் சப்பென்று

தான் இருக்கும். சாப்பாடு ருசியாக இருப்பதற்கு உப்பு எவ்வளவு முக்கியமோ அதுபோலக் கலவி இனிப்பதற்குப் புலவி இன்றியமையாதது. ஆனால் உப்பைப் போலப் புலவியும் ஒரு அளவுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். உப்புக் கொஞ்சம் கூடினால் சாப்பாடு எப்படியிருக்கும்? புலவி அளவுக்குமேல் நீட்டித்தாலும் கலவி கசப்பாகவே இருக்கும். எனவே புலவியாகிய உப்பைக் கணக்காகப் போட்டுக் கலவியாகிய உணவைச் சுவையுடையதாக்கு. உப்புப் போட மறந்து விடாதே; அதிகமாகப் போட்டும் கெடுத்துவிடாதே' என்று மிக அழகான உதாரணத்தோடு தலைவிக்குப் புத்திமதி புகல்கின்றார் தோழியாக இருந்து புலவர் பெருமான். தோழியின் பேச்சைக் கடைப்பிடித்து வெற்றி பெறுகின்றாள் தலைவி. தலைவியைப் புலவி நீக்கிக் கூடிக் கலக்கும் தலைவன், தலைவியின் புலவி அழகைப் புகழ்ந்து மகிழ்கின்றான் எட்டுப் பாக்களில்.

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால்; தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்.** 223

'தம்மோடு ஊடிய மகளிரை அவர்தம் புலவி போக்கித் தழுவாது விடுதல், ஏற்கனவே துன்பப்பட்டோரை மேலும் துன்ப நோய்க்கு ஆளாக்கியதாகும்; ஆதலால் உன் புலவிக்குப் பயந்து உன்னை விடப்போவதில்லை. மேலும்,

**ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதலரிந் தற்று.** 224

'ஊடிய மாதரை உணரச் செய்து கூடாதொழிதல், நீர்பெறாமல் இயல்பாகவே வாடிக்கிடக்கின்ற கொடியை அடியோடு அறுத்துத் தள்ளுவது போன்ற செயல் அல்லவா? வாடிய வள்ளியை வேரறுப்பவன் நான் அல்லன்; வாடிய கொடிக்கு நீர் பாய்ச்சி அதனைத் தளிர்க்கச் செய்யாமல் நான் விடப்போவதில்லை.'

**நலத்தகை நல்லவர்க் கேளர்; புலத்தகை**
**பூவன்ன கண்ணார் அகத்து.** 225

'மலரை யொத்த கண்ணேயுடைய காதலியார் மாட்டு நிகழும் புலவியானது, நலம் வாய்ந்த நாயகர்கட்கு ஓர் அழகாக அமைகின்றது. அவ் வழகை நான் பெறுவது என் பாக்கியமே.'

**துனியும் புலவியும் இல்லாயில் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று.** 226

'துனி, புலவி என்ற இரண்டும் இல்லையானுல் காமம் நுகர்தல், கனியையும் கருக்காயையும் உண்பது போன்றதே.' துனி என்பது சிறிது பெரிய சண்டை; புலவி என்பது சிறிய சண்டை. இவ்விரண்டும் வேண்டும். இன்றேல் காமம் சுவைதராது. எப்படி? கனியைப் போலவும் கருக்காயைப் போலவும். இங்குக் கனியென்பது அளவுக்குமேல் பழுத்த கனி; நிரம்பப் பழுத்துக் கொழ கொழத்து விடுமானுல் அக்கனி சுவையாக இராது. துனியில்லாத காமம் அம் முதிர்ந்த கனியோடொக்கும். கருக்காய் என்பது இளம் பிஞ்சுக்காய்; புலவி இல்லாத இன்பம் கருக்காய் தின்பதற்கு நேரானது.

**ஊடலில் உண்டாங்கோர் துன்பம்; புணர்வது**
**நீடுவது அன்றுகோல் என்று.** 227

'ஊடல் நிகழ்த்துவதில் ஒரேயொரு துன்பந்தான் இருககிறது. புணர்வது நீட்டிக்குமா இல்லையா என்பதைப் பொறுத்து ஊடல் இருத்தல் வேண்டும்.' இராப்போதில் புணர்ச்சிக்குத் தேவையான காலத்தை ஒதுக்கி வைத்து விட்டு எஞ்சிய காலத்தைத்தான் ஊடலுக்கு நல்க வேண்டும என்பது இக் குறட் கருத்து. அது சரியாகச் செய்யப்படா விட்டால் ஊடல் துன்பத்தைத்தான் தரும். "ஊடுக மன்னே ஒளியிழை யாமிரப்ப, நீடுக மன்னே இரா." என்ற திருக்குறள் இன்பப்பாலின் கடைசி அதிகாரத்திலுள்ள செய்யுள் கருத்து இக் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது.

**நோதல் எவன்மற்று; நொந்தாரேன் றஃதறியும்**
**காதலர் இல்லா வழி.** 228

'நம் செய்கையால் நமது காதற் கிழத்தியாகிய இவர் மனம் நொந்து புலக்கின்ருர் என்ற அஃதைத் தெரிந்துகொள்ளும்

அன்பிற்குரிய கணவர் இல்லையானால் அத்தகைய காதலரைப் பெறாத காதலி நோவதால் எவ்விதப் பயனும் இல்லை. நம் விஷயம் அப்படியில்லை. நீ நன்றாக நொந்து கொள்ளலாம்; நின் நோவுக்குரிய காரணத்தை நான் அறிகின்றேன்.'

நீரும் நிழலது இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 229

'நீர் இனிமை யுடையதுதான். எவ்விடத்து? அந்நீர் நல்ல நிழலிலே தேங்கிக்கிடந்தால்; நிழலால் சூழப்பட்ட நீர் குளிர்ச்சி பெற்றுப் பருகுவோர்க்குச் சுவையையூட்டும். அதே நீர் வெயிலால் காயப்பட்டதாகின் வெம்மையைத் தான் தரும். அதுபோலவே புலவியும். புலவி இனிமைக்கு ஊற்று. யாருக்கு? கருத்தொருமித்து ஒருவரையொருவர் விரும்பும் காதலாகிய பேரன்பு பூண்டார்க்கு.'

ஊடல் உணங்க விடுவாரோடு என்னெஞ்சங்
கூடுவேம் என்ப தவா. 230

'ஊடல் காரணமாக நான் வாடுமாறு விடுகின்ற காதலியோடு என் நெஞ்சம் கூடுவோம் என நினைப்பது அவாவினாலேயே. அவா என்பது ஆசை.'

என்னுடைய ஆசை மட்டுமல்ல; என்னோடு பிணங்கும் புலவிக்குள்ளே கிடக்கும் காதலியின் ஆசையையும் உணர்வதாலேயே என் நெஞ்சம் கலக்கக் கருதுகின்றது என்று கூறிப் புலவியின் சிறப்பைப் பலபட விரித்துரைத்துப் புலவி நீக்கிக் காதலியைக் கலந்து மகிழ்கின்றான் காதலன்.

## 24. புலவி நுணுக்கம்

இன்பப்பாலின் இருபத்து நான்காம் அதிகாரம் புலவி நுணுக்கம். சென்ற அதிகாரம் புலவி. இந்த அதிகாரம் அதன் நுணுக்கம். அவ் அதிகாரம் புலவியைப் பற்றிப் பொதுவாகக் கூறியது. இங்குப் புலவியின் நுணுக்கம், அதாவது புலவியின் நுட்பமான தன்மை புலப்படுகிறது. பள்ளியில் தலைவனோடு கூடியிருக்கும் தலைவி நுண்ணிய சில காரணங்களைக் கற்பித்துக் கொண்டு ஊடல் நிகழ்த்துவது பற்றி ஈண்டுக் கூறப்படுகின்றது. புலவி நுணுக்கத்தை மிகவும் நுணுகித் திறம்பட ஆராய்ந்திருக்கின்றார் ஆசிரியர் வள்ளுவனார்.

முதல் இரண்டு பாக்கள் தலைவி கூற்று. முதல் பாட்டுத் தலைவி தலைவனை நோக்கிக் கூறுவது; இரண்டாவது தலைவி தோழியிடம் சொல்வது. பின்வரும் எட்டுக் குறள்களும் தலைவன் கூற்று. அவை தலைவன் தோழியிடம் தலைவி புலவிக்குக் கொண்ட நுணுக்கத்தை விரித்துரைப்பன.

நுணுகிப் புலக்கும் தலைவி தலைவனிடம் சாற்றுகின்றாள். தலைவன் வெளியே சென்று வீடு திரும்பினான். அவனோடு அமளியில் இருக்கின்றாள் தலைவி. காதலி வாயினின்றும் புறப்படுகின்றன பின்வரும் குறள்.

**பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர்;**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.** *231*

'பரத்த - பரத்தமையுடையாய், பெண்ணியலார் எல்லாரும் - பெண்ணியல்பினையுடைய அனைவரும், கண்ணில் -அவர்கள்

கண்களினுல், பொதுஉண்பர் - பொதுவாக நின் அழகைப் பருகுவர், நின் மார்பு நண்ணேன் - ஆதலால் அவரனைவரும் குடித்த எச்சிலாகிய நின் மார்பை நான் அணையேன்" என்று இயம்புகின்ருள். பரத்தன் என்பது பரத்தமையின் ஆண்பால். அவன் வெளியே சென்றிருந்தபோது எதிர்ப் பட்ட பெண்கள் கண்களால் பார்த்திருப்பார்களாம்! அதனுல் காதலன் மாசு படுத்தப்பட்டு விட்டாஞம்! அதற் காகக் காதலனை அணுகமாட்டாளாம்! புலவிக்குக் கற்பித்த நுணுக்கம் அருமையாக இருக்கிறதல்லவா?

இனித் தோழியிடம் சொல்கிருள் பின்வருமாறு அக் காதலி.

**ஊடி யிருந்தேமாத் தும்மினுர்; யாந்தம்மை**
**நீடுவாழ் கேன்பாக் கறிந்து.** 232

'நாம் அவரோடு ஊடியிருந்தோம்; அவர் என்ன செய்தார் தெரியுமோ? பலே ஆள்! உடனே ஒரு தும்மல் தும்மினுர். ஏன்? என் வாயைக்கிளறத்தான். புலந்து வாய் பேசாது ஒரு பக்கமாகத் திரும்பிக்கொண்டிருந்த நான், அவர் தும் மியவுடன் தும்மியவர்க்குக் கூறும் ஆறுதல் மரபுப்படி அவரைப் பார்த்து "நீடு வாழ்க" என்று கூறுவேன் என்பது அவர் கருத்து. என்ன ஜாலம்?'

இவ் அதிகாரத்தில் எஞ்சிய எட்டுக் குறள்களும் தம் மனத்திற்குத் தோன்றியவாறு எதையாவது கற்பனை செய்துகொண்டு புலக்கும் காதலியின் செயலை அவர் தம் தோழியிடம் தலைவன் சாற்றுவது.

**கோட்டுப்பூச் சூடினும் காயும்; ஒருத்தியைக்**
**காட்டிய சூடினீர் என்று.** 233

'வளையமாகத் தொடுத்து அப் பூமாலையை அவள் கூந்த லில் நான் அணிந்தாலும் என்னைக் கோபித்துக் கொள் கிருள்; நும்மால் காதலிக்கப்பட்ட மற்ருெருத்திக்கு என்னை அலங்காரப்படுத்திக் காட்டி, இது காரணமாக அவள் தயவைப் பெறத்தான் இப்படிச் செய்கின்றீர் என்கிருள்.'

**யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்;**
**யாரினும் யாரினும் என்று.** 234

யாரினும் காதலுடையேம் என்று நான் சொன்னேன். அவ்வளவு தான்; ஊடிவிட்டாள். 'ஆ! யாரினும்! யாரினுமா!!' என்று கேட்டுக் கண் சிவந்துவிட்டாள். நான் சொன்ன கருத்து வேறு; அவள் கொண்ட கருத்து மற்றொன்று. உலகத்திலுள்ள காதலர் எல்லாருள்ளும் நம் இருவர் காதல் சிறப்புடையது என்று நான் சொன்னேன். யாரினும் என்பதை அவள் தவறாக எடுத்துக்கொண்டு, 'யாரினும் என்றால் உமக்கிருக்கும் காதலுக்குரியார் எல்லாருள்ளும் என்பதல்லவா பொருள். அப்படிப் பலர் உமக்கு இருக்கின்றனரா' என்று ஒரே அமர்க்களமாக்கிவிட்டாள்; உன் அருமைத் தலைவியின் செயல் அழகு! அழகு!!'

**இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர்கொண் டனள்.** 235

'இந்தப் பிறப்பில் உன்னைப் பிரியவே மாட்டேன் என்று காதல் மிகுதியால் கழறினேன். அவ்வளவில் கண் நிறைய நீரைப் பெருக்கிவிட்டாள். இம்மைப் பிறப்பில் பிரியமாட்டேன் என்றால் வரும் பிறவிகளில் என்ன என்று கண்களால் கேட்டுக்கொண்டே அழுகின்றாள்.'

**உள்ளினேன் என்றேன்; மற் றென்ம றந்தீர் என்றென்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்.** 236

'உன்னை நினைத்தேன் என்றேன்; என் கருத்தென்ன; பிரிந்த காலத்து உன் நினைவே எப்போதும் என்பது. 'நினைந்தீரா? மறந்தல்லவா நினைக்க வேண்டும்; அப்படியானால் ஒரு சமயம் என்னை மறந்திருந்தீர்; பிறகு நினைந்தீர் என்று ஏற்படுகிறது; நன்றாக இருக்கிறது உங்காதல்' என்று கூறி என்னைப் புல்ல வந்தவள் புல்லாது புலவியை மேற்கொண்டு விட்டாள்.'

**வழுத்தினாள் தும்மினேன் ஆக; அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று.** 237

'தும்மல் வந்தது; தும்மினேன்; முறைப்படி முதலில் வாழ்த்தினாள். வாழ்த்திய அவள் உடனே மறித்து, உம்மால் காதலிக்கப்பட்ட மகளிருள் யாரோ உம்மை நினைக்கின்றார்; அதனால்தான் தும்முகிறீர் என அழுகின்றாள்.'

தும்முச் செறுப்ப அழுதாள்; நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 238

'ஒரு சமயம் எனக்குத் தும்மல் வந்தது; அதனை அடக்கினேன்; காரணம் தும்மினால் யாரோ உம்மை நினைப்பதால் தும்முகிறீர் என்று அவள் சண்டை பிடிப்பாள் என்ற பயமே. அப்போதும் அவள் விட்டபாடில்லை. 'ஓ! என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்; தும்மல் வருவதை அடக்குகின்றீர்? யாரோ உம்மை நினைக்கின்றார்; அதனால் தோன்றும் தும்மலை அடக்கி மறைக்கின்றீர்' என்றியம்பி ஊடி நிற்கின்றாள்.'

தன்னை உணர்த்தினும் காயும்; பிறர்க்கும்நீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 239

'இவ்வாறு காரணமின்றி அவள் மனத்திற்குத் தோன்றியபடி கற்பித்து அவள் ஊடி நிற்பது கண்டு, அவளைப் பணிந்து புலவி தீர்ப்பதற்கு நான் கெஞ்சினாலும் அப்பொழுதும் உம்மோடு எந்த மகளிர் பிணங்கினாலும் இப்படித்தானே அவரையும் கும்பிட்டு விழுவீர்; இது நும் இயற்கை என்று சொல்லி வெகுள்கின்றாள்.'

நினைத்திருந்து நோக்கினும் காயும்; அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. 240

'என்றால் ஒரு வழியிலும் தப்பமுடியவில்லை, எல்லாம் சங்கடமாகவே இருக்கிறதே; இதற்கு என்ன செய்வது என்று நினைத்து வாளா இருந்து, அவள் செய்கைகளின் விந்தையைக் கருதி அவளைக் கூர்ந்து நோக்கினேன். அப்பொழுது என்ன சொன்னாள், தெரியுமா?'

'என் அவயவங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து ஆராய்ச்சி செய்கிறீர்போல் காணப்படுகிறது; உம்மால் விரும்பப்படும்

பிற காதலியர்க்குள்ளே யாருடைய அங்கங்களுக்குப் பொருத்தம் என்று பார்க்கிறீரா? என் கண்ணும் மூக்கும் முகமும் அப்படியெல்லாம் அவர்களுக்குச் சமமாகவா இருக்கப் போகிறது? இந்தக் கள்ளப் பார்வையெல்லாம் வேண்டாம், என்று வாயில் வந்தபடி ஏதேதோ இயம்பிக் கோபிக்கின்றாள்.'

என்றால் இதற்கொரு முடிவே காணமுடியவில்லை என்று சொல்லிப் புலவி நுணுக்கத்தை நுணுகி நுணுகி நுணுக்கத்தினும் நுணுக்கமாக ஆராய்கின்றான் வள்ளுவர் தந்த இன்பக் காதலன்.

## 25. ஊடல் உவகை

வள்ளுவர் தந்த இன்பப்பாலின் இருபத்தைந்தாம் அதிகாரம் - காமத்துப்பாலின் கடைசி அதிகாரம் - வள்ளுவர் குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுள்ளும் இறுதி அதிகாரம் 'ஊடல் உவகை' என்பது. ஊடல் உவகை யாவது, ஊடலால் கூடல் இன்பம் சிறத்தல் கண்டு மகிழ்ச்சி பெறுதல். இவ் உவகை காதலன் காதலி இருவர் மாட்டும் நிலைபெறுகின்றது. ஊடலுவகைப்பாக்கள் அவ் இருவர் வாயினின்றும் போதருகின்றன.

தோழி கேட்கின்றாள் தலைவியிடம், ஒரு காரணமுமின்றி ஏன் ஊடுகின்றாய் என்று. அதற்கு விடை யிறுக்கின்றாள் தலைவி.

**இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர்அளிக்கு மாறு.** *241*

'அவரிடத்துத் தவறில்லைதான்; ஆனாலும், அவர் எம்மிடம் காட்டுகின்ற கருணையைப் பெருக்கெடுத் தோடச் செய்ய வல்லது ஊடல்.'

**ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி**
**வாடினும் பாடு பெறும்.** *242*

'ஊடலில் உண்டாகா நின்ற சிறிய துன்பத்தால் காதலர் காட்டும் கருணை வாட்டமடைந்தாலும் அது பெருமையையே நல்கும். ஊடலால் தோன்றுவது சிறிய துனியே. அதுவும் நிலைத்து நில்லாது. அதனால் அவர் அளிக்கு வாட்டம் இல்லை; ஒருகால் சிறிது வாட்டம் காணிலும்

அதன் முடிவு பெருமையையே தருகின்றது.! என்று சொல்லிய தலைவி மேலும் கூறுகின்றாள்.

**புலத்தலில் புத்தேள்நாடு உண்டோ? நிலத்தொடு**
**நீரியைந் தன்னார் அகத்து.** 243

'நிலத்தொடு நீர் கலந்ததைப்போல ஒற்றுமையுடைய காதலரோடு புலப்பதிற் பெறுகின்ற இன்பத்தைப் போன்ற இன்பத்தை நாம் தேவலோகத்திலும் பெறப்போவதில்லை. முரட்டுக் காதலனைப் பெற்ற காதலியே புத்தேள் நாட்டின் பத்தை நாடி ஓட வேண்டும். புலவி நீக்கிக் கலந்து நல் லின்பம் நல்கும் நாயகனைப் பெற்ற என்னை ஒத்தவர்க்குப் புலவியே புத்தேள் நாட்டின்பத்தினும் மேம்பட்டது.'

**புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்**
**உள்ளம் உடைக்கும் படை.** 244

'புலவிமேற் சென்ற என் உள்ளத்தை உடைத்துத் தள்ளும் படைக்கலம், காதலரைப் புல்லிக் கொண்டு பின்னர் விடா மைக்குக் காரணமாகிய புலவியினுள்ளே இருக்கின்றது.' என்றின்னவாறு ஊடலை உவந்தாள் தலைவியாக, பாக்கி யுள்ள ஆறு குறள்களில் தலைவன் தன்னுள்ளே ஊடலை உவக்கின்றான்.

**தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்**
**அகறலின் ஆங்கொன்று உடைத்து.** 245

'ஆடவர் தம்மிடம் தவறு இலரானாலும் தவறுடையவர் போல அவரால் விரும்பப்படும் மகளிரால் ஊடப்பட்டு அவர் தோள்கள் விலகப் பெறுதலில் ஏதோ சொல்ல முடி யாத ஓர் இன்பம் இருக்கின்றது; எனவே புலவியே கல வியை இனிக்கச் செய்கிறது.'

**உணலினும் உண்டதுஅறல் இனிது; காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.** 246

'உண்பதைவிட உண்டது செறிப்பதே இன்பந் தருவது; அதுபோல் காமம் நுகர்வதிலும் இன்பம் தருவது ஊடலே.' இக் கூற்றில் பேருண்மை இருக்கிறது; இது ஒரு பெரிய

தத்துவத்தை விளக்கி நிற்கின்றது. உண்டது அற்றுப் போவதற்குமுன் மேலும் மேலும் போட்டுக் கொண்டிருப்பது உடம்பைப் பிணிப் பிண்ட மாக்குவதாகும். உண்பது இன்பம் தருவதுதான்; எப்பொழுது? முன் உண்டது செறித்த பிறகுதான். உணவு சுவையாக இருப்பதற்காக ஜீரணம் ஆகாதவன் உண்ணக் கூடாது. எனவே உண்டது அறுவதிலேயே இன்பத்தைக் காண்பான் அறிஞன். மேலும் நன்ருக உண்பதற்குக் காரணமாக இருப்பது உண்பதறுதல். அது போல, கலவி பெருகுதற்குக் காரணமாவது புலவி. எனவே, காமம் புணர்தலின் ஊடல் இனிதாகின்றது.

**ஊடலில் தோற்றவர் வென்ருர்; அதுமன்னும்**
**கூடலில் காணப் படும்.** 247

'காமம் நுகர்தற்குரிய இருவருள் எவர் ஊடலில் தோற்ருரோ, அவரே வெற்றி பெற்றவர்; அதனைக் கூடலில் தெரிந்து கொண்டு விடலாம்.'

**ஊடிப் பெறுகுவங் கொல்லோ? நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு.** 248

'இவள் நெற்றி வெயர்க்கு மாறு இவளோடு கலந்து பெற்ற இன்பத்தை, இவள் இன்னுமொருமுறை ஊடிநிற்க யாம் பெற மாட்டோமா?'

**ஊடுக மன்னோ ஒளியிழை; யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா.** 249

'ஒளிமிக்க அணியணிந்த எனக்கினிய இவள் இன்னும் ஒருகால் ஊடுவாளாக! இவளைக் கெஞ்சிக் கெஞ்சி யாம் இரப்பதற்காக, இவ் இரவு விரைந்து விடிந்துவிடாது நீடுவதாக.'

**ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்.** 250

'காமத்திற்கு இன்பம் தருவது ஊடல். அவ் ஊடலை இன்பமாக முடிப்பது எது? கூடிமுயங்கல். கூடிமுயங்கப் பெற்

ருல் ஒழிய ஊடல் இன்பம் தராது. ஊடல் இன்பந்தருவது தான் ; எந்நிலையில்? கூடிமுயங்கப் பெறுமாஞல்.'

இவ்வாறு காதலியோடு கலத்தலில் தோன்றும் இன்பத்தையும் அதற்குக் காரணமாக அமைந்த புலத்தலையும் கண்டு கண்டு உருகி ஊடலை உவக்கின்ருன் காதலன்.

வள்ளுவர் பெற்ற காதற் செல்வி, நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக் காதலனுக்குக் கலவியும் புலவியும் மாறி மாறி அளித்து அவனைக் களிப்புறுத்தித் தானும் களிப்புற்று வாழ்கின்ருள்.

வள்ளுவர் பெற்ற காதற் செல்வன், அவள் நலத்தைப் புணர்ந்து புணர்ந்து பாராட்டி,

**ஊடுக மன்னே ஒளியிழை; யாம்இரப்ப**
**நீடுக மன்னே இரா.**

என்று தன் காதலியையும் இரவையும் இரந்து இரந்து அவளையும் இன்பக் கடலாட்டித் தானும் அக்கடலுள் கிடந்து திளைக்கின்ருன்.

**ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்.**

என்பது வள்ளுவரின் காமத்துப்பாலின் கடைசிப் பாட்டு—வள்ளுவர் குறளிலேயே இறுதிப்பா—ஈடில்லாத இன்பப்பா. தமிழ்க் காதலர்க்கு இதுவே வள்ளுவர் தந்த இன்பம்.

———

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# முதல் குறிப்பு அகராதி


அசையியற்கு உண்டு 24
அணங்குகொல் 15
அரிதரோ தேற்றம் 57
அரிதாற்றி 60
அலந்தாரை 132
அலர் எழ 51
அலர் நாண 53
அவர் தந்தார் 72
அவர் நெஞ்சு அவர்க் காதல் 127
அழல் போலும் மாலைக்கு 95
அளித்தஞ்சல் 57
அறிகிலார் எல்லாரும் 49
அறிதோறு அறியாமை 31
அறுவாய் நிறைந்த 36
அனிச்சப் பூ 36
அனிச்சமும் 37
இம்மைப் பிறப்பில் 137
இமைப்பிற் கரப்பாக்கு 43
இருந்துள்ளி 103
இரு நோக்கு 21
இல்லை தவறவர்க்கு 140
இலங் கிழாய் 114
இளித்தக்க இன்னு 126
இன் கண் உடைத்தவர் 57
இன்பம் கடல் 64
இன்னுது இனனில் 59
இனி அன்ன நின்னெடு 128
உடம்பொடு உயிரிடை 39
உண்டார் கண் 11
உணலினும் உண்டது 141
உப்பமைந் தற்றல் 138

| | |
|---|---|
| உய்த்த லறிந்து | 125 |
| உரன் நசைஇ | 114 |
| உவக்காணங் | 74 |
| உவந்து உறைவர் | 43 |
| உழந்துழந்து | 70 |
| உள்ளக் களித்தலும் | 123 |
| உள்ளத்தார் | 106 |
| உள்ளம் போன்று | 65 |
| உள்ளினும் தீரா | 82 |
| உள்ளினேன் என்றேன் | 137 |
| உள்ளுவன்மன் யான் உரை | 74 |
| உள்ளுவன் மன்யான்மற | 41 |
| உறாஅதவர்க்கண்ட | 128 |
| உறாஅதவர் போல் | 24 |
| உறாஅதோ | 52 |
| உறாஅர்க்கு | 81 |
| உறுதோறு | 29 |
| ஊடல் உணங்க | 134 |
| ஊடல் உணர்தல் | 30 |
| ஊடலில் உண்டாங்கோர் | 133 |
| ஊடலில் தோற்றவர் | 142 |
| ஊடலில் தோன்றும் | 140 |
| ஊடற்கண் சென்றேன் | 124 |
| ஊடிப் பெறுகுவம் | 142 |
| ஊடியவரை | 132 |
| ஊடி யிருந்தேமா | 136 |
| ஊடுக மன்னோ | 143 |
| ஊடுதல் காமத்துக்கு | 143 |
| ஊரவர் கௌவை | 53 |
| எழுதுங்கால் கோல்காணா | 124 |
| எள்ளின் இளிவாம் | 129 |
| எனைத்து நினைப்பினும் | 85 |
| எனைத்தொன்று | 83 |
| ஏதிலார் போல | 25 |

ஒண்ணுதற்கோ 18
ஒருதலையான் இன்னாது 79
ஒருநாள் எழுநாள் 117
ஓ ஓ இனிதே 69
ஓம்பின் அமைந்தார் 58
கடலன்ன காமம் 48
கடா அக் களிற்றின் 17
கண் களவு 21
கண்டது மன்னும் 52
கண்டார் உயிர் உண்ணும் 16
கண்டு கேட்டு 26
கண்ணில் துனித்தே 126
கண்ணிறைந்த 120
கண்ணின் பசப்போ 101
கண்ணும் கொளச்சேறி 104
கண்ணுள்ளார் காதல் 42
கண்ணுள்ளின் போகார் 41
கண்ணொடு கண்ணிணை 25
கண்தாம் கலுழ்வது 68
கதுமென 69
கயலுண் கண் 88
கரத்தலும் 61
கரப்பினும் 119
கருமணியில் பாவாய் 39
கலந்து உணர்த்தும் 105
கவ்வையால் 52
களித்தொறும் 52
கனவினால் உண்டாகும் 89
காண்கமற் கொண்கனை 115
காணிற் குவளை 35
காணுங்கால் காணேன் 124
காதலர் இல்வழி 93
காதலர் தூதொடு 88
காதல் அவர் இலர் 103

காமக் கடல் 63
காமக்கடும்புனல் உய்க்கும் 46
காமக் கடும் புனல் நீந்தி 64
காமக் கணிச்சி 108
காமம் உழந்து 46
காமம் என ஒன்றே 109
காமம் விடு ஒன்றே 105
காமமும் நாணும் 62
காலை அரும்பி 95
காலைக்குச் செய்த 94
குறிக்கொண்டு 22
கூடிய காமம் 115
கூற்றமோ 17
கெட்டார்க்கு நட்டாரில் 128
கொடியார் கொடுமை உரைக்கும் 99
கொடியார் கொடுமையில் 65
கொடும் புருவம் 17
கோட்டுப் பூ 136
சாயலும் நாணும் 73
சிறுமை நமக் கொழிய 97
செல்லாமை உண்டேல் 56
செற்றவர் பின் சேறல் 110
செற்றார் எனக்கை 104
செற்றார் பின் 110
செருஅச் சிறு 24
செறி தொடி செய்திறந்த 120
சஞ்சம் தமரல்லர் 130
தண்ணந் துறைவன் 121
தணந்தமை சால 98
தம்மில் இருந்து 29
தவறிலர் ஆயினும் 141
தந் நெஞ்சத்து எம்மை 84
தன்னை உணர்த்தினும் 138
தனியே இருந்து 129

தாம் வீழ்வார் தம் 78
தாம் வீழ்வார் மென் 28
தாம் வேண்டி 54
தினைத் துணையும் 124
துஞ்சுங்கால் 90
துப்பின் எவனாவர் 63
தும்முச் செறுப்ப 138
துறைவன் துறந்தமை 58
துன்பத்திற்கு யாரே 130
துன்னாத் துறந்தாரை 106
துனியும் புலவியும் 133
தெரிந்துணரா 68
தொடலைக் குறுந்தொடி 47
தொடி நோக்கி 122
தொடி யொடு 99
தொடிற் சுடின் 59
நகைஇயார் 80
நயந்தவர்க்கு 72
நயந்தவர் நல்காமை 98
நலத்தகை 132
நன்னீரை வாழி 33
நனவினால் கண்ட தூஉம் 89
நனவினால் நம் நீத்தார் 91
நனவினால் நல்காக் கொடியார் 90
நனவினால் நல்காதவரை 88
நனவினால் நல்காரை 91
நனவென ஒன்றில்லை 89
நாங்காதல் கொண்டார் 79
நாணும் மறந்தேன் 129
நாணென ஒன்றோ 111
நாணொடு நல்லாண்மை 46
நிணந் தீயில் 112
நிறை யரியர் 48
நிறை உடையேன் 109

| | |
|---|---|
| நினைத்திருந்து நோக்கினும் | 138 |
| நினைத்தொன்று | 102 |
| நினைப்பவர் போன்று | 84 |
| நீங்கில் தெறூஉம் | 29 |
| நீரும் நிழலது | 134 |
| நெஞ்சத்தார் | 42 |
| நெய்யால் | 53 |
| நெருநற்று | 121 |
| நோக்கினள் நோக்கி | 22 |
| நோக்கினள் நோக்கெதிர் | 15 |
| நோதல் எவன் மற்று | 133 |
| நோனு உடம்பும் | 46 |
| பசக்க மற் | 75 |
| பசந்தாள் இவள் | 75 |
| பசப்பெனப் பேர் பெறுதல் | 76 |
| படலாற்ரு | 69 |
| பண்டறியேன் | 16 |
| பணை நீங்கி | 98 |
| பதி மருண்டு | 95 |
| பரிந்தவர் நல்கார் | 106 |
| பருவரலும் பைதலும் | 80 |
| பன்மாயக் கள்வன் | 111 |
| பனி அரும்பி | 93 |
| பாடு பெறுதியோ | 100 |
| பாலொடு தேன் | 39 |
| பிணிக்கு மருந்து | 28 |
| பிணை ஏர் | 18 |
| பிரிவுரைக்கும் வன்கண்ணர் | 58 |
| புல்லாதிரா | 131 |
| புல்லிக் கிடந்தேன் | 74 |
| புல்லி விடா | 141 |
| புலத்தலில் | 141 |
| புலப்பல் எனச் சென்றேன் | 112 |
| புலப்பேன் கொல் | 116 |

| | |
|---|---|
| புன் கண்ணை | 93 |
| பெண் இயலார் | 135 |
| பெண்ணினுல் பெண்மை | 122 |
| பெயல் ஆற்ரு | 69 |
| பெரிது ஆற்றி | 120 |
| பெரு அமை அஞ்சும் | 129 |
| பெறினென்னும் | 117 |
| பேணுது பெட்டார் | 70 |
| பேணுது பெட்பவே | 124 |
| பொருள் மாலை | 95 |
| மடலூர்தல் | 48 |
| மணியில் திகழ்தரு | 120 |
| மதியும் மடந்தை | 36 |
| மலர் அன்ன கண்ணுள் அருமை | 51 |
| மலர் அன்ன கண்ணுள் முகம் | 37 |
| மலர் காணின் | 34 |
| மலரினும் மெல்லிது | 126 |
| மற்றி யான் என்னுளேன் | 85 |
| மறப்பின் எவனுவன் | 85 |
| மறைப்பேன் மன் காமத்தை | 109 |
| மறைப்பேன் மன் யான் | 61 |
| மறை பெறல் | 71 |
| மன்னுயிர் எல்லாம் | 65 |
| மாதர் முகம்போல் | 36 |
| மாலை நோய் செய்தல் | 94 |
| மாலையோ அல்லை | 93 |
| முகை மொக்குள் | 120 |
| முயக் கிடை | 101 |
| முயங்கி யகைகளை | 100 |
| முறிமேனி | 34 |
| யாம் கண்ணிற் | 49 |
| யாமும் உளேங் கொல் | 84 |
| யாரினும் காதலம் | 137 |
| யானேக்குங் காலை | 22 |

| | |
|---|---|
| வருகமற் கொண்கன் | 116 |
| வழுத்தினாள் தும்மினேன் | 137 |
| வாராக்கால் துஞ்சா | 70 |
| வாழ்தல் உயிர்க்கன்னள் | 41 |
| வாழ்வார்க்கு வானம் | 78 |
| வாளற்றுப் புற்கென்ற | 114 |
| விடாஅது சென்றாரை | 86 |
| விளக்கற்றம் | 74 |
| விளியும் என் இன்னுயிர் | 86 |
| வினை கலந்து வென்றீக | 116 |
| வீழ்வாரின் இன்சொல் | 80 |
| வீழப் படுவார் | 79 |
| வீழுநர் வீழ | 78 |
| வீழும் இருவர்க்கு | 30 |
| வேட்ட பொழுதின் | 29 |


UNIVERSITY EXTENSION LIB...
14 AUG 1960
MADU...